# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 32 வெள்ளிக்கிழமை (16.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 232


# பாதுகாப்பு வலயக் காணிகள் மக்களுக்கு இனிக் கிடையாது!

## வேறு இடங்களில் காணி வழங்கப்படும் என்கிறது அரசு

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ள மக்களுக்குச் சொந்தமான காணிகள் உள்ளன என்று காணி உறுதிப்பத்திரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டாலும் கூட, நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு அக்காணிகள் மக்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா.

அவர்களுக்கு வேறு இடங்களில் காணிகளைத்தான் வழங்கும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு வலயங்களும் இராணுவ முகாம்களும் நீக்கப்படாமல் அவ்வாறே இருக்கவேண்டும் என்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றன என்று அடையாளம் காணப்படும் இடங்களில் மேலும் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டின் பாதுகாப்புக்கே முதலாவது இடமும் இரண்டாவது இடமும் மூன்றாவது இடமும் வழங்கப்படும். ஒரு நாட்டின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட வேண்டியது கட்டாயம். அமெரிக்கா கூட அந்நாட்டின் பாதுகாப்புக்காக கொரியாவில் பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைத்துள்ளது.

நாட்டில் தற்போது இருக்கின்ற பாதுகாப்பு வலயங்களும் இராணுவ முகாம்களும் அவ்வாறே (24 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியைக் கொலை செய்ய முயன்ற கேணல் தொடர்ந்து விசாரணையில்

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதி மற்றும் அவரது உறவினர்களை கொலை செய்ய முயற்சித்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவ கேணல் உட்பட இரு சந்தேக நபர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

குறித்த சந்தேக நபர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் கட்டுப்பாட்டில் வைத்து (24 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்த தகவல் அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 16

நாட்டிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் ஒருபோதும் நீக்கப்படமாட்டாது, அத்துடன் அப்பகுதியில் உள்ள மக்களின் காணிகளும் வழங்கப்படமாட்டது, என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்து நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை.

- இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்த நேற்றிரவு பி.பி.சி. தமிழோசைக்குத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுக் கூறிய கருத்து தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவிடம் பி.பி.சி. செய்தியாளர் கேட்டபோதே அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் பி.பி.சி.க்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தென்னிலங்கையில் மக்கள் எவ்வாறு வாழ்கின்றார்களோ அவ்வாறே வடக்கிலும் தமிழ் மக்கள் வாழவேண்டும் என்று ஜனாதிபதியிடம் நான் (24 ஆம் பக்கம் பார்க்க)

## இந்து சமுத்திரத்தின் நீர் மட்டம் உயர்வால் இலங்கைக்கு ஆபத்து!

கொழும்பு, ஜூலை 16

இந்து சமுத்திரத்தின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக இலங்கை உட்பட்ட இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் தாழ்நிலக் கரையோரங்களின் பல மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவர் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

கொலராடோ பல்கலைக்கழகத்தின் வெய்குயிங் ஹன் என்பவர் தலைமையிலான ஆய்வாளர்கள், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர். (24 ஆம் பக்கம் பார்க்க)

## அரச வங்கிப் பணம் 30 இலட்சம் ரூபா களுவாஞ்சிக்குடியில் நேற்றுக் கொள்ளை

கொழும்பு, ஜூலை 16

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் நேற்று பிற்பகல் அரச வங்கிகளுக்கு மற்றுமொரு அரச வங்கியிலிருந்து அதிகாரிகளினால் எடுத்துச் செல்லப்பட்ட ரூபா 30 லட்சம் பணம் இனம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வங்கி அதிகாரிகள் இருவர் சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து பணத்தை பெற்றுக் கொண்டு ஓட்டோ ஒன்றில் திரும்பிக் கொண்டிருக்கையில் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்ததாகக் கூறப்படும் துப்பாக்கித் தாரிகள் வழி மறித்து பணம் பறித்துச் செல்லப்பட்டுள்ளதாக இச் சம்பவம் தொடர்பாக கூறப்படுகின்றது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வட பகுதிக்கான ரயில் பாதை அமைப்புத் தாமதமடைகிறது

### நிலக்கண்ணி வெடிகளே காரணமாம்

கொழும்பு, ஜூலை 16

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாத காரணத்தால் யாழ்ப்பாணத்துக்கான ரயில் பாதை நிர்மாணப்பணிகள் தாமதமடைந்துள்ளன என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓமந்தையில் இருந்து பளை வரையிலான 96 கிலோமீற்றர் பகுதியில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமல் இருக்கின்றன என்று ரயில்வேத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் பீ.பி.விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்த காலப்பகுதியில் வவுனியா வரையுமே வடபகுதி ரயில் போக்குவரத்து இருந்தது. அதற்கு அப்பால் ஓமந்தை வரை அதனை விஸ்தரிக்கும் நடவடிக்கை(24 ஆம் பக்கம் பார்க்க)

## 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் அமுலானால் பல பிரச்சினைகள் தீரும் என்கிறது ஐ.தே.க.

### அரசுடன் மூன்று விடயங்கள் குறித்துப் பேச்சாம்

கொழும்பு, ஜூலை 16

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்தினால் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிடும். அரசு - ஐ.தே.க. அரசமைப்புத் திருத்தங்களில் உள்ளடக்கப்படவேண்டிய மூன்று விடயங்கள் குறித்து அரசுக்கும் ஐ.தே.கவுக்கும் இடையில் பேச்சு இடம்பெறுகிறது. இதுகுறித்து ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.க. செயற்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்.

ஐ.தே.கட்சி எம்.பி. தயாசிறி ஜயசேகர நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற செய்தியாளர் (24 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான ஐ.நா. நிரந்தர பிரதிநிதி நியமனம் கேள்விக் குறி

### விமலின் நாடகம் பெரும் பாதிப்பு என்கிறார் ஜயலத் எம்.பி.

கொழும்பு, ஜூலை 16

இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியை நியமிப்பது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என ஐ.நா. பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அரச அமைச்சரின் உண்ணாவிரத நாடகமே இதற்குக் காரணம். இதனால் ஐ.நா. சபையின் கீழ் இயங்கும் அமைப்புகளின் செயற்பாடுகளும் (24 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார் டாக்டர் பிரியந்த

யாழ்ப்பாணம், ஜூலை 16

வேலணை அரசினர் வைத்தியசாலை குடும்பநல மருத்துவமாது தர்சிகாவின் மரணம் தொடர்பாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள டாக்டர் பிரியந்த செனவிரத்ன தாக்கப்பட்டதாகத் தெரிவித்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். வைத்தியசாலை 24ஆம் விடுதியில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற அவர் பின்னர் வேறு ஒரு விடுதிக்கு மாற்றப்பட்டார்.

அவருக்கு பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பான விசாரணை நேற்றும் (24 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆந்திராவில் மின்நிலையம் அமைக்க எதிர்ப்பு; பொலிஸார் சூட்டதில் 4 மீனவர்கள் பலி!

## 25 பொலிஸார் உட்பட 100 பேர் காயம்: 10 வாகனங்கள் எரிப்பு

நகரி, ஜூலை 16

ஆந்திராவில், மின் நிலையம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து கிராம மக்கள் போராட்டம் நடத்தினார்கள். இதன்போது பொலிஸார் நடத்திய தடியடி - துப்பாக்கிச் சூட்டில் 4 மீனவர்கள் பலியாகினர். மேலும் 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

ஆந்திராவில் 2640 மெகா வோட் மின்சாரம் உற்பத்தி செய்யும் அனல் மின் நிலையம் தனியார் மூலம் அமைக்கப்பட இருக்கிறது. இதற்கு 1000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு அந்தப் பகுதியில் உள்ள 12 கிராமங்களில் வாழும் மீனவ மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

அவர்கள் கடந்த 200 நாட்களாக தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை மின் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடப்பதாக இருந்தது. அந்த இடத்துக்கு அதிகாரிகளும், பொலிஸாரும் வந்தனர்.

அப்போது அங்கு அடிக்கல் நாட்டக் கூடாது என்று கோரி, ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவ மக்கள் குவிந்தனர். ஏற்கனவே அந்தப் பகுதியில் 144 தடை உத்தரவு அமுலில் இருப்பதால், கலைந்து செல்லுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டனர். ஆனால் மீனவர்கள் கலைந்து செல்லாமல், பொலிஸார் மீது கற்களை வீசினர்.

இதைத்தொடர்ந்து பொலிஸார் தடியடி நடத்தி, கண்ணீர்ப் புகைகுண்டுகளை வீசினர். பின்னர் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் அந்தப் பகுதி போர்க்களம்போல் காட்சியளித்தது.

துப்பாக்கிச் சூட்டிலும், தடியடியிலும் 4 மீனவர்கள் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இதில் பொலிஸ் சூப்பிரண்டு உட்பட 25 பொலிஸாரும் காயமடைந்துள்ளனர்.

இந்த வன்முறையின் போது அங்கு நிறுத்தப்பட்டு இருந்த 10 பொலிஸ் வாகனங்கள், 5 மோட்டார் சைக்கிள்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. (சி)

# சென்னை நீதிமன்றத்தில் பிணை கோரி சீமான் மனு

'நாம் தமிழர்' இயக்கத் தலைவர் சீமான் தன்னை பிணையில் விடுவிக்கக்கோரி சென்னை நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சென்னையில் கடந்த 10 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து எனது தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றனர். இதுதொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அதிருப்தி அளிக்கிறது. இதைக் கண்டிக்கும் வகையில் நான் ஆர்ப்பாட்டத்தில் பேசினேன். அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமையாக கூறப் பட்டுள்ள பேச்சுரிமை அடிப்படையில் தான் எனது கருத்துகளைத் தெரிவித்தேன். -என்றுள்ளது.

# சீமானை விடுதலை செய்யக் கோரி சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 16

சீமானை விடுதலை செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கைக் கடற்படையினரால், தமிழக மீனவர் ஒருவர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து சென்னையில் சமீபத்தில் 'நாம் தமிழர்' இயக்கத்தின் தலைவர் சீமான் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சீமான் பேசும்" போது, 'இரு பிரிவினருக்கு இடையே கலவரம் ஏற்படும் வகையில் பேசினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு சீமான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தநிலையில், சீமானை விடுதலை செய்யக்கோரி 'நாம் தமிழர்' இயக்கத்தை சேர்ந்த சட்டத்தரணிகள், சென்னை உயர் நீதிமன்ற நுழைவு வாயில் அருகே நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்தனர். சீமானை விடுதலை செய்யக்கோரும் வாசகங்கள் அடங்கிய அட்டைகளைக் கையில் ஏந்தியபடி சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (சி)

# மரண அறிவித்தல்

## திரு சதாசிவம் சிவசுப்பிரமணியம் (வெள்ளையன்)



சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவசுப்பிரமணியம் (வெள்ளையன்) 12.07.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் சகுந்தலாவின் (டென்மார்க்) அன்புக் கணவரும், நவநீதன் (டென்மார்க்), காணநீதன் (டென்மார்க்), உசா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரவீனாவின் (டென்மார்க்) அன்பு மாமனாரும், பாலசுப்பிரமணியம் (டென்மார்க்), அமிர்தநாயகி, லோகநாதன் (சுவிஸ்), ஸ்ரீபத்மநாதன் (டென்மார்க்), லோகநாயகி (சுவிஸ்), தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், சின்னையா, வீரவாகுதேவர், சின்னத்தம்பி, சரவணமுத்து ஆகியோரின் பெறாமகனும், சரஸ்வதி, கமலாதேவி, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற்றும் பரமேஸ்வரி, கனகாம்பிகை, தனலட்சுமி, காலஞ்சென்ற சந்திரகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் புத்தூர் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள்.

(100671)

# உயர்தர மாணவருக்கு நெடுந்தீவில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 16

நெடுந்தீவு பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான தமிழ்ப் பாடக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் முன்னணி ஆசிரியர் செ. தமிழிந்திரனால் நடத்தப்படவுள்ளது.

இக் கருத்தரங்கில் மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நெடுந்தீவு பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஒ-1)


JOB Guaranteed "Certified Medical Assistant"

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை **லாவா வைத்தியசாலையில்** சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகப் பெற்றிடுங்கள்.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி

கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகத் தேர்வு மூலம் அனுமதி.



M.B.B.S வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

உள்ளகப்பயிற்சி வழங்குவோர்: Lava Hospitals
சான்றிதழை இணைந்து வழங்குவோர்: KNOWLEDGE UNIVERSE® Malaysian Soft Skills and ICT Development Centre

Tel: 0212224333 |# 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com



விற்பனையாகிறது

A/L வணிகக்கல்வி - 2010 - August இல்
தோற்றவுள்ள மாணவர்களுக்கு

★ வணிக அறிமுகம் வணிகச் சூழல் பொறுப்பும்
★ அரசும் வணிகமும் வணிக அமைப்புகள்
★ வணிகத்திற்கு அவசியமான சேவைகள்
★ உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரம்
★ தகவல் முறைமை முயற்சியாண்மை
★ வணிக முகாமை - உற்பத்தி
★ சந்தைப்படுத்தல் - வணிகத் திட்டம்
★ வணிக நிதி - மனித வள முகாமை
★ விடைகள்

8 புத்தகங்கள் ஒரு தொகுப்பு

ஆக்கம்:
A.T.நந்தன் (கொழும்பு)

விலை 590/-

அன்னை புத்தகசாலை
விற்பனை ஏக முகவர்: யாழ்ப்பாணம் - சாவகச்சேரி
222 9881 - 2270003

10% விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸின் மாபெரும் ஆடித் தள்ளுபடி

அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க சிவகணேசன் ரெக்ஸின்
கோலாகலமான ஆடித்தள்ளுபடி விற்பனை உள்ளகக் காட்சியறையில்

17-31 ஆம் திகதி வரை

★ இந்தியன் வேக் சாறிகள்
★ பான்சி சாறிகள்
★ காஷ்மீர் சாறிகள்
★ பஞ்சாபி துணி வகைகள் (இந்தியா, பாகிஸ்தான்)
★ சேட்டுகள், ரவுசர்கள்
★ பிளேன் சாறிகள் (ICON)

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
(உள்ளகக் காட்சியறை)
(DSI SHOW ROOM அருகில்)
51/2, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.




மற்றும் சகலவிதமான ஆடைகளுக்கும் 10% - 30% வரையிலான அதிரடி விலைக்கழிவு.

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஜனாதிபதியின் கிளிநொச்சிப் பேச்சு

இந்த நாட்டின் எல்லா மக்களும் ஒன்றுதான். அவர்கள் எல்லோரும் சம உரிமையுடன் வாழ்வதற்கு நான் வகை செய்வேன். இந்த நாட்டில் சிறுபான்மையினர் என்று ஓர் இனம் இல்லை. எமது நாட்டின் மீது அன்பு காட்டும் எல்லோரும் ஒரு தாய் மக்களே.

இவ்வாறு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சியில் அங்கு மீளக்குடியேறிய மக்கள் மத்தியில் (தமிழில்) பேசுகையில் தெரிவித்துச் சென்றுள்ளார்.

இலங்கை அரசாங்கங்களின் அமைச்சரவைக ளின் சரித்திரத்தில் ஒரு புதுமையைச் செய்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த. அமைச்சரவையின் வாராந்தக் கூட்டம் ஒன்றை முதன்முறையாக தலைநகர் கொழும்புக்கு வெளியே நடாத்தி உள்ளார். அதுவும் தமிழ் மாகாணம் ஒன்றின் ஒரு மாவட்டத்தில் நடத்தியிருக்கிறார்.

அதன் பின்னர் மீளக்குடியேறிய மக்களின் நிலைமையைத்தானே நேரில் அறிய வேண்டும் என்பதற்காக - அதாவது அமைச்சர்கள், அதிகாரிகள், அறிக்கைகள் மூலம் தரும் தகவல்களில் மட்டும் தங்கியிராது - தாமே நேரில் வந்து பார்வையிடவேண்டும் என்று விரும்பி, அதனைச் செயலிலும் காட்டியிருக்கிறார்.

தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்ற அவரது இலக்குக்கு இந்த நடவடிக்கை ஒரு சில புள்ளிகளைச் சேர்த்திருக்கிறது. அது ஒரு புறமிருக்க, ஜனாதிபதியின் கிளிநொச்சி நகர (றொட்றிக்கோ விளையாட்டு மைதான) மக்கள் சந்திப்புக்கு வருவோம்.

அங்கே அவர் 'பச்சையாக'ச் சில விடயங்களை வெளிப்படுத்தி இருக்கிறார். ஏ-9 வீதியிலிருந்து கண்ணுக்குத் தெரியக்கூடிய பகுதிகளில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ஓடுகள் வேயப்பட்டிருப்பதைத் தாம் பார்த்தார் என்றும் - ஆனால் தாம் மக்களைச் சந்திக் கச் சென்றபோது பல வீடுகள் ஓடுகள் இன்றிக் காணப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆகையால் அதிகாரிகளின் செயற்பாடுகளையும் ஜனாதிபதி மிக நன்றாகப் படித்திருக்கிறார், அறிந்திருக்கிறார்!

மக்கள் சந்திப்பின்போது, எல்லா மக்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கு வகை செய்யப் போவதாக ஜனாதிபதி அறிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இதனைத் தான் கடந்த 60 ஆண்டுகள் காலமாக தமிழ் மக்கள் சிங்களப் பெரும்பான்மைப் பலம் கொண்ட அரசுகளிடம் கேட்டு நிற்கிறார்கள். சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சேர்.ஜோன் கொத்தலாவல கொக்குவிலில் கூறியதைச் சீரணிக்க முடியாத சிங்கள மிதவாத அரசியல் தலைவர்கள் - மிகக் குறிப்பாக எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்க - அக்கருத்தைக் கைகளில் எடுத்துக்கொண்டு சிங்கள - தமிழ் உறவைப் போட்டுடைத்தார்கள். (இத்தனைக்கும் இந்த நாட்டுக்குச் சமஷ்டி அரசு உகந்தது என்று அதற்கு முந்திய காலத்தில் முதன் முதலில் வாதாடியவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.தான்)

சிங்கள, தமிழ், முஸ்லிம் மூவின மக்களும் இந்த நாட்டில் சம உரிமையுடன் வாழ வழி செய்திருந்தால், எமது நாடு எப்போதோ ஆசியாவின் சொர்க்கமாக மாறியிருக்கும். ஆனால் சிங்கள அரசியல் தலைவர் கள் அவர்களுக்குள் வெவ்வேறு சித்தாந்தங்களில் வேறுபட்டு, மாறுபட்டு, நின்றுகொண்டு இனவாதத்தினை அடிப்படையாக வைத்து ஆட்சிக் கட்டில் ஏறுவ தற்கு நடத்திய போட்டியே இப்போதைய நிலைக்கு வித்திட்டது.

இந்த நிலையை மாற்றி, இலங்கைத் தீவின் எல்லா மக்களும் சம உரிமையுடன் வாழத் தாம் வழிசெய்யப் போவதாகத் தெரிவித்திருக்கிறார் எமது ஜனாதிபதி. அவர் அதனை ஒரு மேடைப் பேச்சாக, தமிழ் மக்களைத் தமது பக்கம் இழுப்பதற்கு ஆற்றிய உரையாகக் கொள்ளாமல், செயற்படுத்துவாரெனில் அவர் இந்த நாட்டின் சரித்திரத்தில் மிகப் பெரிய இடத்தைத் தனதாக்கிக் கொள்வார்.

இந்த நாட்டில் எல்லோரும் சம உரிமையோடும் சுய கௌரவத்துடனும் வாழ ஜனாதிபதி மஹிந்த வழி செய்வாராயின், அவர் இந்த நாட்டில் சிறந்த தலைவராகச் சரித்திரத்தில் இடம் பிடிப்பார். ஏனெனில் இதுவே சிறுபான்மையினரான தமிழ் மக்களின் வேணவாவும் அபிலாஷையும் ஆகும். கடந்த ஆறு தசாப்த கால வாழ்வியல் கனவும், இலக்குமாகும்.

அத்தகைய ஒரு நிலைமை தோற்றுவிக்கப்பட்டால், பிரிவினைவாதம், பயங்கரவாதம் இனிமேல் வேண்டாம் என்ற ஜனாதிபதியின் விருப்பம் தானாகவே நிறைவேறிவிடும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆறு வருடங்கள் பிரதமராகப் பதவி வகித்தவர். ஜனாதிபதியின் முதல் பதவிக் காலமான ஆறு வருடங்களை இன்னும் மூன்றரை மாதங்களில் பூர்த்தி செய்யப்போகிறார். அதன் பின்னர் தமது இரண்டாவது பதவிக் காலத்தை 2016ஆம் ஆண்டுவரை அனுபவிக்க உள்ளவர். தமது இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பித்த சில மாதங்களில் இந்த நாட்டில் எல்லா இன மக்களும் சம உரிமையுடன் வாழ வழி செய்வாராயின், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் அதிகரிக்காமலே இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் உள்ள பிரதமராக வருவதற்கும் வாய்ப்புண்டு என்பது நிச்சயம். அதனை மனதிற் கொண்டாவது, நாட்டின் சகல இன மக்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ வழிசெய்வார் என்று எதிர்பார்ப்போமாக!

# குடாநாட்டில் எரிபொருள் விலைகள் நேற்றுப் பிற்பகலில் குறைக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை 16

யாழ்.குடாநாட்டில் எரிபொருள்களின் விலைகள் நேற்று வியாழக்கிழமை பிற்பகலிலேயே மாற்றப்பட்டன.

நேற்றுக்காலை முதல் எரிபொருள்கள் முன்னர் விற்ற வழமையான விலைக்கே விற்பனை செய்யப்பட்டன. அமைச்சரவைத் தீர்மானத்தின்படி நேற்றுக்காலை குடாநாட்டில் எரிபொருள் விலை குறைப்பை எதிர்பார்த்திருந்த பாவனையாளர்கள் இதனால் ஏமாற்றமடைந்தனர். எனினும் பிற்பகலில் விலைகள் குறைக்கப்பட்டன.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக யாழ்.குடாநாட்டில் எரிபொருள்களின் விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளதாக பெற்றோலிய அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பின்படி ஒரு லீற்றர் பெற்றோல் 115 ரூபா 60 சதமாகவும், டீசல் 73 ரூபா 60 சதமாகவும், மண்ணெண்ணெய் 51 ரூபா 60 சதமாகவும் விலை குறைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் யாழ்.குடாநாட்டில் எரிபொருள் விற்பனை நிலையங்களில் நேற்றுக்காலை எந்தவித விலைக் குறைப்பும் செய்யப்படவில்லை. அவை பழைய விலைகளிலேயே விற்பனை செய்யப்பட்டன. எனினும் பிற்பகலில் அந்த விலைக்குறைப்பு இடம்பெற்றது.

இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்.பிராந்திய அலுவலக உயர்அதிகாரி ஒருவரை தொடர்புகொண்டு கேட்டபோது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து நேற்றுக் காலை விலைக் குறைப்புத் தொடர்பாக எவ்வித அறிவித்தலும் கிடைக்கப்பெறவில்லை. அது பிற்பகலிலேயே கிடைத்தது. இதனால் பிற்பகலிலேயே விலைக்குறைப்பை மேற்கொள்ள முடிந்தது - என்றார். (50-14-224)

## கீரிமலை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை நடத்த அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை16

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

முதற்கட்டமாக ஆலய சுற்றாடலைத் துப்புரவாக்கும் பணி இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் ஆலய சுற்றாடலைத் துப்புரவு செய்வதற்குப் பாதுகாப்புப் படையினரும் ஆலய நிர்வாகத்தினரும் தீர்மானித்துள்ளனர்.

சிரமதானப் பணியில் ஈடுபட விரும்பும் பக்தர்களை நாளை மறுதினம் காலை 9 மணிக்கு தேசிய அடையாள அட்டையுடன் கீரிமலைக்கு வருமாறு ஆலய ஆதீனகர்த்தா உமாபதீஸ்வரக் குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(50-120)

## மடுவலய ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவு

மடுவலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான இம்மாத சம்பளக் கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே ஆசிரியர்களைத் தவறாது கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

## சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்.பாடசாலைகளில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை16

சமூக சேவைகள் அமைச்சின் பாடசாலை அபிவிருத்தித் திட்டம் 2010 இன் கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கட்டடத்திருத்த வேலைகள், மலகூடம் அமைத்தல், மாணவர் தளபாட விநியோகம் ஆகிய வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்ட திருத்த வேலைத் திட்டதின் கீழ் வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள சித்தன்கேணி சிறீ கணேசா வித்தியாலயம், தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தலா மூன்று இலட்சம் ரூபா பெறுமதியில் வகுப்பறைக் கட்டடத் திருத்தவேலைகளும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மாதகல் புனித தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் முறையே தலா 4லட்சத்து 25ஆயிரம் ரூபா, 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மாணவர்களுக்கான தளபாடங்களும் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் 2 லட்சத்து 40ஆயிரம் ரூபா பெறுமதியான இரட்டைத்தொகுதி மலசலகூடமும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

யாழ். கல்வி வலயத்தின் கீழ் செங்குந்த இந்துக் கல்லூரியில் 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியில் வகுப்பறைத் திருத்த வேலைகளும் -

தென்மராட்சி கல்வி வலயத்தின் கீழ் சாவக்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு 3லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியிலும் உசன் இராமநாதன் வித்தியாலயத்துக்கு 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியிலும் மாணவர் தளபாடங்களும் வழங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலக சமூக சேவைகள் அமைச்சு அலுவலக அபி விருத்தி உத்தியோகத்தர் பா.சிறீபவன் தெரிவித்துள்ளார்.

(50-224)

## உதவிக் கொடுப்பனவு

நவாலி,ஜூலை 16

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் காசநோய், புற்றுநோய், யானைக் கால் நோய் என்பனவற்றிற்கான உதவிப் பணம் பெற்று வருபவர்களுக்கும் இந்த மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (எ-100)

## ஞாயிறன்று மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 16

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், கரந்தன், நீர்வேலி, கோப்பாய் ஆகிய இடங்களில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் வேலைக்காக உயரழுத்த மின் கம்பங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதனாலேயே மின் விநியோகம் தடைசெய்யவேண்டி ஏற்பட்டுள்ளதாக யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (50)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 1 | 17.07.2010 சனிக்கிழமை |
| திதி: | : சஷ்டி மு.ப. 11.53 வரை |
| நட்சத்திரம் | : உத்தரம் மு.ப. 07.56 வரை |
| சுபநேரம் | : 03.00-04.30 வரை |
| ராகுகாலம் | : 09.00-10.30 வரை |

## மாவையைத் தேடி வந்தான் கந்தன்



விண்ணதிரும் குண்டொலியைக் கேட்டுக் கேட்டு
விலகினான் வேலவனும் "மாவை" விட்டு
குன்று தோறுமாடி. விட்டுக் குமரன் பின்னே
குவலயம் போற்றும் கதிர்காமம் வந்தான்
அன்றுள்ள கதிர்காமம் தன்னைத் தேடி
அலைந்தனன் வள்ளி தெய்வயானையோடு
ஒன்றாக புத்த வேத இஸ்லாமதங்கள் கூடி.
புனித நகராக்கியதை புரிந்துகொண்டான்
மாண்புறு வள்ளியோடு தான் மகிழ்ந்த
மாபெரிய சோலை தனைத் தேடித் தேடித் தேடி.
கண்டு கொள்ள முடியாத காரணத்தால்
கலங்கியே மனமதுவும் மிகவும் நொந்து
இன்புற்று பல்லாண்டு வாழ்ந்த "மாவை"
இருப்பிடமாய் இனி ஏற்போமென இசைந்து
வண்ணமுறு கொடியேறக் கண்டோமென்று
வள்ளி தெய்வயானையோடு வந்தான் இங்கு
கண்கவரக் காட்சி தந்து அருள்புரிந்து
கனைகடலாம் கீரிமலைத் தீர்த்தமாடி.
உண்மையிலே உமைவிட்டு பிரியோமென்று
உறுதிமொழி கேட்டிட வாரீர் வாரீர்
வண்ணமுறு தேர்வடத்தைப் பிடித்தோரெல்லாம்
வானுலகில் இடம்பிடிப்பது உறுதியாமே!

- விகடகவி.

### மாவையில் கண்டு களித்திடுவோம் காண்!

கந்தனுறை மாவையிற் காட்டுகிற தீபங்கள்
சிந்தையைக் கந்தன்பாற் சேர்த்துவிடும் - மந்திரங்கள்
முந்தை வினை போக்கிவிடும் மூவாசை நீக்கிவிடும்
பத்தவினை மாற்றிவிடும் பார்

சீரார் பரங்குன்றம் செந்தூர் திருத்தணியும்
ஏரார் பழநியொடு ஏரகமும் நேராகக்
கண்ட முருகனை நாம் காலமெலாம் மாவையிற்
கண்டு களித்திடுவோம் காண்.

*(நன்றி : கந்தர் மாவை வெண்பா)*

(சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோயில் காம்யோற்சவம் இன்று ஆரம்பமாகிறது)

# காலத்தை வென்று சாதனை படைத்த கண்ணகிபுரம் வானொலி நாடகம்



முன்பொரு காலத்தில் தொடர் நாடகங்களே மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்த பொழுதுபோக்குச் சாதனங்களாக இருந்தன. ஆனால் தற்போது வளர்ந்து வருகின்ற கணனி உலகத்தில் தொலைக்காட்சியே அவர்களுடன் ஒன்றிணைந்துவிட்டது.

வானொலி நாடகங்களைக் கேட்பது மிகக் குறைவாக இருந்தாலும் தற்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை, பிறை எவ்.எம், யாழ்.எவ்.எம், தென்றல் வானொலி ஆகியவற்றிலும் மற்றும் சிங்கள வானொலிச் சேவைகளிலும் தற்போது கண்ணகிபுரம் தொடர்நாடகத்தை விரும்பிக் கேட்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இளைஞர்களுக்கான அறிவுரைகளையும் மேம்படக்கூடிய ஆற்றல் மிக்க செயற்பாடுகளையும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும், கதாபத்திரங்கள் மூலம் இந்நாடகம் சித்தரிக்கின்றது. அத்தோடு இந்த நாடகத்தில் பங்காளியாக இருந்து வாரந்தோறும் செவிமடுப்பவர்கள் மற்றும் இளையவர்களின் குழு அமைப்பும் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் அவர்களின் எண்ணங்கள் என்பன இந்த நாடகத்தில் உள்வாங்கப்படுகின்றன.

சினிமாப்படங்களையும், பாடல்களையும் விருப்பத்தோடு கேட்டும் பார்த்தும் மகிழ்கின்ற இளைஞர்களுக்கு இதுபோன்ற வானொலி நாடகங்களை கேட்பதில் ஆர்வம் இல்லாமல் இருந்தாலும் ஒரு தடவை கேட்டால் மறுபடியும் கேட்கத் தூண்டும் அளவுக்கு விறுவிறுப்பாக சென்று கொண்டிருக்கும்.

தென்றல் வானொலியில் புதன், வெள்ளி தோறும் மாலை 5.45 இற்கும் ஏனைய வானொலிகளான பிறை எவ்.எம், யாழ். எவ்.எம் மற்றும் சிங்கள வானொலி போன்றவற்றில் மாலை 6.45 இற்கும் இந்நாடகம் ஒலிபரப்பப்படுகிறது.

2009ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஒலிபரப்பாகத் தொடங்கிய இந்நாடகம் இன்று (2010 ஜூலை 16) நூறாவது வாரத்தில் காலடிஎடுத்து வைக்கிறது. அடுத்து மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றதினால் நூறாவது வாரமாக மிளிர்கிறது. தற்போது இளைஞர்கள் எப்போது புதன் வரும். புதன் வந்தால் எப்ப வெள்ளி வரும் எனக் காத்துக்கொண்டிருப்பார்கள்.

சமுதாயத்தோடு ஒட்டி உறவாடி இளைஞர்களுக்கே உரிய பாணியில் இளைஞர்களின் கனவுகளை நனவாக்கும் யதார்த்தம் எனும் வடிவில் சென்று கொண்டிருக்கின்றது.

சிறுபிள்ளைகளைத் தொழிலுக்கு அமர்த்தி வேலை வாங்கும் எம்மவர்களிடையே அப்பிள்ளைகளின் கல்வியை முக்கியப்படுத்திக் கூறுவதோடு அதனால் ஏற்படுகின்ற விளைவுகளையும், அதற்கேற்ப பாத்திரங்களை உருவாக்கி நகைச் சுவையாகக்கொண்டு செல்லுகின்ற தன்மையானது சிறுவர்களைக் கூட விரும்பிக் கேட்கும் அளவிற்கு தன்பக்கம் ஈர்த்துக்கொண்டுள்ளது.

இனப்பிரச்சினையையும், மதப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கும் மக்களுக்கு அன்றாட சம்பவம் போல் கருத்துகளைக் கூறுவதனால் இந்நாடகத்திற்கு ஒரு பாராட்டு.

இனம் தெரியாத ஒருவர் வீட்டுக்கு வருகிறார். வந்தவரை அன்பாக அழைத்து உபசரித்து உண்பதற்கு ஏதாவது கொடுக்கும்போது அவர் நான் சாப்பிடுவதில்லை வேண்டாம் என்கின்றார். அவ்வாறு சொல்வதால் அவர் விருப்பமில்லாததால் வேண்டாம் என்கிறாரா? அல்லது இன வேற்றுமை பார்த்து வேண்டாம் என்கிறாரா? இதில் எதை எடுத்துக்கொள்வது? இதுபோன்ற சமுதாயத்தில் நடக்கும் சம்பவங்களை கண்ணகிபுரம் எடுத்துக்காட்டுவது சிறப்பம்சம் ஆகும்.

பாடசாலை மாணவர்களில் இருந்து கல்வி அறிவு குறைந்தோர் கூடப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இந்நாடகம் ஒலிபரப்பு செய்யப்படுவதால் மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்றுள்ள நாடகமாகவே திகழ்கின்றது. -கலைஞன்

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை பாலச்சந்திரன்



(உரிமையாளர், பாலன் மில்)

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நவாலி வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பாலச்சந்திரன் நேற்று (15.07.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் செல்லத்துரை- மலர் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற முத்தாபரணம் மற்றும் இராசமணி தம்பதியரின் மருமகனும் தவமணிதேவியின் பெறாமகனும் சாந்தினியின் அன்புக் கணவரும் விஜிதரன் (முதலாம் வருடம் விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்), சுஜிதரன், சுகிர்தா (முதலாம் வருடம், கல்வியற்கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜார்சிகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஷியாமினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிச்சந்திரன், பவானி, ஜெயச்சந்திரன், பவளச்சந்திரன், பவளராணி, பாமினி மற்றும் லோகேஸ்வரி, றெஜினா, சிவகுமார் ஆகியோரின் சகோதரனும் ஜெயந்தினி (சுவிஸ்), ஜெயக்குமார், நந்தினி (லண்டன்), திலீப்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2010) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. (100667)

தகவல்:
குடும்பத்தினர்.

## அருட்சகோதரி ஆன்மேரி அந்தோனி



சென்.ஜேம்ஸ், இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருச்சிலுவை கன்னியர் சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி ஆன்மேரி அந்தோனி நேற்று (15.07.2010) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி 17.07.2010 சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்.திருச்சிலுவை கன்னியர் இல்லத்தில் இடம்பெற்று தொடர்ந்து திருப்பலியின் பின்னர் நல்லடக்கத்துக்காக புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

149, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 9637

தகவல்:
அருட்சகோதரி இமாக்குலேற் யோசவ்
(மாகாணத் தலைவி)

## தில்லையம்பலம் சிவசம்பு



(இளைப்பாறிய அரசாங்க அச்சக லிகிதர்)

காரைநகர், வலந்தலையைப் பிறப்பிடமாகவும் கருங்காலியை வசிப்பிடமாகவும் தற்போது 131A, புதுச்செட்டித்தெரு, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சிவசம்பு நேற்று (15.07.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் பாக்கியத்தின் அன்புக் கணவரும் தில்லையம்பலம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாத்தாண்டியா பிரபல வர்த்தகர் கந்தையா-கணபதியம்மா (சாமி கந்தையா வளவு) தம்பதியரின் மருமகனும் சிவபாத சுந்தரம், சிவமணி, பாலேந்திரா, திலகவதி, புஸ்பவதி, கலாதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்னபாக்கியம், ஏரம்பு, இந்திரா, அமரர் இரத்தினசோதி, செல்வரட்ணம் (SVS), ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் தேவராசா (C.T.B), விஸ்வலிங்கம், அமரர் தர்மலிங்கம்; நாகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானாம்பிகை, வடிவழகாம்பாள், அமரர் இந்திராணி, மகேசன், திருவாதிரை, கணேசமூர்த்தி, சதாசிவம், தெய்வானைப்பிள்ளை, அமரர் வைத்திலிங்கம், சோமசுந்தரம், அமரர் பொன்னம்பலம் (நமசிவாயம்) ஆகியோரின் மைத்துனரும் கார்த்திகா, தர்சன், ஜனகன், நோமலதா, கபில்தேவ், ஐஸ்வரியா, குலமதி, சிவராஜினி, நிரஞ்சனா, முகுந்தன், கஜரூபா, சிந்துரூபன், ஸ்ரீகபிலா, விஷ்ணு ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 131A, புதுச்செட்டித்தெரு, கொழும்பு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இன்று திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 16

'கொழும்பு ஒப்ரிஸியன்' நிறுவனம் தனது கிளை ஒன்றை இன்று காலை 7 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் உள்ள 211 ஆம் இலக்கக் கட்டடத்தில் திறக்க விருப்பதாக அந்நிறுவனத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-1)

## யாழ். கல்வி அலுவலக அடிக்கல் நடும் வைபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திற்கான புதிய கட்டட அடிக்கல் நடும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி அடிக்கல்லை நடுவார்.

இந்த வைபவத்தில் யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஒ-323)

## நல்லூர்க் கந்தன் உற்சவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 16

நல்லைக் கந்தன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தலைமையில் அவரது அலுவலக மண்டபத்தில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் உற்சவ ஏற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர். (ஒ-1)


## இடைக்காடு மகா வித்தியாலயத்தில் சுவாமி விவேகானந்தரின் பெருவிழா

அதிபர் திரு.A.அருந்தவநேசன் தலைமையில்
16.07.2010 நடைபெறும் கருத்தரங்கு

சுவாமி விவேகானந்தரின் அழகிய 40 படங்கள் கொண்ட கண்காட்சி பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் பற்றி கருத்துரை வழங்குவார்..

முக்கிய குறிப்பு:

ஒரு பிரபல்யமான கல்லூரிக்கு 700 ரூபா செலவழித்து சுவாமி விவேகானந்தரின் படம் வழங்கப்பட்டது. அதற்குரிய இடம் வழங்கப்படுமா என்பது ஒரு பெரிய கேள்விக்குறி?

சுவாமி விவேகானந்தர் 1897ஆம் ஆண்டில் ஐந்தரை நாள்கள் நித்திரையில்லாது ஒரு வண்டியின் மூலம் யாழ்ப்பாணம் வந்தமை குறிப்பிடத்தக்கது. சுவாமி விவேகானந்தர் ஓர் உன்னத இந்து சமயத் துறவி என்பது உலகறிந்த செய்தி.

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்
பருத்தித்துறை.

(சி/569285)

## VIKNA TRAVELS & TOURS



யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமம் வரையிலான (Semi Luxury) பஸ் சேவை தொடர்ந்து நடைபெறுகிறது. எமது அடுத்த பயணம் 20.07.2010 அன்று 7.30 am இற்கு ஆரம்பித்து மீண்டும் 24.07.2010 யாழ்ப்பாணத்தை வந்தடையும். குறைந்த கட்டணத்தில் நீங்களும் மிகிந்தலை ↓ கண்டி ↓ கதிர்காமம் ↓ கொழும்பு நகரங்களை கண்டுகளித்துவர உடனடியாக ஆசனப்பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.



நேரடித் தொடர்புகளுக்கு :
0776703359
0774469327

ரூபன் கேம் பார்க் அன் நெற் கபே,
மனோகரா தியேட்டர் சந்தி,
K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

ஐங்கரன் புத்தகசாலை,
0214900582
S.சிவா, யாழ்ப்பாணம்.

டோறா கொமினிகேசன்,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடிச் சந்தி,
நெல்லியடி.

(100665)

## தேவை

யாழ்ப்பாணத்தில் முன்னணி வகிக்கும் வைத்தியசாலைகளில் ஒன்றான யாழ்.வைத்திய சாலைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

நேர்முகத் தேர்வு காலம்: 18.07.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணி

1. காசாளர்- பெண்கள்
2. தாதி- (பயிற்றப்பட்டவர்கள்) பெண்கள்
3. தாதி பயிலுநர்- பெண்கள்
4. மருந்தாளர்- (பார்மஸியில் வேலை செய்த அனுபவமுள்ளவர்கள்)
5. மருந்தாளர் பயிலுநர்
6. வரவேற்பாளர்

குறிப்பு: வன்னிப் பகுதியில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதியும் உணவும் வழங்கப்படும்.

இடம்: இல.315, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

தொ.பே: 2223533

(சி/569282)


## நன்றி நவிலலும் சபிண்டீகரன அழைப்பும்



கடந்த 17.06.2010 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எம் அன்னை **திருமதி நல்லம்மா குமாரசாமியின்** மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் நல்கியும் அனுதாபம் தெரிவித்தும் உடனிருந்தும் ஆறுதலளித்தோருக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் கடிதம், தந்தி, தொலைபேசி ஆகியன மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையங்கள் சாத்தியும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல்வேறு உதவிகளை நல்கியோருக்கும் எம் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

நாளை (17.07.2010) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணத்தைத் தொடர்ந்து 18.07.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் மு.ப. 11 மணியளவில் நிகழவுள்ள அன்னாரின் ஆத்மசாந்தி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் கிடைக்கப்பெறாதவர்கள் தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

33, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். (100669)

தகவல்:
குடும்பத்தினர்.

# குருநகர், நாவற்குழிப் பகுதிகளில் விரைவில் புதிய வீட்டுத் திட்டங்கள்

## வீடமைப்பு அதிகார சபையினர் ஆராய்ந்தனர்





யாழ்ப்பாணம், ஜூலை 16
குருநகர், நாவற்குழிப் பகுதிகளில் அமைக்கப்படவிருக்கும் வீட்டுத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கெனத் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கொழும்புத் தலைமையகத்திலிருந்து பொறியியலாளர் குழு ஒன்று நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்தது.

கே.எ.ஜனகா தலைமையில் ஆறுபேர் அடங்கிய இந்தக் குழுவில் பொறியியலாளர்கள் மற்றும் கட்டட வரைஞர்கள் என அடங்கியிருந்தனர்.

இவர்கள் முதலில் குருநகர் ஐந்து மாடி வீட்டுத் திட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இராணுவத்தினரின் பாவனையிலிருந்த நாற்பது வீடுகளைக் கொண்ட இரண்டு தொடர்மாடிகள் தற்போது அவர்கள் பாவனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. முழுமையாகச் சேதமடைந்துள்ள நிலையில் உள்ள அந்த இரண்டு தொடர்மாடிகளையும் முழுமையாக இடித்தழித்து மீளவும் புதிய முறையில் அவற்றை மீளக் கட்டுவது குறித்து இந்தக் குழுவினர் ஆராய்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்.நகரிலுள்ள தாராபுரம் வீட்டுத் திட்டத் தொகுதியையும் இந்தக் குழுவினர் பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கென ஒதுக்கப்பட்டுள்ள நாவற்குழியிலுள்ள 57 ஏக்கர் நிலப்பரப்புக்கும் இவர்கள் நேரில் விஜயம் மேற்கொண்டனர். இந்த நிலப்பரப்பின் 25 ஏக்கரில் அடுத்த வருடம் புதிதாக அமைக்கப்படவிருக்கும் வீட்டுத்திட்டம் தொடர்பாகவும் இந்தக் குழுவினர் விரிவாக ஆராய்ந்தனர். புதிதாக அமைக்கப்படவிருக்கும் வீட்டுத்திட்டம் தொடர்பான தேவை மதிப்பீடும் இதன்போது மேற்கொள்ளப்பட்டது.

இந்தக்குழுவினருடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ் மாசிலாமணி, தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான எம். முத்துராஜா, வி.எச்.சாள்ஸ் ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

இதேவேளை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைமை அலுவலகத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அதன் தலைவர், உப தலைவர், வேலைத்தளப் பணிப்பாளர், பொது முகாமையாளர் ஆகியோர் அடங்கிய குழுவினர்இந்த வீட்டுத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (50-14-23)

## 2 குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள்

நாவற்குழி ,ஜூலை16
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் செஞ்சிலுவைச் சர்வதேச குழு 2 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களை மிக அண்மையில் வழங்கியது.

இதன் மூலமாக 2 தையல் கடைகள் போடப்பட்டு அவை சிறப்பாக இயங்கி வருகின்றன. (50-121)

## கால்நடை வளர்ப்போர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை16
சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்திக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும்.

மேற்படி கூட்டம் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவபாலன் தலைமையில் இடம்பெறும்.

இதில் வெற்றிடமாகவுள்ள இரு நிர்வாகசபை உறுப்பினர் தெரிவு இடம் பெறும். (50-302)




# உலக வங்கி வீடமைப்புத் திட்டத்துக்கு வரணி வடக்கில் 20 பயனாளிகள் தெரிவு

தென்மராட்சி கிழக்கு , ஜூலை 16
தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவில்- உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டம் கட்டம் V க்காக 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெயர்ப்பட்டியல் மேற்படி கிராம அலுவலர் பிரிவினுள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இப்பெயர்ப்பட்டியலில் உள்ளவர்கள் சார்பில் தகுதியற்றவர்கள் எவரும் இருப்பின் அவர்கள் பற்றியும் தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள் எவரும் இருப்பின் அது பற்றியும் விளம்பரம் ஒட்டப்பட்ட 14 நாள்களுக்குள் பின்வருவோருக்கு அறிவிக்கும்படியும் வேண்டப்பட்டுள்ளது.

அரச அதிபர் யாழ்ப்பாணம், பிரதி திட்டப் பணிப்பாளர் வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாண திட்டம் செயலகம் யாழ்ப்பாணம் மற்றும் திட்டப் பணிப்பாளர் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் திருகோணமலை ஆகியோருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-122)


# கோப்பாயில் விதாதா நிலையம்; 5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

நாவற்குழி ,ஜூலை16
கோப்பாய் பிரதேச செயலக வளாகத்தில் விதாதா வள நிலையத்தை அமைக்கத் தொழிநுட்ப, தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச்சு 5 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மூலமாக விதாதா வள நிலையம் அமைக்கும் பணிகள் மிக விரைவில் முன்னெடுப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமத்துக்கு தொழில்நுட்பம் வழங்குவது என்ற குறிக்கோளுடன் பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் அரசாங்கத்தினால் விதாதா வள நிலையம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (50-121)

# பிரதான குளங்களில் 'சல்பீனியா' அகற்றும் விசேட நடவடிக்கை



யாழ்ப்பாணம் , ஜூலை 16
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உள்ள பிரதான குளங்களில் படர்ந்துள்ள 'சல்பீனியா'செடிகளை அகற்றும் விசேட நடவடிக்கையை மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

மாநகரசபையின் எல்லைக்குள் இருக்கும் அனைத்துப் பிரதான குளங்களிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த'சல்பீனியா' செடிகள் குளங்களின் நீர்ப்பரப்பின் மேல் படர்ந்து மூடியுள்ளமையால் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் அதிகம் உற்பத்தியாகின்றமை உரியதரப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அத்துடன் குளத்து நீரும் இந்தச் செடிகளால் மாசடைந்து வருவதாகக் கூறப்பட்டது.

இதனையடுத்து'சல்பீனியா' செடிகளை அகற்றும் விசேட நடவடிக்கையை மாநகர சபைத் தொழிலாளர்கள் படகுகளைப் பயன்படுத்தி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-224)

# மாற்றுவலுவுள்ளோர் பற்றிய கணக்கெடுப்பு விரைவில்

## சமூகசேவைத் திணைக்களம் மேற்கொள்ளும்

நாவற்குழி , ஜூலை 16
வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள மாற்றுவலுவுள்ளோரின் ( ஊனமுற்றோர்) அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய கணக்கெடுப்பொன்றைச் செய்யவுள்ளது.

இதற்கென கிராம மட்டங்களில் தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. தொண்டர்கள் மூலம் படிவங்கள் கிராம மட்டத்தில் உள்ள மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான விவரங்கள் பதியப்பட உள்ளன.

இக்கடமையைச் செய்யும் தொண்டர்களுக்கு சிறு கொடுப்பனவு ஒன்றை சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொள்ள உள்ளது.

பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையாற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் பிரதேச செயலரின் வழி நடத்துதலுடன் இக்கணக் கெடுப்பை மேற்பார்வை செய்யவுள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோர் தன்மை, காரணம், அவர்களது சுயவிவரங்கள், அவர்களது தொழிற்திறன், தேவைகள் , வழங்கப்பட்ட உதவிகள் போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியதாக இப்படிவம் காணப்படுகின்றது.

இக்கணக்கெடுப்பில் உள்ளடங்குவோருக்கு மாவட்ட, பிரதேச செயலக குறியீடுகளை உள்ளடக்கித் தொடர் இலக்கமொன்று வழங்கப்பட உள்ளது.

வடமாகாணத்தில் அவர் எப் பிரதேசத்திலும் இத்தொடர் இலக்கத்தைக் கொண்டு அடையாளப்படுத்தப்படுவார். ஒருவர் பலமுறை பதிவிற்கு உள்ளாவது தவிர்க்கப்பட உள்ளது.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் மாற்று வலுவுள்ளோர் தொடர்பாக சிறப்பான தரவுத் தளத்தைப் பேணி எதிர்காலத்தில் இவர்கள் தொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட உள்ளது. (50-121)




மக்கள் வங்கியின் பொருளாதார சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரையாற்றுவதையும், மக்கள் வங்கியின் வட பிரதேச முகாமையாளர் எஸ்.பத்மநாதன், வணிகத்துறை பேராசிரியர் எஸ்.நடராஜசுந்தரம், துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் மக்கள் வங்கியின் ஆய்வுப் பணிப்பாளர் கே.டபிள்யூ.புஸ்பகுமார, மக்கள் வங்கி வடபிரதேச உதவி பொது முகாமையாளர் வி.ஆனந்தராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும், மக்கள் வங்கியின் ஆய்வுப் பணிப்பாளர் புஸ்பகுமாரவிடமிருந்து பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் எஸ்.தேவராஜா நூலின் பிரதியைப் பெற்றுக் கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : லக்ஸ்மன்)*

## அறிவித்தல்

கீரிமலை ஸ்ரீ மகா முத்துமாரியம்மன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்குப் பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

முதற்கட்டமாக நாளை மறுதினம் (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை அன்று சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளன. சிரமதானப் பணியில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் காலை 9 மணிக்கு தேசிய அடையாள அட்டையுடன் கீரிமலைக்கு வரவும்.

நா. உமாபதீஸ்வரக் குருக்கள்
ஆதீன தர்மகர்த்தா

[சி/569272]


## திறப்பு விழா அழைப்பு

சதீஷனின் கனவுகள் நிஜமாகும்



பிரியங்கா

புகைப்படக் கலையகம்

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

நிகழும் விகிர்தி வருடம் ஆனித் திங்கள் 32ஆம் நாள்
இன்று (16.07.2010) வெள்ளிக்கிழமை
நண்பகல் 12.20 மணி தொடக்கம் 02 மணிவரை
உள்ள சுபமுகூர்த்த வேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு புகைப்படக் கலைஞர்கள் ,
வாடிக்கையாளர்கள் , உறவினர்கள் அனைவரையும்
கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
நிர்வாகம்.





(100682)


## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் , ஜூலை 16

மக்கள் வங்கியின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் சிறுவர் தின மற்றும் சிசு உதான புலமைப் பரிசில் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் ஆராய்ச்சிபணிப்பாளர் கே.யூ. புஸ்ப குமாரவும் சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் வீ.கணேசராஜாவும் கலந்துகொள்வர். (50-201)

* * *

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் வழங்கும் யோகாசன, தியான வகுப்புக்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை மானிப்பாய் வீதி, தாவடியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் மேற்படி வகுப்புக்களில் பங்குபற்ற முடியும் என சமிதிச் செயலாளர் அறிவித்துள்ளார். (50-201)

* * *

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட சாந்தை கிராமத்தில் உள்ள விநாயகர் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் திறந்த பாடசாலை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.(50-201)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



சிவானந்த குருக்கள்
சர்வேஸ்வரசர்மா

பிறப்பு: 20.01.1928

இறப்பு: 16.06.2010

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறை தெய்வத்துடன் ஐக்கியமாகி விட்ட என் தெய்வம் சிவானந்தகுருக்கள் சர்வேஸ்வரசர்மா அவர்கள் 16.06.2010 அன்று எம்மை விட்டு பிரிந்தசெய்தி கேட்டவுடன் எம் இல்லத்திற்கு வந்து துயரத்தில் கலந்துகொண்டு ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்கள் அன்னாரின் மாணவ மணிகள், இறுதி நிகழ்வில் பல வழிகளிலும் கலந்துகொண்டவர்கள், இரங்கலுரையாற்றிய பெரியோர்கள், கடிதங்கள் மூலமும் தொலைபேசி மூலமும் என்னை தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம், தமது உணர்வு பூர்வமான அஞ்சலி தெரிவித்தவர்கள் மற்றும் ஐயாவின் இறுதிக் காலங்களில் இயலாமலிருந்தபோது இல்லத்திற்கு நேரடியாக வந்து அவரை அன்புடன் பார்வையிட்டு மருத்துவ உதவிகளையளித்த வைத்தியர்கள், மருத்துவமனையில் பல வழிகளிலும் உதவி செய்தவர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மேலும் அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து உடன் பிறவாத உறவுகள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

33, கடையிற் சுவாமி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (100654)

என்றும் அன்னாரின் நினைவுடன்
மனைவி ருக்மணிதேவி

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை (அன்ரன் மாஸ்ரர்)

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர், நாரந்தனை)



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் (பழைய பூங்கா வீதி) நாரந்தனை பெரியபுலம் வீதியை வசிப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை 13.07.2010 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் திருமதி பேணடேற் அன்ரனிப்பிள்ளையின் (இளைப்பாறிய ஆசிரியர், நாரந்தனை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை மரியாம்பிள்ளை-மரியம்மா (அன்னம்மா) தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான றேமன்ட் ஏபிரகாம்பிள்ளை- ஞானம்மா (நாரந்தனை) தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி ராயேஸ் (தவமணி) போல்பிள்ளையின் (கொழும்பு) அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ரெட்டினம் போல்பிள்ளையின் அன்பு மைத்துனரும் லண்டனில் வதியும் பபி, சாந்தி, எறிக், ஜெயந்தி, பாபு, ஆனந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சேகர், குணம், யகிதா, மகேந்திரன், சிட்னி, ஜெயநாதன் (ராஜா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மரியாம்பிள்ளை (யாழ்ப்பாணம்), வின்சஸ்லோஸ் (கொழும்பு), யோச் (யாழ்ப்பாணம்), பொன்கலன் (சாள்ஸ், யாழ்ப்பாணம்), லிண்டா (லண்டன்) காலஞ் சென்ற சந்திரா (இலங்கை) மற்றும் சறோ (ஜேர்மனி), மரியதாஸ் (அவுஸ்திரேலியா), Dr.ஸ்ரனிஸ்ரோஸ் (லண்டன்), மரியம்மா (யாழ்ப்பாணம்), பிலோமினா (இளைப்பாறிய ஆசிரியர், கொழும்பு) காலஞ்சென்றவர்களான மணி (ஒட்டகப்புலம்), மாகிறெற் (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் சேவியர் (இலண்டன்), இராசநாயகம் (கொழும்பு), அசோகன் (ஜேர்மனி), ஆன் (அவுஸ்திரேலியா), லலிதா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ராஜன் மற்றும் ரூபன் (பிரான்ஸ்), ஜொய்சி (கனடா), ரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாய் மாமனும் துசி, ஜெசி, சுஜீவன், சிராணி, ரெறன்ஸ், பெனி, அனிற்றா, நிரோஸ், நிலக்சி, நிரோயினி, நியோலா, நியான், ரீனா, மைலா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
167, St.ALBANS ROAD,
ILFORD, IG38 NP.

பபி-0044 788 602 4169, சாந்தி-0044 785 990 5915,
எறிக் 0044 782 876 4036, ஜெயந்தி-0044 208 227 0980,
பாபு 0044 785 210 9045, ஆனந்தி-0044 7961501 752




## பாராட்டி வாழ்த்துகின்றோம்

20.06.2010 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி (பொது நிர்வாகம்) பட்டம் பெற்ற யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை அதிபர்

திரு. குலசிங்கம் திலீபன்

*M.A.(Pub Admin.), Dip in Edu, Dip in Teach, S.L.P.S III*

இலங்கை ஜனநாயக குடியரசின் பிரதமர் கௌரவ டி.எம்.ஜெயரட்ணாவிடமிருந்து பட்டச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டதையிட்டு மனம் மகிழ்வதோடு மேலும் பல பட்டங்கள், பதவியுயர்வுகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம். நண்பர்கள்.


## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 38
திகதி - 14.07.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: K — அதிர்ஷ்ட இலக்கம்: 05 — வெற்றி இலக்கம்: 7 0 1 2 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 05 | 7 | 0 | 1 | 2 | 0 | ரூ. 3,280,500.00 | - |
| 1 பரிசு | | 05 | 7 | 0 | 1 | 2 | 0 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 7 | 0 | 1 | 2 | 0 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 0 | 1 | 2 | 0 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | | | | | 1 | 2 | 0 | ரூ. 1,000.00 | 265 |
| 5 பரிசு | | | | | | 2 | 0 | ரூ. 50.00 | 2632 |
| 6 பரிசு | | | | | | | 0 | ரூ. 20.00 | 25174 |


இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | | | | | | தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 7 | 0 | 1 | 2 | | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | | | 7 | 0 | 1 | | | ரூ. 100.00 | 262 |
| 9 பரிசு | | | 7 | 0 | | | | ரூ. 50.00 | 2652 |
| 10 பரிசு | K | | | | | | | ரூ. 20.00 | 10446 |
| 11 பரிசு | K | 05 | | | | | | ரூ. 100.00 | 1214 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,965,200.00

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 13,683,272.00



மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கணனி அறைத் திறப்பு விழா நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் மங்கள விளக்கேற்றிவைத்தபின் கணனி அறையை நாடாவெட்டித் திறந்து வைப்பதை முதலிரு படங்களிலும் சாவகச்சேரி முன்னாள் கோட்டக் கல்வி அலுவலர் நா. சத்தியநாதன் கணனியை இயக்கிவைப்பதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள் : தென்னவன்)

# சகல வசதிகளும் கொண்டதாக யாழ். ஆஸ்பத்திரியை மாற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## புதிய பணிப்பாளர் டாக்டர் பவானி கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 16

யாழ். போதனா வைத்தியசாலையை சகல வசதிகளும் கொண்டதாக மாற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா இறுதியாக வவுனியா வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகராகக் கடமையாற்றினார்.

பணிப்பாளராக நேற்றுக் காலை பதவியேற்ற பின்னர் திருமதி பவானி பசுபதிராஜா கருத்துத் தெரிவிக்கையில்:-

யாழ். போதனா வைத்தியசாலையை சகலவசதிகளும் கொண்டதாக முன்னேற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதுவரை காலமும் யுத்த சூழ் நிலைகளால் பின் தங்கியிருந்த யாழ். மாவட்டம் தற்போது துரித வளர்ச்சி கண்டு வருகின்றது.



அந்த வகையில் யாழ்.போதனா வைத் தியசாலையையும் முன்னேற்றி அதன் மூலம் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவேண்டும். இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகும். நான் எனது மருத்துவத்துறை உயர் கல்வியை யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திலேயே கற்றேன்.

அதன் பின்னர் 1984 ஆம் ஆண்டில் வைத்தியராக வெளியேறி மன்னார், வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் பணியாற்றியுள்ளேன்.

எனினும் தற்போது நான் பட்டப்படிப்பை மேற்கொண்ட இடமான யாழ். மாவட்டத்தில் பணியாற்றுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனவே இம்மக்களுக்கு என்னால் முடிந்த சேவைகளை வழங்குவேன் - என்றார். (50-16)

## புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 16

மாகாண மட்டப் புலமைப் பரிசில் பரீட்சை - 06 நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

குழு ரீதியிலான விடைத்தாள் திருத்துதல், விடைத்தாள் பகுப்பாய்வு என்பன யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறும். (எ)

## நலன்புரி நிலையங்களில் வெப்ப நோய்கள்

சுன்னாகம் , ஜூலை 16

கடும் வெப்பமான காலநிலை நிலவுவதால் சண்டிலிப்பாய் பகுதியில் இடம் பெயர்ந்தவர்களுக்கான நலன்புரி நிலையங்களில் வெப்ப நோய்கள் பரவி வருகின்றன.

இப்பிரதேசத்தில் பலருக்கும் கண் நோய் ஏற்பட்டுள்ளதுடன் கூகைக்கட்டு, கொப்புளிப்பான் முதலிய நோய்களும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50-38)




## மது போதையில் பேருந்து செலுத்திய சாரதிக்கு நீதிமன்றம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூன் 16

மதுபோதையில் பயணிகள் பேருந்தைச் செலுத்திய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வவுனியா - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்தின் சார திக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை கடந்த 14 ஆம் திகதி விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் செ.கண பதிப்பிள்ளை சாரதியை எச்சரிக்கை செய்ததுடன் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (50-207)

## பக்தி இசை இறுவட்டு நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 16

புத்தூர் மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ் வரி அம்பாள் மீது பாடப்பெற்ற பக்தி இசை இறுவட்டின் 2 ஆம் பாக வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

ஆலயத் தலைவர் இ.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு வாழ்த்துரையை வலி.கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் வழங்க உள்ளார்.

வெளியீட்டு உரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் நிகழ்த்த உள்ளார்.

ஆய்வுரைகளை பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞர். சோ.பத்மநாதன், சங்கீத வித்துவான் ஏ. கே.கருணாகரன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர். (50-121)

## உள்ளூராட்சி உதவியாளருக்கான விசேட கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் இடம்பெறும்.

மேற்படி கூட்டம் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தலைமையில் இடம் பெறும்.

நகரசபை, பிரதேச சபை மாநகர சபை ஆகியவற்றில் கடமையாற்றும் அனைத்து உள்ளூராட்சி உதவியாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் கேட்டுள்ளது. (50-302)

## 'என்னையும் கவனியுங்கள்!' இறங்கு துறையின் கெஞ்சுதல் இது!

கொழும்புத்துறை,ஜூலை 16

மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படும் கொழும்புத்துறை இறங்கு துறையை புனரமைத்துத் தருமாறு அப் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த கால போர் நடவடிக்கைகளால் சேதமடைந்து கவனிப்பாரின்றி இருக்கும் இந்த இறங்கு துறையைப் புனரமைப்பதன் மூலம் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களின் முயற்சிகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்று மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை பூநகரி - யாழ்ப்பாணம் கடல்வழிப் போக்கு வரத்தை மேற்கொள்ள இந்த நிரந்தர இறங்கு துறையை பயன்படுத்த முடியும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. (எ-135)

## வலி .மேற்குப் பிரதேச சபையின் நடமாடும் சேவை இன்று

யாழ்ப்பாணம் ,ஜூலை 16

வலி. மேற்குப் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 6 விடயங்களை முன்வைத்து நடமாடும் சேவையை மேற்கொள்ளவுள்ளது.

சுழிபுரம்- சங்கானை ஆகிய உப அலுவலகங்களின் கீழ் ''மக்கள் பயன்பாட்டு சேவை'' எனும் தலைப்பின் கீழ் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9மணிக்கு சுழிபுரம் உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி குகாநந்தி தலைமையில் பாண்டவேட்டை திருநாவுக்கரசு ச.ச. நிலையத்திலும் சங்கானை உப அலுவலக பொறுப்பதிகாரி து. கிருபாகரன் தலைமையில் தொல்புரம் - மாவடி ச.ச. நிலையத்திலும் இடம்பெறும்.

இதில் மக்கள் ஆதனப் பெயர் மாற்றம், கட்டட விண்ணப்பங்கள், ஆதனவரி, நீர்வரி, வியாபாரவரி, வாகன, விலங்குவரி என்பன தொடர்பான விடயங்களில் பயன்பெறலாம் என சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்துள்ளார். (50 -302)

## திருவுளச் சபையின் புதிய முதல்வராக அருட்திரு டண்ஸ்ரன் அடிகள்

கொழும்புத்துறை,ஜூலை 16

கத்தோலிக்க திருச்சபையின் துறவள சபைகளில் ஒன்றான திருவுளப் பணியாளர் சபையின் முதல்வராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குருவானவர் முதல் முறையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கனடாவில் தலைமைப் பீடத்தைக் கொண்டு 20 க்கும் மேற்பட்ட நாடுகளில் பணியாற்றி வரும் இச்சபையின் புதிய முதல்வராக இலங்கைத் திருவுளப் பணியாளர் சபைக்குருவும் யாழ். சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அருட்திரு ஜேம்ஸ் டண்ஸ்ரன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இச்சபை ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகளில் கனடாவுக்கு வெளியே இருக்கும் குருவானவர் ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

சில்லாலையைச் சேர்ந்தவரும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பொறியியல் பகுதி உயர் அதிகாரியுமான இராஜதுரை றேமன் செல்வரட்ணம் - புஸ்பம் தம்பதியரின் புதல்வனான இவர் கொழும்புத்துறை, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (50-135)

## மின்சாரம் தடைப்படும் தருணத்தில் கைவரிசை காட்டும் திருடர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை16

மின்சாரம் தடைப்படும் சந்தர்ப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி யாழ். நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் திருடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.நகரில் மின்சாரம் தடைப்பட்டதைப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிள் ஒன்றை திருடுவதற்கு முயற்சித்த திருடனின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மின்சாரம் திடீரெனத் தடைப்பட்டது.

இந்தத் திடீர் மின்சாரத் தடையால் யாழ். நகர் சில நிமிடங்கள் இருளில் மூழ்கியது.

இந்த இருளைப் பயன்படுத்தி கஸ்தூரியார் வீதியில் நகைக்கடை ஒன்றின் முன்பாகத் திருடன் ஒருவன் அவசர அவசரமாக வீதியோரத்தில் நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளைக் கள்ளத் திறப்பைப் பயன்படுத்தி திருடிச் செல்ல முயற்சித்தான்.

இந்த வேளையில் திடீரென மின்சாரம் ஒளிர்ந்தது. மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் திருடனைக் கண்டு கூக் குரல் போடத் திருடன் ஓடிச் சென்று தலைமறைவானான்.

இதனால் அப்பகுதி சிறிது நேரம் பரபரப்பாக இருந்தது. (50-224)

# இடிந்த மண் வகுப்பறைகளில் மூடுண்டிருக்கும் காயங்கள்

**யுத்தமும் வறுமையும் இந்த கிராமங்களை நீண்ட காலமாக பாதித்து வந்திருக்கின்றன. இழப்புக்கள் எல்லா விதத்திலும் இந்த மாணவர்களைச் சுற்றியிருக்கிறது. இடிந்து காயமடைந்த பாடசாலைகளில் எந்தவிதமான வசதிகளும் அற்ற நிலையில் இருக்கும் இந்தப் பிள்ளைகளின் முகங்கள் என்னை மிகப் பெரிய துயரத்திற்கு உள்ளாக்கின என்று குறிப்பிடும் கட்டுரையாளர் கடந்த 12 ஆம் திகதி தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை மற்றும் அக்கராயன் அ.த.க பாடசாலை முதலியவற்றுக்கு சென்ற பின்னர் இடிந்த மண் வகுப்பறைகளுக்குள்ளும் மரங்களுக்கு கீழாகவும் இருக்கும் மாணவர்களின் நிலவரங்கள் குறித்து இந்த விபரணக் கட்டுரையைத் தருகிறார்**

போர் அந்த மக்களை மீண்டும் மீண்டும் துன்புறுத்தியிருக்கிறது. தீராத வறுமை சாபமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. இப்படியும் சில பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்பதை யாரும் அறியும் பொழுது துயர்மிகுந்து வியப்படையலாம். இப்படியும் சில பள்ளிக்கூடங்கள் மீளத் தொடங்குகின்றன என்பதை யாரும் அறியும் பொழுது வலிமிகுந்து ஆச்சரியமடையலாம். சொந்த நிலத்திற்கு மீண்ட மகிழ்ச்சியின் கோடுகளும் யுத்தம் பெரு இடியாய்த் தந்துவிட்டுப்போன துயரின் கோடுகளும் இவர்களின் முகங்களில் ஆழமாகத் தெரிகின்றன.



முதலில் ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலைக்குச் சென்றேன். வாசலுக்கு போனபொழுது அந்தப் பாடசாலை இழப்பின் வலிகளை உணர்த்திக்கொண்டிருந்தது. உள்ளே பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கிறார்களா? என்று அங்கிருந்த ஆசிரியரைக் கேட்டேன். ஆம் வகுப்புக்கள் தொடங்கிவிட்டன என்று சொன்னார். விறுவிறுவென வகுப்பறைகளுக்குச் சென்ற பொழுது மாணவர்கள் வெறுந்தரையில் தங்கள் புத்தகப் பைகளை மடியில் வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பாடசலையின் ஒரே நிரந்தரக் கட்டிடம் எறிகணைத் தாக்குதல்களின் காயங்களுடன் காணப்பட்டது.

**தீபச்செல்வன்**

அங்கிருந்த அனைத்து மாணவர்களின் முகங்களும் வறுமையையும் யுத்தம் தந்த காயங்களையும் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. சிறுவர்கள்தான் இங்கே கூடுதலாக படிக்கிறார்கள். சிறுவர் நேயப்பாடசாலை என்று அந்தப் பாடசாலையின் அறிவிப்பு பலகையில் இருந்த எழுத்துக்கள் அழிந்து போயிருக்கின்றன. அன்பும் ஆதரவும் கருணையும் கல்வியும் தேடும் இந்த பகுதி மாணவர்களின் வார்த்தைகள் என்னை மிகவும் துயரமடைய வைத்தன. காலமும் சூழலும் இந்தப் பிள்ளைகளைப் பல வகையிலும் வதைத்துக் கொண்டிருக்கின்றன.

பாலசுப்பிரமணியம் அனுசியா என்ற மாணவியின் முகத்தில் துயரத்தின் கோடுகள் தெரிந்தன.

“நான் தரம் ஏழில் கல்வி கற்கிறேன். அம்மா மரியம்மாவும் அப்பா பாலசுப்பிரமணியமும் முள்ளி வாய்க்காலில் நடந்த எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டு விட்டார்கள். அண்ணா ஒருவர் தடுப்பில் இருக்கிறார். 15 வயதான அக்காதான் எங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார். மிகவும் வறுமையுடன் யாருடைய ஆதரவுமற்ற நிலையில் வாழுகிறோம்”

அனுசியா வார்த்தைகளை உதிர்த்தபடி விம்மி விம்மி அழத்தொடங்கினாள். இந்த கிராமத்தில் யுத்தத்தில் பல பிள்ளைகள் தாயை அல்லது தந்தையை இழந்திருக்கிறார்கள். அங்கு நான் சந்தித்த மற்றொரு மாணவி ஜெகதீஸ்வரன் அனுசா தரம் ஆறில் படிக்கிறார். அவரது தாய் யுத்தத்தில் கொல்லப்பட்ட பின்னர் அவரது தந்தை இந்தக் குழந்தைகளைக் கைவிட்டு வேறு திருமணம் செய்து கொண்டுள்ளார். யுத்தம்தான் எங்கள் குடும்பத்தை சீரழித்தது. எங்களை அனாதைகளாக்கியது என்ற அனுசாவின் வார்த்தைகள் மிகுந்த துயரத்தைத் தந்தன.

தரம் ஏழில் கல்வி கற்கும் யோகவேல் யசிகௌரி என்ற மாணவி தனது தாயார் நாகம்மாவும் அக்கா தீபதர்சினியும் போரிலிறந்து போனதாகக் குறிப்பிட்டார். கந்தசாமி கிருசாந்தினியும் தனது தந்தை போரில் இறந்து போனதாகவும் அண்ணா ஒருர் தடுப்பில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

“அம்மா இராசலட்சுமி வீட்டில் இருக்கிறார். எந்த வருமானமும் தொழிலும் இல்லை. ஒருவேளை உணவிற்கே பெரிய கஷ்டப் படுகிறோம். அப்பா இருக்கும் பொழுது கூலி வேலை செய்து எங் களைப் பார்ப்பார். அண்ணா இருந் தால்கூட எங்களுக்கு கஷ்டமிருக்காது. பட்டினியுடன் இப்பொழுது பாடசாலைக்கு வருகிறேன்”

பின்தங்கிய கிராமங்களாக இருக்கும் ஊற்றுப்புலம் போன்ற கிராமங்கள் கடந்த பல வருடங்களாக பொருளாதார ரீதியான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன. அங்கு வாழும் மக்கள் மிகவும் வறுமையான மக்கள். நோய் துன்பம் என்று கடந்த கால நெருக்கடிகள் பல விளைவுகளை இந்த மக்களுக்கு வழங்கியிருக்கிறது. நான் அங்கு சந்தித்த பல மாணவர்களின் தாய் அல்லது தந்தை நோய் காரணமாகவும் இறந் திருக்கிறார்கள். காய்ச்சல், எலும்புருக்கி நோய், புற்றுநோய் போன்ற நோய்களினால் பல பிள்ளைகள் அநாதைகளாக்கப்பட்டுள்ளார்கள். நோய்ப்பாதிப்பிற்குள் ளாகி தாய் இறந்த பின்னர் தந்தை வேறு திருமணம் செய்து கொண்டு பிள்ளைகளை அநாதைகளாக கைவிட்டிருக்கிறார்கள். பாம்புக்கடியால் தனது தாயை இழந்து போயிருப்பதாகவும் மற்றொரு மாணவன் குறிப்பிட்டான்.

கடந்த வன்னி யுத்தத்தினால் இடம்பெயர்ந்த இந்தப்பாடசாலை கடந்த மாதம் 28ஆம் திகதி முதல் இயங்கத் தொடங்கியிருக்கிறது. 800இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்ற இந்தப் பாடசாலையில் தற்பொழுது 150 வரையிலான மாணவர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஏழு ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கிறார்கள். சாதாரணதர வகுப்பு வரை நடைபெற்ற பொழுதும் தற்பொழுது 9ஆம் வகுப்பு வரை மட்டுமே

## இரண்டு வன்னிப் பாடசாலைகளின் நிலைமை

பிள்ளைகள் வந்து இணைந்திருக்கிறார்கள்.

தற்பொழுது இந்தப் பள்ளி அதிபர் இல்லாமல் இயங்குகிறது. இராணுவ முகமாக பாவிக்கப்பட்ட



இந்தப் பாடசாலையின் தற்காலிக கொட்டகைகள் அழிந்துவிட்டன. மாணவர்களுக்கு கதிரை மேசைகள் இல்லை, அதிபருக்கு அலுவலகம் இல்லை. கதவுகள் இல்லை. இப்படிக் கைவிடப்பட்ட நிலையில் சிதைந்த அடையாளங்களுடன் இருக்கும் இந்தப் பள்ளியில் துயர் படிந்த முகங்களுடன் மாணவர்கள் வந்திருக்கிறார்கள்.

பின்னர் கோணாவில் பாடசாலை என அழைக்கப்படும் அக்கராயன் அ.த.க. பாடசாலைக்குச் சென்றேன். கோணாவில் கிராமசேவையாளர் பிரிவில் மக்கள் குடியேற்றப் பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் 5ஆம் திகதி முதல் பாடசாலை மீள ஆரம்பித்திருக்கிறது. பாடசாலை தொடங்கிய முதல்நாள் 120 மாணவர்கள் வந்து இணைந்ததாக பாடசாலை முதல்வர் இருதயதாஸ் குறிப்பிட்டார். மரத்தின் கீழாக உள்ள மேசை ஒன்றை அலுவலகமாக்கி கூரையற்ற அலுவலகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தார். தற்பொழுது 529 மாணவர்களும் 9 ஆசிரியர்களும் மீள இணைந்திருப்பதாக முதல்வர் குறிப்பிட்டார். இந்தப் பாடசாலைக்குரிய யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மீள வந்து மாணவர்களது விடுபட்ட கல்வியை கற்க உதவ வேண்டும் என அங்குள்ள ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார்.

பாடசாலையின் முன்பாக மர நிழலில் அருகருகாக இரண்டு வகுப்புக்கள் மிகச் செறிவாக நடந்து கொண்டிருந்தன. ஆசிரியர் ஒருவர் அர்ப்பணிப்புடன் கல்வி கற்பித்துக் கொண்டிருக்க மாணவர்கள் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எற்கனவே ஓலைகளால் வேய்ந்து வேய்ந்து இயங்கிக் கொண்டிருந்த இந்தப் பாடசாலையின தற்காலிக வகுப்பறைகள் ஏழு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வானம் தெரியும் சிதைந்த தற்காலிக கொட்டகைகளினுள்ளும் சுவர்களற்ற சிதைந்த வகுப்பறைகளினுள்ளும் மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். நீலமேகம் யோகப்பிரியா என்ற மாணவி தனது ஒற்றைக் கண்ணில் எறிகணைக் காயம்பட்டு முற்றாக கண் பார்வையிழந்த நிலையில் இருந்தார். தனது கண்ணைப் பறித்த ஷெல் தனது தந்தையின் உயிரையும் கொண்டு சென்றதாகக் குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் பல தடைகள், அச்சுறுத்தல்கள் மத்தியில் சாதனைகளை நிகழ்த்தி அபார வளர்ச்சியைக் காட்டிய இந்தப் பாடசாலை இப்பொழுது பூச்சிய நிலையில் கை பிசைந்து கொண்டு நிற்கிறது. சிறுவர் நேயப் பாடசாலையான இந்தப் பாடசாலை தொடர்பாக உரிய வகையில் உடனடியாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டியிருக்கிறது. மாணவர்களின் கல்வி மற்றும் மனநிலை சார்ந்து அவற்றைப் பாதுகாக்க வேண்டியவர்களும் மேம்படுத்த வேண்டியவர்களும் தங்கள் கவனத்தைச் செலுத்தி வேலைகளைச் செய்து போரினால் அனைத்தையும் இழந்த பிள்ளைகளின் எதிர்காலத்தை பிரகாசமாக்க ஒத்துழைக்க வேண்டும். ★★★★★

# அமரர் தொண்டமானின் சாணக்கியத்தாலேயே மலையக மக்களின் நாடற்ற பிரச்சினை தீர்ந்தது!

## பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் பெருமிதம்

பதுளை, ஜூலை 16

''இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் அரசியல் சாணக்கியம் காரணமாக தோட்டத் தொழிலாளர்களின் நாடற்ற பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. அவர்களுக்கென கணிசமான அரசியல் பிரதிநிதிகளும் உருவானார்கள்''

- என்று இ.தொ.கா. தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

அண்மையில் பதுளை மாவட்டத்திலுள்ள தோட்டங்களுக்கு பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் விஜயம் செய்திருந்தார்.

அங்கு தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது மக்கள் சகல வசதிகளுடனும் வாழவேண்டும் என்பதே தொண்டமானின் நோக்கமா இருந்தது. மக்களுக்கான வேலைத் திட்டங்களை எவ்வளவு விரைவாக மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக மேற்கொண்டு மக்களின் மனதில் நிலையான இடத்தைப் பிடித்தவர் அவர்.

பெருந்தோட்ட மக்களின் அடிப்படைத் தேவையான தண்ணீர், மின்சாரம், கல்வி, சுகாதாரம், குடியிருப்பு வசதி, பாதைகள் மற்றும் பொருளாதார வசதிகளை மேம்படுத்த இ.தொ.கா. தன்வசமுள்ள அமைச்சுகள் மூலம் முடியுமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அவற்றில் முக்கியமாக பெருந்தோட்ட சமூகத்தின் அடிப்படை அத்தியாவசிய தேவையான குடியிருப்பு பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும், நானும் முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகின்றோம்.

மலையக மக்களின் தேவைகளைக் காலத்துக்கு காலம் இனம் கண்டு அவற்றை செயற்படுத்துவதே எமது குறிக்கோள்.

ஆனால், இன்று அரசியலில் ஈடுபட்டுள்ள சிலர் தாம் சார்ந்த ஊடகங்களில் தம்மை சமூக சேவகர்களாகவும், மக்கள் நலன் விரும்பிகளாகவும் வெளிக் காட்டிக் கொள்கின்றனர்.

வாக்களித்த மக்களுக்கு எதுவுமே செய்யாமல் வாய்ச்சாதுர்யம் மூலம் மக்களை ஏமாற்றுகின்றனர். நாடாளுமன்றம் சென்றுள்ள அவர்கள் இன்றுவரை மக்களுக்காக எதுவுமே செய்யவில்லை. ஏதேனும் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்கில்லை. மற்றவர்களைத் தூற்றுவதுதான் வேலை மலையகத்தில் இ.தொ.கா. மாபெரும் விருட்சம். அதை அழிக்க நினைத்தவர்கள் அழிந்து போனதே சரித்திரம். ஆண்ட சரித்தி ரம் இல்லை. இவர்களின் நிலையும் அதேதான். அவர்களுக்கு நான் சொல்வது என்ன வென்றால்,

''நம்பி வாக்களித்த மக்களுக்கு ஏதேனும் செய்ய முயலுங்கள். மற்றவர்களைத் தூற்றுவதற்காக மக்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லை. மக்களின் தேவைகளை சந்தர்ப்பம் கிடைக்கும் இடங்களில் எடுத்துரையுங்கள். மீனுக்கு தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் உங்கள் புத்தியை விட்டுவிடுங்கள்.

சமூக நலனுக்காகச் செயற்படுங்கள். சிறுபான்மை இனத்தைக் காட்டிக் கொடுத்து பெரும்பான்மை இனத்தவரிடம் குளிர்காய்வதே உங்களின் வேலையாகிவிட்டது. இவ்வாறான செயல்கள் உங்களுக்கு நன்மை அழிக்காது. அழிவையே தரும்'' என்பதுதான்.

யார் எப்படிச் செயற்பட்டாலும் பரவாயில்லை. இ.தொ.கா. மலையக மக்களின்




தேவைகளையும், சேவைகளையும் எண்ணியே அன்று முதல் இன்றுவரை செயற்பட்டு வருகின்றது - இப்படி பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சின் உயரதிகாரிகளும்.கலந்துகொண்டனர். (ஸ்ரீ)

# பன்விலை மலைச்சாரலில் இருக்கும் பைனஸ் மரங்களை தறிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 16

பன்விலை மலைச்சாரலில் நீர் மற்றும் நிலவளங்களைப் பாதித்து, சுற்றாடலுக்குச் சவாலாக உள்ள பைனஸ் மரங்களை வெட்டி வீழ்த்துவதற்கு வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளது.

மத்திய மலை நாட்டில் மொத்தம் 16,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பைன்ஸ் மரங்கள் காணப்படுகின்றன. இவை மலை நாட்டின் இயற்கை வளங்களைப் பெருதும் பாதித்து வருகின்றன.

எனவே இவற்றை அழித்து விட்டு பயன்தரக்கூடிய பெறுமதியான மரங்கள் நடப்பட உள்ளன என வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் 180 ஹெக்டேயர் வீதம் பைனஸ் காடுகளை அழிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)

# பின்னவலை - கரன்டுப்பொன வீதி 20 கோடி ரூபா செலவில் புனரமைப்பு

கண்டி, ஜூலை 16

பின்னவலை - கரன்டுப்பொன வீதியை அபிவிருத்தி செய்வதற்காக அரசு இருபது கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பொருளாதார அமைச்சராகப் பெறுப்பேற்ற பஷில் ராஜபக்ஷ பின்னவலை யானைகள் சரணாலயத்திற்கு அண்மையில் விஜயம் செய்திருந்தார்.

இதன்போது இந்த வீதியின் அபிவி ருத்திக்கு நிதி ஒதுக்கப்படும் எனத் தெரிவித்தார். அதற்கமைய இந்த நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி - கொழும்பு பிரதான வீதியின் கரன் டுப்பொன சந்தியிலிருந்து பின்னவலை வரை யிலான இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட் டன.

சுமார் எட்டுக் கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி கார்பட் முறையில் புனரமைக்கப் பட்டு வருகின்றது. புனரமைப்புப் பணிகள் ஆரம்ப வைபவத்தில் சப்ரகமுவ முதலமைச்சர் மஹிபால ஹேரத் மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஸ்ரீ)

# பிரதேச வைத்தியசாலைகளுக்கு இரசாயன, சத்திர சிகிச்சைப் பிரிவுகள்

கொழும்பு, ஜூலை 16

மத்திய மாகாணசபையின் கீழ் இயங்கி வரும் 170 பிரதேச வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் இரசாயனக் கூடங்களை அமைக்க மத்திய மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

இதற்கென அமைச்சு 70 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சாந்தி சமரசிங்க தெரிவித்தார்.

கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு இவ்வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

இதன்மூலம் அதிக எண்ணிக்கையான நோயாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்க முடியும். அத்தோடு அவர்களது கால, பண விரயங்களையும் குறைக்கமுடியும் - என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# அரசியல்வாதிகளுக்கு இடையில் பொறாமை இருக்கக் கூடாதாம்!

## ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 16

''அரசியலில் இருப்பவர்கள் ஓர் அரசியல் வாதி இன்னொரு அரசியல் வாதியுடன் பொறாமைப்படுவதை தவிர்க்க வேண்டும். அது அவர்களின் அரசியல் வாழ்க்கையையே அழித்துவிடும்.''

- இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனையில் இடம்பெற்ற முப்பெரும் விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'நிக்டெப்' நிறுவனத்தின் ரூபா 4.5 கோடி செலவில் கல்முனைக் குடியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீன சந்தைக் கட்டடத் தொகுதித் திறப்பு விழா, கல்முனை மாநகர முதல்வர் எம்.இஸட் எம்.மசூர் மௌலானாவுக்கு முதல்வருக்கான அங்கி அணிவிப்பு, கல்முனை மண் பெற்றெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸுக்கு வரவேற்பு ஆகிய மூன்று நிகழ்வுகள் இந்த முப்பெரும் விழாவில் இடம்பெற்றன.

கல்முனைக்குடி பிரதான வீதி அலங்கார மேடையில் கல்முனை மாநகர உறுப்பினர் நிசார் தலைமையில் இந்த முப்பெரும் விழா நடைபெற்றது.

எச்.எம்.எம்.ஹரீஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

''கடந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கல்முனைக்குடி மக்களுக்கு இறைவரிக் கண்டத்தில் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் மின்சாரம், தண்ணீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. எமது மக்கள் என்னை நம்பி இந்தத் தேவைகளை நிவர்த்தி செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால், எதிர்க்கட்சியில் இருக்கின்றேன் என்று கூறி என்னால் விலகிக் கொள்ள முடியாது.

அதனால் நான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் அனுமதியுடன் இந்த அரசினால் எனக்கு அறிமுகமான அமைச்சர்களின் உதவியுடன் எம்மக்களுக்கான சேவைகளை செய்ய எண்ணி யுள்ளேன். இதனடிப்படையில் தான் இறைவரிக் கண்ட வீட்டுத் திட்ட மக்களுக்கான மின்சாரம், தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்துப் பேசினேன். அவர் உடனடியாக தனது அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்ததைய டுத்து, அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும் சாய்ந்தமருது றியாலுல் ஜின்னாஹ் வித்தியாலயத்திற்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இளைஞர் தொழிற் பயிற்சி நிலையத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் என்னை வந்து கேட்டுக் கொண்டனர். அதற் கிணங்க அதற்கு பொறுப்பான அமைச்சரையும், அத்திணைக்களத் தலைவரையும் சந்தித்துப் பேசினேன். சாய்ந்தமருது இளைஞர் தொழிற்பயிற்சி நிலையம் திறப்பதற்குரிய வேலைகள் அமைச்சரின் பணிப்பின் பேரில் துரிதமாக நடைபெற்று வருகின்றன என என்னை வந்து சந்தித்த அதிகாரிகள் கூறினார்கள்.

இந்தத் தொழிற்பயிற்சி மூலம் எமது அம்பாறை மாவட்ட இளைஞர்கள் பல தரப்பட்ட கற்கை நெறிகளைப் பயின்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இறைவரிக் கண்ட வீட்டுத் திட்டத்தையும், பிரதான பாதையையும் இணைப்பதற்கு பாலம் ஒன்று அமைக்க வேண்டியுள்ளது. அதனையும் கூடிய விரைவில் செய்து தருவேன்.

இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள இச் சந்தைக் கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு என்னுடன் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கிய முன்னாள் உயர்கல்விப் பிரதியமைச்சர் மயோன் முஸ்தபாவுக்கு இவ்விடத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த பொதுத் தேர்தலில் அவரும், நானும் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டாலும் மிக நாகரிகமான முறையில் அவரின் தேர்தல் நடவடிக்கையைக் காண முடிந்தது. இது அவரின் அரசியல் முதிர்ச்சியைக் காட்டுகின்றது. - இப்படி ஹரிஸ் எம்.பி. தெரிவித்தார். (ஸ்ரீ)




# சகல பாடசாலைகளிலும் காலையில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும்

## கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு பணிப்பு

அம்பாறை, ஜூலை 16

கல்விச் செயற்பாடுகளை காலை ஆரம்பிக்கும்போது, சகல பாடசாலைகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும் என்று கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சகல அதிபர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

தேசிய கீதத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தி தேசிய ஒருமைப்பாட்டையும், நாட்டுப் பற்றையும் மாணவ சமுதாயத்தினர் மத்தியில் கட்டியெழுப்புவதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட கவனம் செலுத்தி, தத்தமது பாடசாலையில் தினமும் தேசிய கீத இசைப்புக்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இதேவேளை, பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்படும் சகல வைபங்களையும் 90 நிமிடநேரத்துக்குள் மட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அவர் பணித்துள்ளார்.

பாடசாலை வைபங்களுக்கு அதிக நேரம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது; பாட நேரங்களில் விழாக்கள் தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்புக்குள்ளாகின்றன என கல்வியமைச்சிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளமையையொட்டி வைபங்களுக்கு நேரக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# கிழக்கு மாகாண தமிழ்மொழித்தினப் போட்டி இணைப்பு நிலையமாக கல்முனை பாத்திமா

அம்பாறை, ஜூலை 16

கிழக்கு மாகாண தமிழ்மொழித்தினப் போட்டிகளுக்கான இணைப்பு நிலையமாக கல்முனை கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரி இயங்குமென மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிஸாம் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் யாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கல்முனை உவெஸ்லியிலும் பாத்திமா கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து இன்றும், நாளையும் போட்டி யாளர்கள் கல்முனைக்கு வருகை தரவுள்ளனர்.

அவர்கள் தங்குவதற்கான பாடசாலை ஏற்பாடுகளை கல்முனை வலய தமிழ் மொழித்தின செயலாளர் கண.வரதராஜன் மேற்கொண்டு வருகிறார். நடுவர்கள் தங்குவதற்கு மருதமுனை ஷம்ஸ் மத்தியகல்லூரி தயாராக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்கு பரிசுகள், சான்றிதழ்கள் ஆகியவை மறுநாள் விழாவில் வழங்கப்படவுள்ளன.

திங்களன்று செம்மொழிவிழா நடைபெறுவதற்கு காரைதீவில் விரிவான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. (ஸ்ரீ)




16.12.1992

★ வடக்கு, கிழக்கில் யுத்தம் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் உலக திருச்சபைக் கவுன்ஸில் ஈடுபட்டு வருவதாக அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி.வண.மைக்கல் கென்னத் பெர்ணான்டோ தெரிவிப்பு.

★ வடக்கு- கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதால் பாதுகாப்பு நிலைமை முற்றாக அரசின் கட்டுப்பாட்டை மீறும் நிலை ஏற்படும் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்திருப்பதாக கொழும்பு பத்திரிகைகள் சுட்டிக் காட்டு.

17.12.1992

★ஆலங்கேணியில் இருந்து கிளாலி நோக்கி வந்த பயணிகள் படகு ஒன்றின் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் படகில் பயணம் செய்த 7 பொதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

★ இலங்கையில் இடம்பெறும் யுத்தத்திற்குத் தீர்வு காண வேண்டும் என்ற பிரேரணை ஐ.நாவின் நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்படும் சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என அரச கட்டுப்பாட்டுப் பத்திரிகையான ''சண்டே ஒப் சேவர்'' பத்திரிகை தெரிவிப்பு.

18.12.1992

★தொடரும் வடக்கு- கிழக்கு யுத்தத்தால் நாட்டின் பொருளாதார நிலை மோசமடையும் சாத்தியம் உண்டு என சர்வதேச பொருளாதார ஆய்வு நிறுவனம் இலங்கை அரசிற்கு எச்சரிக்கை விடுப்பு.

★ வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் தீர்வொன்றைக் காணமுடியாமல் போய்விட்டதாக அக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க நாடாளுமன்றச் சபாநாயகருக்கு கடிதமூலம் தெரிவிப்பு.

19.12.1992

★அச்சுவேலி, தொண்டமானாறுப் பகுதிகளில் இருந்து இரு முனைகளால் இராணுவத்தினர் முன்னேற முயன்றதை அடுத்து ஏற்பட்ட மோதல் காரணமாக வலி.கிழக்கில் வசித்த பொதுமக்கள் இடம்பெயர்ந்து சென்றதாகத் தெரிவிப்பு.

★ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே விரைவில் போர் நிறுத்தம் ஒன்று ஏற்படவுள்ளதாகவும், திடீர் ஜனாதிபதி தேர்தல் ஒன்று ஏற்பாடாகி வருவதாகவும் அரசியல் நோக்கர்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவிப்பு.

20.12.1992

★ எந்த நேரம் விரும்பினாலும் ஜனாதிபதி பிரேமதாஸவால் ஜனாதிபதி தேர்தலுக்கு உத்தரவிடத்தக்க அதிகாரம் அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்குக் கிட்டியுள்ளதாக சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவிப்பு.

★இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க நாடாளுமன்ற சபாநாயகருக்கு கடிதம் அனுப்பி வைத்திருப்பது ஒருதலைப்பட்சமான நடவடிக்கை என அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவிப்பு.

21.12.1992

★ மன்னார் மாவட்டம்- நானாட்டானில் அரச படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 10 இற்கு மேற்பட்ட படையினர் உயிரிழந்ததாகவும் 40இற்கும் மேற்பட்ட படையினர் படுகாயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிப்பு.

★ நாடு திரும்பியுள்ள முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் அரசு பக்கம் சாய்வாரா? அல்லது எதிர்க்கட்சி பக்கம் சேர்வாரா? என்பது குழப்பமாக உள்ளதாக அரசியல் விமர்சகர்கள் எதிர்வு கூறியுள்ளதாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

22.12.1992

★ இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்த புலிகளின் நிலைப்பாட்டினை அறிந்து கொள்வதற்காக நீதி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் பாரிஸ் நகரிற்கு பயணமானதாகத் தெரிவிப்பு.

★ அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டு வருவதாக சிங்கள நாளேடு 'திவ யின' பத்திரிகை தெரிவிப்பு.

23.12.1992

★ இனப்பிரச்சினைத் தீர்வாக வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் அரசின் முடிவுக்கு ஆட்சேபம் தெரிவித்து அமைச்சர் தொண்டமான் நாடாளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

★ ''தமிழர்களை என்றுமே அடிபணிய வைக்க முடியாது'' என அமைச்சர் தொண்டமான் தெரிவித்ததாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

24.12.1992

★ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரச அமைச்சர் ஒருவருக்கும் இடையில் பேச்சுக்கள் நடந்து வருவதாக கொழும்பில் வெளியான செய்திகளை இரு தரப்பினரும் மறுப்பு.

★அமைச்சர் ஹமீத் திடீரென ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டமையை அரசு இதுவரை உத்தியோகப் பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை எனத் தெரிவிப்பு.

25.12.1992

★ வடக்கு- கிழக்கு யுத்தத்தில் விரைவில் விடுதலைப்புலி இயக்கத்தை வெற்றி கொள்வோம் என கூட்டுப்படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவிப்பு.

★ ஐ.தே. கட்சி, சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கு மேலதிகமாக மூன்றாவது அரசியல் கட்சியொன்றை ஆரம்பிப்பது முட்டாள்தனமானதாகும் என முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் தெரிவிப்பு.

26.12.1992

★ மணலாறில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றில் இரு அதிகாரிகள் உட்பட 40இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

★ கிறிஸ்மஸ் தினமான நேற்று அரியாலைப் பகுதியில் விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஒரு பெண் பலியானதாக பலர் படுகாயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிப்பு.

27.12.1992

★திடீர் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடாத்த ஜனாதிபதி பிரேமதாஸ தயாராகி வருவதாக சிங்கள விமர்சகர்கள் தெரிவிப்பு.

★ இவ்வாண்டில் மட்டும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் 1379 பாதுகாப்பு படையினர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அமைப்பு தெரிவிப்பு.

28.12.1992

★யாழ். மாவட்டத்திற்கு உடனடியாக இரண்டாயிரம் பரல் மண்ணெண்ணையை அனுப்ப கூட்டுப்படைத் தலைவர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

★ இராணுவ நடவடிக்கைகளால் தமது உடமைகளை இழந்த அரச ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்கும் வேலைகள் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவிப்பு.

29.12.1992

★ சமாதானப் பணிகளில் ஈடுபட்டு வரும் குவேக்கர் சமாதான இயக்க அதிகாரிகள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்து நிலைமை குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிப்பு.

★யுத்தம் காரணமாக இலங்கை உடனடி ஆபத்தில் சிக்கியுள்ளது என சர்வதேச தொண்டு நிறுவனமான எம்.எஸ்.எவ் அமைப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கை மூலம் தெரிவிப்பு.

30.12.1992

★ அடுத்த ஜனாதிபதித் தேர்தல் அதற்குரிய காலமாக 1994 டிசெம்பர் மாதத்தில்தான் நடத்தப்படும் என ஜனாதிபதி பிரேமதாஸ அறிவிப்பு.

31.12.1992

★பாவனைக்கு உதவாத ''புக்காரா'' ரக விமானங்கள் நான்கை விமானப் படைக்கெனக் கொள்வனவு செய்தது 96 கோடி ரூபா பணம் தரகுக் கூலியாக உள்ளூர் தரகர் ஒருவருக்கு வழங்கப்பட்டதாகவும் ஐ.தே.க வின் தேர்தல் செலவிற்கு அப்பணம் பயன்படுத்தப் படக் கூடும் எனவும் ''ராவய'' பத்திரிகை தெரிவிப்பு.

# 4 லட்சத்து 37,000 றியால் கொள்ளை: கட்டாரில் இலங்கையர்களுக்குச் சிறை

கொழும்பு,ஜூலை16

டோஹா கட்டாரில் வங்கித் தன்னியக்க இயந்திரத்தை உடைத்து பெருந் தொகைப் பணத்தைக் கொள்ளையிட்ட இலங்கையர்களுக்கு அந்நாட்டு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நவம்பர் மாதம் வங்கித் தன்னியக்க இந்தியரமொன்றை மிகவும் நுட்பமான முறையில் உடைத்து பணம் களவாடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர்.வழக்கு விசாரணைகளின் போது குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

இயந்திரத்தை நுட்பமான முறையில் உடைத்துப் பணத்தை எடுத்தவர்களுக்கும், பணத்தைப் பாதுகாப்பாக பதுக்கி வைத்தவர்களுக்கும் தலா ஓராண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தன்னியக்க இயந்திரத்தை உடைத்து 4 லட்சத்து 37 ஆயிரம் கட்டார் றியால்கள் களவாடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தன்னியக்க இயந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனத்தில் பணியாற்றிய இரண்டு இலங்கையர்களே இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர்.

தொழில்நுட்ப அறிவுடையவர்களே இந்தக் கொள்ளைச்சம்பவத்தை மேற்கொண்டிருக்க வேண்டும் என்ற யூகத்தின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன எனவும், இதனால் இலகுவில் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடிந்தது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(சி)

# உலகின் விமானியில்லா முதல் போர் விமானம்

## பிரிட்டன் வெற்றிகரமாகத் தயாரிப்பு

லண்டன்,ஜூலை16

கண்டம் விட்டு கண்டம் சென்று எதிரி இலக்குகளை மிகச் சரியாகத் தாக்குவதற்கும், எதிரி நாட்டு போர் விமானங்களை வழியில் மறித்துத் தாக்குவதற்கும் திறன் கொண்ட உலகின் முதல் விமானியில்லா போர் விமானத்தை பிரிட்டன் தயாரித்துள்ளது.

'தரானிஸ்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விமானத்தின் சோதனை விமானத்தை பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறை செவ்வாய்க் கிழமை வெளியுலகுக்கு முதன்முறையாகக் காட்டியது.

எதிரி நாட்டு ரேடார்களில் சிக்காத தொழில்நுட்பம் கொண்ட இந்த விமானத்தை இயக்க விமானிகள் தேவையில்லை. தரையில் இருந்தவாறு ரேடியோ கண்டக்ட் மூலம் விமானத்தின் ஒவ்வொரு அசைவையும் கட்டுப்படுத்தலாம். ஏவுகணைகளை வீசலாம். குண்டுகளை வீசித் தாக்கலாம்.

விமானத்திலுள்ள புகைப்படக் கருவிகளின் உதவியோடு தரைக் கட்டுப்பாட்டு அறையின் திரையில் விமானத்தின் பாதையை தீர்மானிக்கலாம், மாற்றலாம். விமானம் எதிர்கொள்ளும் ஆபத்துகளை உடனுக்குடன் அறியலாம். தாக்கவரும் விமானத்தை, ஏவுகணையை எதிர்த்து எவுகணையைச் செலுத்தலாம்.

விமானியின் துணை இல்லாமலேயே, மிக நீண்ட தூரம், கண்டம் விட்டுக் கண்டம் கூட செல்லும் திறன் வாய்ந்த இந்த விமானம், போர் விமானங்களில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் என்று தெரிகிறது.

இதுவரை ஆளில்லா உளவு விமானங்கள் தான் போர் முனைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த விமானங்களில் சமீபகாலமாக ஏவுகணைகளையும் பொறுத்தி அவ்வப்போது ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்கா குண்டுவீச்சையும் நடத்தி வருகிறது.

ஆப்கானிஸ்தான் இராணுவத் தளங்களிலிருந்து கிளம்பும் இந்த விமானங்களை அமெரிக்காவில் இருந்தபடி பாதுகாப்புத் துறையினர் கட்டுப்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முழுக்க முழுக்க ஆளில்லாமல் இயங்கும் இந்த 'தரானிஸ்' போர் விமானத்தையே பிரிட்டன் தயாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

'தரானிஸ்' என்றால் இடியைக் குறிக்கும் கடவுளின் பெயராம்.

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 16

தரம் 9 வகுப்பிற்கான சுகாதாரமும் உடற்கல்வியும் தொடர்பான செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் யாழ்.வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இரண்டு பிரிவாக யாழ்.ஆசிரிய வள நிலையத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வில் கலந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்ட ஆசியர்களுக்கு கடிதங்கள் மூலம் இச் செயலமர்வு விவரம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-314-315)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 03 ★ 04 1938 |  | 26 ★ 06 2009 |

**வைத்திலிங்கம் கணேசலிங்கம்**

**திதி : 16-07-2010**

அன்பின் இருப்பிடமாய் பண்பின்
பிறப்பிடமாய் ஆண்டு ஒன்று சென்றாலும்
எம்முள் வாழ்ந்து கொண்டிருக்கும்
எங்கள் அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

8B, 1/1, Pereira Lane, Wellawatte.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




புஷ்டியான உடலைப் பெற...

சொக்லட் மற்றும் வனிலா சுவை கொண்ட வெயிட் கெய்னர், அதில் அடங்கியுள்ள தீவிர செயற்பாட்டுச் சேர்வை மூலம் அவசியமான போஷாக்கை வழங்கி, உங்களது நேர்த்தியான உடல் வளர்ச்சிக்கு உதவும் மெலிந்த தோற்றமுடைய நீங்கள் முற்றிலும் வித்தியாசமான, புஷ்டியான உடலழகை பெறுவீர்கள்.

வெயிட் கெய்னர்


Hotline 0777 536 796

Manufactured under licence from Edge USA



# மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் திருத்தலம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



ஆலயத் திருப்பணி வேலைக்காக காடு ஒன்றில் மரம் தறித்த வேளையில் வன இலாகா உத்தியோகத்தர்களால் பிடிக்கப்பட்டு நீதிபதி முன் நிறுத்தினர். மரம் தறித்தமைக்காக முதலியாரையும் அவருடன் சென்றவர்களையும் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

அன்றிரவு திடீரென நீதிபதியின் மனைவிக்கு முடத்துநோ எனப்படும் தொண்டை வியாதி ஏற்பட்டு உணவு, நீராகாரம் எதுவுமின்றி சிறந்த மருத்துவர்களால் குணமாக்க முடியாததால் பெரிதும் கஷ்டப்பட்டுள்ளார். நோய் அதிகரித்துச் சென்றதே தவிர குறைந்ததாகத் தெரியவில்லை. ஒரு நாள் இரவு நீதிபதியின் கனவில் முதலியார் உருவத்தில் தோன்றி "ஆலயத் திருப்பணிக்கே மரங்கள் தறிக்கப்பட்டதாகக் கூறினார்.''

மறுநாள் முதலியாரை விடுவித்த நீதிபதி ஆலயத்திற்குத் தனது மனைவியை அழைத்து வந்து முதலியார் கையால் விபூதி வாங்கி மனைவியின் கழுத்தில் பூசியதும் நோய் குறையத் தொடங்கியது. தனது பிழையை மன்னிக்குமாறு பிள்ளையாருக்கு பட்டுக்குடையையும் வாங்கிக் கொடுத்தார்.

ஆலயம் கட்டப்பட்டு இரு வேளை பூஜைகள் நடைபெற்று வந்த காலத்தில் அம்பலவாணி என்ற திருடன் ஆலயத்தினுள் நுழைந்து அங்கிருந்த பொருள்களை எடுத்துக் கொண்டு வெளியே வந்ததும் அவனுடைய கண் ஒளி மங்கியது. என்ன செய்வதென அறியாமல் அங்கு நின்ற செண்பக மரத்தில் ஏறி இருந்தான். அப்போது ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்த நொத்தாரிஸ் சரவணமுத்து என்பவரின் கனவில் பிள்ளையார் தோன்றி கள்வன் ஒருவன் ஆலய பொருள்களுடன் செண்பக மரத்தில் இருக்கிறான். அங்கு சென்று பொருள்களை வாங்கிக் கொண்டு அவனுக்கு விபூதி கொடு அவனுக்கு ஒன்றும் செய்யாதே என திருவாய் மலர்ந்தார்.

விடிந்ததும் ஆலயத்திற்குச் சென்ற தர்மகர்த்தா மரத்தில் திருடன் இருப்பதைக் கண்டு அவனுக்கு விபூதி கொடுத்தார். சிறிது நேரத்தில் திருடனுக்கு கண்பார்வை ஒளிபெற்றது. மரத்திலிருந்து கீழே இறங்கி வந்த திருடன் ஆலய முன்றலில் நின்று இனிமேல் திருட்டுத் தொழிலில் ஈடுபடமாட்டேன் என சத்தியம் செய்ததுடன் வாழ்நாள் பூராகவும் பிள்ளையாரின் தொண்டனாகவே வாழ்ந்தார்.

இவை இந்த திருத்தலத்தில் முன்னைய காலத்தில் நடைபெற்ற அற்புதங்களில் சில என குறிப்பேடுகளில் கூறப்பட்டுள்ளன.

ரங்கூன் புகையிரத நிலைய அதிபராக இருந்த சுப்பிரமணியம் (ரங்கூன் மணியம்) என்பவர் ஆலயத்திற்கு ஆகம முறையில் திருமஞ்சனக் கிணறு அமைப்பதற்கான நிலையம் எடுப்பதற்கு ஆள்களுடன் சென்ற வேளையில் அங்குள்ள மரம் ஒன்றிலிருந்து வீழ்ந்த பாம்பு ஓரிடத்தில் தன் உடம்பினால் வட்டம் கீறிச் சென்றது. அந்த இடத்திலேயே திருமஞ்சனக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதனை நேரில் கண்டு அதிசயித்த ரங்கூன் மணியம் என்பவர் ரங்கூனிலிருந்து தேக்கு மரங்கள் தருவித்து தனது செலவில் மண்டபம் அமைத்துக் கொடுத்தார்.

ஆலயம் அமைந்துள்ள முகமாலை யோகரத்தின முதலியாரின் வழித் தோன்றல்களால் நீண்டகாலமாக இவ்வாலயம் பராமரிக்கப்பட்டு வருகிறது. யோகரத்தின முதலியாரின் மகன் கணபதிப்பிள்ளை மணியகாரர் அவரைத் தொடர்ந்து நொத்தாரிஸ் சரவணமுத்து, அவரின் மகன் ஏரம்பர், அவரின் மகன் வினாசித்தம்பி, தொடர்ந்து சபாரத்தினம், தம்பு தம்பிராசா, இராமலிங்கம் ஆகிய வழித்தோன்றல்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

1890களில் நொத்தாரிஸ் சரவணமுத்து பொறுப்பாக இருந்த காலத்தில் ஆலய மண்டபம் அமைக்கப்பட்டு நித்திய பூஜையும், திருவிழாவும் ஆரம்பிக்கப்பட்டன.

மணியப்பா என அழைக்கப்படும் சபாரத்தினம் இவ்ஆலயத்தை 50 வருடங்களுக்கு மேலாக நிர்வகித்து வந்தார். சிலரது காலத்தில் ஆலய தேவைகளுக்கு பெட்டி கொண்டு வீடு வீடாகச் சென்று பொருள்கள் சேகரித்து அபிஷேகம், பூஜை ஆகியவை செய்ததாக அங்குள்ள முதியோர்கள் தெரிவித்தனர்.

தனிப்பட்ட முகாமையில் இயங்கிய திருத்தல நிர்வாகம் நீதிமன்ற உத்தரவின் பேரில் 1954ஆம் ஆண்டு உரிமையாளர் யோகரத்தின முதலியாரின் வழித்தோன்றல்களை உள்ளடக்கிய தர்மகர்த்தாசபை உருவாக்கப்பட்டது. இந்த ஆலய நிர்வாகம் தற்போது காத்திரமான ஒரு தர்மகர்த்தா சபையின் கீழ் இயங்கி

*(தொடரும்)*

# சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையம்

தொகுப்பு: ஐயந்தன்




சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையம்

எமது சமூகத்தில் நெடுங்காலமாக இருந்து வந்த கூட்டுக் குடும்ப அமைப்பு முறை எம் மத்தியில் குறைந்துபோகும் நிலைமையும் தனிக் குடித்தனம் செய்வோர் தமது வாழ்க்கை செழிப்புறுவதற்கு கணவனும் மனைவியும் தொழிலுக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்ட நிலைமையும் உள்ள இன்றைய கால கட்டத்தில் போட்டி நிறைந்ததாக மாறிவரும் கல்வி உலகில் தமது பிஞ்சுக் குழந்தைகளையும் பாடசாலைப் பிரவேசத்திற்கு தயார்ப்படுத்த வேண்டியதால் மேலைத்தேச நாடுகளைப் போல் எமது பிரதேசங்களிலும் பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவது அவசியமாகும்.

அந்தவகையில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள புவேந்தன் பாலர் பாடசாலை பராமரிப்பு நிலையம் பற்றி ஆராய்வோம்.

1995ஆம் ஆண்டு தற்காலிக ஓலைக் கொட்டிலில் மூன்று மாணவர்களுடன் பாலர் பாடசாலையாக ஆரம்பித்து அதன் செயற்பாடுகளால் நிரந்தரக் கட்டடத்தில் பாலர் பகல் பராமரிப்பு நிலையமாக 106 மாணவர்களுடன் சிறப்பாக இயங்கி வருகிறது.

தானுண்டு தன் வேலைகளோடும் தன் குடும்பத்தோடும் சுயநலமாகவும் பொதுச் சேவைகள் எதுவுமின்றி வாழும் இக் கால மனிதர்கள் மத்தியில் 1994ஆம் ஆண்டில் தனது ஒரே மகன் 21 ஆவது வயதில் அகால மரணமடைந்ததால் சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்த மகாலிங்கம் - சரஸ்வதி தம்பதியினர் மகனின் நினைவாக சிறார்களுக்கு கல்வியறிவூட்டவென புவேந்தன் பாலர் பாடசாலையை தனது வீட்டுக்கு அருகில் உள்ள சி.இரவீந்திரநாதன் என்பவரின் தலைவாசலில் 15.01.1995ஆம் ஆண்டு புவேந்தன் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. புவேந்தன் பாடசாலையின் ஆசிரியையாக செல்வி ரதிகலா இரத்தினம் பொறுப்பேற்று நடத்தினார். சாவகச்சேரி நகர்ப்பகுதியிலுள்ள நலன் விரும்பிகள் வழங்கிய அன்பளிப்பு நிதிமூலம் ஆசிரியருக்கு மாதாந்த வேதனம் வழங்கப்பட்டது.

பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி ரதிகலா இரத்தினம் அவர்களின் அரவணைப்புடன் கூடிய கல்வியினால் பிள்ளைகளின் வரவும் அதிகரிக்கத் தொடங்கியது.

மாணவர்களின் வரவு அதிகரித்ததால் கொட்டிலில் பெரும் இட நெருக்கடி ஏற்பட்டிருப்பதை அவதானித்த மீசாலையில் உள்ள புனர்வாழ்வு மையத்தினர் இப்பாலர் பாடசாலைக்கு தற்போது பாலர் பாடசாலை இயங்கும் இடத்தில் ஓலைக் கொட்டில் அமைத்துக் கொடுத்ததுடன் மேலும் ஒரு ஆசிரியையை நியமித்து இரு ஆசிரியைகளின் வேதனங்களையும் மாதாந்தம் வழங்கி வந்தனர். பாடசாலையின் இரண்டாவது ஆசிரியையாக திருமதி புஷ்பராணி இராசேந்திரன் என்பவர் நியமிக்கப்பட்டார்.

புனர்வாழ்வுக் கழகத்தினரால் அமைக்கப்பட்ட 20' x 10' கொட்டகை அப்போதைய தென்மராட்சிப் பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை அவர்களால் 15.03.1995ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

மாணவர்களின் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரைக் கொண்ட புவேந்தன் பாலர் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் சி.ரவீந்திரநாதன் தலைமையில் ஏழுபேர் கொண்ட நிர்வாகக் குழுவினால் பாடசாலை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

*(தொடரும்)*

தென்மராட்சி வலம்




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# தமிழ் - 01

* முதலாம் பகுதியில் இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் உள்ளவற்றில் எவையேனும் நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01. பின்வரும் செய்யுட் பகுதியில் உள்ள எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து
    அ. அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
    ஆ. தடித்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளவற்றின் சிறப்பினை எழுதுக.

அ. 1) உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதென
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலுமிலர் பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மையானே.

2) **அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை யோடைந்து**
**சால்பி ன்றிய தூண்**
சால்பிற்கு கட்டளை யாதெனில் தோல்வி துலையல்லார்
கண்ணுங் கொளல்
தொல்வரவுந் தோலுங் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை
இன்மையென ஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

3) கந்தமும் தவத்தோர் கதிகளும் நிறைந்து
கடல் வளை புவி தொடாது உயர்ந்து
தந்த வெண்பிறை பாந்தளும் வரிப்புலியும்
தாழ்ந்து பாதலம் கடந்து உருவி
அந்தரம் அவனி கதிர்மதி அமைத்தோன்
அறுசினில் கபுசொடு நடந்து
**சுந்தரம் குலவு முஸ்தபா சரணம்**
**தொடும் இரு கைகளே கைகள்.**

4) எய்திய வேலையிற் தமியள் எய்திய
தையலை நோக்கினன் சாலை நோக்கினான்
கைகளில் கண்மலர் புடைத்துக் கால்மிசை
ஐயன் அப்பரதன் விழுந்தர ற்றினானரோ

வெந்துயர் தொடர்தர விம்மி விம்மி நீ
ருந்திய நிரந்தர மூற்று மாறில
**சிந்திய குரிசிலச் செம்மல் சேந்த கண்**
**ணிந்தியங் களிலெறி கடலுண் டென்னவே**

02. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.

அ. முள்ளுடைச் சிறு செடியின் - கனவாய்
மூண்டு சிரித்த மலர்
கள்ளெனும் பொக்கிஷத்தால் - விம்மியே
கர்வம் அடைந்த மலர்

பனித்துளி மணி சூடித் - தென்றலின்
பாட்டினைக் கேட்ட மலர்
கனிந்துள விண்ணதன் கீழ் - மௌனக்
கல்வியைக் கற்ற மலர்

அந்திச் சிவப்பினையும் - விண்மீன்
அழகின் விழிப்பினையும்
சிந்தையிற் கொண்ட மலர்- மணமே
செய்து திளைத்த மலர்

வீழ்ந்து கிடக்குதையோ - உச்சி
வெயிற் சுடலையிலே
வாழ்வின் விருப்பங்களை - மண்ணிலே
வரைந்துளதோ வண்டே?

1) உதிர்வதன்முன் மலர் இருந்த நிலையைக் கவிஞர் எப்படியெல்லாம் கூறுகின்றார்?
2) உதிர்ந்த மலர் கவிஞரின் உள்ளத்தில் உண்டாக்கும் உணர்ச்சியை விளக்குக.

**SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS STUDENTS**

3) இக்கதையூடாக கவிஞர் கூறவந்த விடயத்தை விளக்குக.

ஆ. அதோ வெண்கலத் தொனியில் ஒரு பெண் பேசுவது கேட்கிறதே. அது யாரது? அந்தப் புடவைக் கட்டிலிருந்தும் பாய்ச்சல் நடையிலிருந்தும் நாகம்மாளாகத்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்துக்கொண்டிருப்பீர்கள். ஆமாம் நாகம்மாள்தான். சுழிக்கும் மின்னல் போல அங்குமிங்கும் திரிந்து கொண்டிருக்கிறாள். சற்றைக்கொரு தரம் ராமாயியிடம் வந்து கல்லை சரியாகத் தள்ளிவை. கரண்டியை அந்தப்பக்கம் வைக்காதே. குழந்தையைப் பார்த்துக்கொள், அடுப்பண்டையைப் போகப்போகுது: ராமாயிக்கு இதெல்லாம் சுத்தமாகப் பிடிக்கவில்லை. கஸ்டப்பட்டு கஸாயம் குடிப்பதைப்போல பொறுமையுடன் ஏற்றுக்கொண்டாள். சிலசமயம் தனக்கே இதெல்லாம் தெரியும் என்பாள். உடனே நாகம்மாளுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிடும்! அப்படியோ இதோ நான் போய்விடுகிறேன் என்று நாலு எட்டு வைத்துவிட்டு திரும்பி, உனக்காக நான் போய்விட்டால் பின்னே என்ன இருக்கிறது? என்று நின்றுகொண்டு உருட்டி விழிப்பாள். அங்கு கடல் ஒலிபோல் முழங்கும் அத்தனை கதம்பக் குரல்களையும் ராமாயியினால் சகித்துக்கொண்டு சந்தோசமாகப் பார்க்கமுடிந்தது. ஆனால் கெட்டியப்பன் அங்குசெய்யும் அட்டகாசங்களைக் கண்கொண்டு பார்க்கமுடியவில்லை. காட்டுராஜா போல் கண்களை எதற்கு அவ்வளவு சிவப்பாக்கிக் கொண்டிருந்தானோ? பெரும் காற்றைப்போல் கும்பலில் அங்கும் இங்கென்று அலைந்து கொண்டிருந்தான். ஒரு கடைக்காரனை அந்த இடத்தில் சாமான் விற்கக்கூடாதென்பான். ஒரு புறமாயிருக்கும் தோரணத்தை அறுத்துவிடுவான். எங்காவது ஒரு மூலையில் யாராவது ஒரு சக்கிலிப்பெண் கல் அடுப்பு கட்டி அப்போதுதான் நெருப்பு மூட்டுவாள். அதை அவன் காலால் தெரியாததுபோல் மிதித்துவிட்டுச்செல்வான். ராமாயி இதையெல்லாம் பார்த்து பேசாமல் இருப்பாள்.

1) இப்பகுதி மூலம் வெளிப்படும் நாகம்மாளின் பண்புகளைக் குறிப்பிடுக.
2) கெட்டியப்பன் பற்றி உம் மனதில் தோன்றுவதைக் குறிப்பிடுக.
3) ஆசிரியரின் மொழிநடைச் சிறப்புப் பற்றி கருத்துரைக்க.

## பகுதி - II

03. நாணுடைமை என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு,
    1) நாணினது இலக்கணமும் சிறப்பும்
    2) நாணுடையாரது சிறப்பும் அவர் செயலும்
    3) நாணில்லாரது இழிவு
    4) வள்ளுவரின் உவமையணி ஆற்றல்
    என்பவற்றை விளக்குக.

04. திருவடிசூட்டுப் படலத்தில் இராமன் இருக்கும் இடத்தைப் பரதன் அடைவது வரையான பகுதியில்,
    1) இராமன் மீது பரதன் கொண்ட பாசமும்
    2) பரதன் மீது இராமன் கொண்ட நம்பிக்கையும்
    3) படைகளைக் கண்ட இலக்குவனின் கோபமும்
    புலப்படுமாற்றினை விளக்குக.

05. இரட்சணிய யாத்திரிகம் சிலுவைப்பாடு பகுதியில்,
    1) யேசுபிரான் அடைந்த துன்பங்களும்
    2) அதைக்கண்டு பெண்கள் அடைந்த துன்பங்களையும்
    3) இவற்றை வெளிப்படுத்த புலவர் கையாண்ட அணிகளின் சிறப்பையும்
    விளக்குக.

06. திருத்தொண்டர் பெரிய புராண வசனம் முகவுரை என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு,
    1) சைவர்கள் என்பதற்கு நாவலர் கூறும் வரைவிலக்கணம்
    2) திருத்தொண்டர் பெரியபுராணத்தின் சிறப்புகள்
    3) அதனைக் கற்க வேண்டியவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்
    4) நாவலரின் மொழிநடை
    ஆகியவற்றை விளக்குக.

07. பாற்கஞ்சி என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு,
    1) சாதாரண விவசாயக் குடும்பத்தின் ஆசாபாசங்களையும்
    2) அவர்களின் எதிர்பார்ப்புகள் நொருங்குதலையும்
    3) இக்கதைத் தலைப்பின் பொருத்தப்பாட்டையும்
    4) இச்சிறுகதையில் வெளிப்படும் கிராமியப் பண்பாடுகளையும்
    விளக்குக.

08. பாரதியாரின் உயிர் பெற்ற தமிழர் பாட்டு என்ற கவிதையை ஆதாரமாகக் கொண்டு பாரதியாரின்,
    1) சமூக சிந்தனைகளையும்
    2) வாழ்க்கை நோக்கையும்
    3) நூல்கள பற்றிய எண்ணத்தையும்
    விளக்குக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
    அ. ஊர்க்கால் நிவந்த பாடல் மூலம் வெளிப்படும் கைக்கிளைக் கூறுகள்.
    ஆ. நாச்சியார் திருமொழி பகுதியில் வெளிப்படும் ஆண்டாளின் காதல்.
    இ. தவப்பயன் சிறுகதையில் வெளிப்படும் நிர்மலானந்தரின் துறவு நிலை.
    ஈ. பிணைக்கப்பட்ட கடனை விட வெளி முதலீட்டை வரவேற்பதே நலம் கட்டுரையில் பணைக்கப்பட்ட கடன், வெளி முதலீடு என்பதற்கான விளக்கம்.
    உ. பெட்டிக்கடை நாரணன் கவிதையில் நாரணன் பற்றி உம் மனதில் எழுவன.

**ஆசிரியர்: த. அஜந்தகுமார், யாழ்ப்பாணம்.**
**முன்னாள் உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, B.A (Hons).**
**ஆசிரியர்: Maths centre நெல்லியடி.**
**வலைத்தளம்: www. ajatamil blogspot. Com**

# தமிழ் - 02

* முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் தெரிந்தெடுத்து மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

01. பின்வரும் கட்டுரைகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்து 350 சொற்களுக்குக் குறைவுபடாமல் கட்டுரை வரைக.
அ. பேராசிரியர் க. கைலாசபதியின் தமிழ்ப்பணிகள்
ஆ. புலம்பெயர் இலக்கியம்
இ. அறிவியற் தமிழ்
ஈ. இன்றைய விஞ்ஞான வியப்புகள்
உ. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

02. பின்வரும் 'அ' உரைப்பகுதியையும் 'ஆ' பாடற்பகுதியையும் வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
அ. மொழிபெயர்ப்பில் இரண்டு பிரதான பிரச்சினைகள் உள்ளன. ஒன்று கலைச் சொல்லாக்கம். மற்றது பிறமொழிச் சொற்களை தமிழில் எழுதுதல். இவை இரண்டும் மொழி வளர்ச்சியோடு சம்பந்தப்பட்ட முக்கிய அம்சங்களாகும். இவ்விரு அம்சங்கள் பற்றியும் பாரதியிடம் திட்டவட்டமான சில கருத்துக்கள் இருந்தன. கலைச் சொல்லாக்கத்தின் அவசியத்தை பாரதி நன்கு உணர்ந்திருந் தார். கூடியவரை சாஸ்திர பரிபாஷையை நிச்சயப்படுத்தி வைத்தால் பிறகு மொழிபெயர்ப்புத் தொடங்குவோருக்கு அதிக சிரமம் இராது என அவன் எழுதி னான். தேசம் முழுவதிலும் கலைச் சொல்லாக்கத்தில் ஓர் ஒருமைப்பாடு விளங்க வேண்டும் என்பதும் பாரதியின் கருத்தாய் இருந்தது. இதன் பொருட்டு சமஸ் கிருத மொழியை கலைச்சொல்லாக்கத்தின் பொது மொழியாகக் கொள்ளலாம் என்பதும் பாரதியின் கருத்தாகும். இதுபற்றி பரிபாஷை சேகரிக்க ஒருபாயம் என்னும் தலைப்பில் பின்வரும் குறிப்பொன்றை பாரதி எழுதியுள்ளார். "ஸ்ரீகாசி யிலே நாகரிக பிரசாரணி சபையார் ஐரோப்பிய சங்கேதங்களை எல்லாம் எளிய சமஸ்கிருத பதங்களில் போட்டு மிகப்பெரியதோர் அகராதி உண்டாக்கி வருகி றார்கள். இந்தச் சொற்களை வேண்டியவரை இயன்றவரை தேச பாஷை கள் எல்லாவற்றிலும் ஏககாலத்தில் கைக்கொண்டு வழங்கலாம். ஐரோப்பா வில் எல்லாப் பாஷைகளும் இவ்விதமாகவே இலத்தீன் யவன பரிபாஷை களைக் கைக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு செய்தால் நமது தேச பாஷை களில் சங்கேத ஒற்றுமை ஏற்படும். அதனால் சாஸ்திரப் பயிர் தேசம் முழுவ திலும் வளர்ந்தோங்கி வருதல் எளிதாகும்" என்பது பாரதி கருத்து.
1) மேற்படி பந்தியில் ஆசிரியர் கூறியவற்றை 30 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக.
2) மேற்படி பந்தி மூலம் ஆசிரியர் கூறவந்த விடயம் என்ன?
3) பாரதியின் கலைச் சொல்லாக்கம் பற்றிய நிலைப்பாடு யாது?

ஆ. ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர் - வேண்டா
நமக்கும் அது வழியே நாம் போம் அளவும்
எமக்கும் என் என்று இட்டு உண்டு இரும்
1) மேற்படி செய்யுளின் கருத்தை 30 சொற்களுக்கு குறையாமல் விரித்து எழுதுக.
2) நமக்கும் அது வழியே என்பதன் அர்த்தம் என்ன?
3) இச்செய்யுள் மூலம் ஆசிரியர் புலப்படுத்த விரும்புவது யாது?

03. மேல்வரும் பதினைந்து வினாக்களும் அ, ஆ, இ என மூன்று பகுதிகளாகத் தரப் பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலுமிருந்து குறைந்தது இரண்டு வினாக்களையே னும் தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட்டும் விடைதருக.
அ. 1) பாசம், மஞ்சள், பயிற்சி, சபை, கஞ்சி, தேர்ச்சி, மச்சம் ஆகிய சொற்களை சகர ஒலி வேறுபாட்டிற்கேற்ப பாகுபடுத்துக.
2) மொழிக்கு இறுதியில் வரும் மெய் எழுத்துகள் எவை?
3) பனங்கிழங்கு, பதிற்றுப்பத்து ஆகிய சொற்களில் வந்துள்ள பகுபத உறுப்பு களை பிரித்து இனங்காட்டுக.
4) இறந்த கால இடைநிலைகள் இரண்டும் அதற்கு உதாரணமும் தருக.
5) நாவலர் வீதி, சிவபெருமான், விநாயக்கடவுள், குமரக்கோட்டம் இவை எவ்வகைத் தொகைகள்?
ஆ. 1) முயல், தடு, கொடு, கல் ஆகிய வினையடிகளைக் கொண்டு புதிய பெயர்ச் சொற்களை உருவாக்குக.
2) வேலைக்கு ஏற்ற கூலி கிடைக்கவில்லை. இதில் வந்துள்ள வேற்றுமை உருபு என்ன? என்ன பொருளில் வந்துள்ளது?
3) பறவைகள் எல்லாம் பறக்கும்
பறக்கும் தட்டைப் பறவைகள் பார்க்கும்
இதில் வந்துள்ள பறக்கும் என்பதன் இலக்கணத் தொழிற்பாட்டை வேறு படுத்திக் கூறுக.
4) கண்ணன் பானையை உருட்டுவித்தான், அப்பா எங்களைப் படிப்பித்தார். இதில் வந்துள்ளவை எவ்வகை வினைகள்?
5) காட்டு, வா ஆகியன முதல் வினையாகவும் துணை வினையாகவும் வரும் வகையில் ஒவ்வொரு வாக்கியம் அமைக்குக.
இ. 1) அவன்தான் என்னை இங்கே வரச் சொன்னான்
அவன் தானும் படிக்கப் போகிறேன் என்றான்.
இவற்றில் வந்துள்ள தான் என்பதன் இலக்கணத் தொழிற்பாட்டை வேறு படுத்துக.
2) காஞ்சிவரம் திரைப்படத்தைப் பார்க்குமாறு ஆசிரியர் எனக்குக் கூறினார். இதில் வந்துள்ள தலைமை வாக்கியம் எது?
3) ஒரு இரவிலேயே நான் எல்லாவற்றையும் படித்துமுடிப்பேன். இதில் வந் துள்ள இலக்கண வழுவைத் திருத்தி எழுதுக.
4) இரண்டு கண்களும் சிவந்தது. இதில் வந்துள்ள இலக்கண வழுவைச் சுட்டுக.
5) கலப்பு வாக்கியத்திற்கு ஓர் உதாரணம் தருக.

## பகுதி - II

04. 1) சங்ககால புறத்திணை இலக்கியங்களின் பொருள்மரபை விளக்குக.
2) சங்ககாலத்தில் அரசர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே மிகுந்த நல்லுறவு இருந்தது என்பதனை ஆதாரங்களுடன் விளக்குக.

05. 1) நாயக்கர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்தித் தருக.
2) அக்காலத்துப் பொதுமக்கள் சார்ந்த இலக்கியங்களின் பொதுப்பண்புகளை விளக்குக.

06. 1) ஐரோப்பியர்களின் வருகையினால் எமது மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை யும் வளர்ச்சிகளையும் விளக்குக.
2) அதில் அந்நாட்டு அறிஞர்களின் பங்களிப்பைச் சுருக்கமாகத் தருக.

## பகுதி - III

07. 1) ஆரிய சக்கரவர்த்திகள் கால இலக்கியங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
2) அக்கால இலக்கிய வளர்ச்சியில் அரசகேசரி போன்ற மன்னர்களின் பங்களிப்பை விளக்குக.

08. 1) 18 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்தித் தருக.
2) ஈழத்தில் தோன்றிய புராணங்கள் பற்றிக் கருத்துரைக்குக.

09. பின்வருவோருள் யாரேனும் இருவர் இலங்கைத் தமிழ் இலக்கியவளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
அ. கவிஞர் இ.முருகையன்.
ஆ. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.
இ. பேராசிரியர் உவைஸ்.
ஈ. சி.வை. தாமோதரம்பிள்ளை.
உ. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

(முற்றும்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# விவசாய விஞ்ஞானம்

(12.07.2010 இன் தொடர்ச்சி.......)

## பகுதி - B, கட்டுரை வினாக்கள்

* நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01. 1) நிலம் பண்படுத்தலில் உள்ள வெவ்வேறு படிநிலைகளை விவரிக்குக.
2) மலைப்பாங்கான பிரதேசங்களுக்குப் பொருத்தமான மண் பாதுகாப்பு முறை களை விளக்குக.
3) கூட்டெரு தயாரிப்பின் பிரதான படிமுறைகளைக் குறிப்பிடுக.

02. 1) விலங்கு உணவுகளை உதாரணங்களுடன் பாகுபடுத்தி எழுதுக.
2) பிறப்புரிமை வளங்களைக் காப்பதன் முக்கியத்துவத்தை விவரிக்குக.
3) மண்ணின் pH பெறுமானத்தைத் துணிவதற்கான முறை ஒன்றைச் சுருக்க மாக விளக்குக.

03. 1) தரைக்கீழான வித்துமுளைத்தல், தரைமேலான வித்துமுளைத்தல் வேறுபாடு களை விளக்குக.
2) மாட்டின் சமிபாட்டுத்தொகுதியை ஆக்கும் பகுதிகளைக் குறிப்பிட்டு அவற் றின் தொழில்களைத் தருக.
3) பன்றியினதும் மாட்டினதும் உணவுக் கால்வாய்த் தொகுதிகளுக்கு இடையே யான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

04. 1) வியாபாரம் ஒன்றில் உற்பத்தி அதிகரிக்கின்றபோது இலாபம் எல்லைப்படுத் தப்படுகின்றது. இந்நிலைமைக்கான காரணிகள் யாவை?
2) ஆண்பன்றி ஒன்றின் இனப்பெருக்கப் பகுதிகளைக் குறிப்பிட்டு அவற்றின் தொழில்களைக் குறிப்பிடுக.
3) நீர்ப்பாசன வினைத்திறனை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளைக் குறிப் பிடுக.

05. 1) பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட பிரதிகூலங்கள் பற்றி விவரிக்குக.
2) நீர்வடிப்பை மேம்படுத்துவதற்கான முறைகளைக் குறிப்பிட்டு அவற்றினால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக.
3) "பொருட்களுக்கான கேள்வி நுகர்வுத் தன்மையைச் சார்ந்தது" எனும் கூற்றை விளக்குக.

06. 1) ஆப்பொட்டு, அரும்பொட்டு முறைகளைச் சுருக்கமாக விளக்குக.
2) பயிர் உற்பத்தியில் சமவிகித வளமாக்கிப் பாவனையின் முக்கியத்துவத்தை விளக்குக.
3) "இலங்கையில் விவசாய உற்பத்திக்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன" இக் கூற்றை விளக்குக.

07. 1) பீடைக்கட்டுப்பாட்டு முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
2) தாவர போசணை மூலகங்களைக் குறிப்பிட்டு அவற்றின் தொழிற்பாடு களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
3) உயிர்ப்பல்வகைமை என்றால் என்ன? அவற்றைப் பாதுகாப்பதற்கான முறை களை விளக்குக.

(முற்றும்)

ஆசிரியர்: வை.சசிகுமார்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம்.
தொ.பே.இல: 077 - 0691573

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேஷம்



பிள்ளைகளால் வீட்டில் மகிழ்ச்சி, சந்தோஷம் குடிகொள்ளும். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். உங்களின் சில செயற்பாடுகளை பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். அயலாரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். வாயு உபாதையுண்டு.

### இடபம்




திடீர் திருப்பங்களைச் சந்திக்கலாம். சக ஊழியர்களிடம் காரசாரமாக விவாதிக்க நேரிடலாம். அரசியல்வாதிகள் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் அல்லது நண்பர் ஒருவரை பார்க்க நேரிடலாம். உடன் பிறப்புக்களின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடைவீர்கள்.

### மிதுனம்



திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும் நாள். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையலாம். காலையில் முடியாமல் போன வேலை ஒன்று மாலையில் முடிவுக்கு வரும். கூட்டுத் தொழில் புரிவோர் பங்குதாரர்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். கலைஞர்கள் விமர்சனங்களைச் சந்திக்க நேரிடலாம்.

### கடகம்



பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். பழகிய சிலரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்க நேரிடலாம். பெண்கள் உடல் உபாதைகளால் அவதிப்படலாம். இனம்புரியாத கவலைகள் மனதை ஆள்கொள்ளும். முன்பின் யோசிக்காமல் எந்த வேலையிலும் இறங்க வேண்டாம். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள்.

### சிங்கம்



கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிப்பீர்கள். உங்களிடம் உதவி பெற்ற ஒருவர் உங்களைப் பாராட்டி பேசலாம். சொந்த விடயங்களைப் பற்றி மற்றவர்களிடம் விவாதிக்க வேண்டாம். திட்டமிட்ட சில காரியங்கள் சரியான நேரத்தில் நடக்கலாம். வீடு மாற்றம், இடமாற்ற விவகாரங்களில் திருப்பங்களைக் காணலாம்.

### கன்னி



வெளியூர்களில் இருக்கும் ஒருவர் முக்கியமான ஒரு விடயமாக உங்களைத் தொடர்புகொண்டு பேசலாம். பல நாள்களாக நிறுத்தி வைத்த வேலை ஒன்றை இன்று திடீரென செய்யத் தொடங்குவீர்கள். நேற்று நீங்கள் செய்த வேலை ஒன்றை இன்று மற்றவர்கள் தலையில் சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்ளலாம். மனக் குழப்பங்களைச் சந்திக்கலாம்.

### துலாம்



எதிர்பார்த்த பணவரவு ஒன்று வராமல் எதிர்பாராத பணவரவு வரலாம். குடும்ப பெரியவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் தடையின்றி, விறுவிறுப்பாக நடக்கும். உறவுகளால் சந்தோஷம் உண்டு.

### விருச்சிகம்



சிக்கலான வேலை ஒன்றை மற்றவர்கள் பாராட்டும் வகையில் செய்து முடிப்பீர்கள். உறவுப் பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். அனுகூலமான நாள்.

### தனுசு



தொழில் விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். ஒரு முறைக்கு இரு முறை அலைந்தும், சில வேலைகள் முடிவடையாமல் போகலாம். உடல்நலத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

### மகரம்



மற்றவர்களை பரிகாசம் செய்து பேச வேண்டாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களில் நினைத்தது நடக்கும் சூழ்நிலை உருவாகும். அடுக்கடுக்காக குவியும் வேலைகளால் கோபம், பதற்றம் உண்டாகலாம். பணம் தொடர்பான காரியங்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். செலவுகள் அதிகரிக்கும் நாள்.

### கும்பம்



பொது விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். பழைய கடன் மிகுதி ஒன்றை தீர்க்கும் சூழ்நிலை உருவாகலாம். காலை முதல் மாலை வரை பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். நண்பர்களுக்காக நீங்கள் மற்றவர்களிடம் உதவி கேட்கலாம்.

### மீனம்



தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளுக்கு பலத்த ஆதரவு தெரிவிப்பர். பிள்ளைகளின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். உடல் உபாதைகள் நீங்கி, உற்சாகம் தெம்பு பெறுவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

## தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் இறுதிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தையும் நேர சூசிகையையும் அலுவலக நேரத்தில் கல்லூரியில் பெற்றுக்கொள்ளுமாறு மேலதிக பணிப்பாளர் வெ.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (50)

## உள்ளூராட்சி உதவியாளருக்கான கலந்துரையாடல் 17 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் இடம்பெறும்.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும்.

மாவட்டத்தில் கடமையாற்றும் சகல உள்ளூராட்சி உதவியாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் கேட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் சேவைப் பிரமாணக் குறிப்பு தொடர்பாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (50)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணைப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.



## தவறிவிட்டது

7 ஆம் வட்டாரம், மண்டைதீவு என்னும் முகவரியுடைய சச்சிதானந்தம் கேசவநாத் என்பவரின் தே.அ.அட்டை (890944183V) மற்றும் Pulsar மோட்டார் சைக்கிள் புத்தகம் (VB xxxx),உரிமம் மாற்றுப்படிவம் என்பன அடங்கிய சிறிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 0770782260



## வீடு, காணி விற்பனை

கொக்குவில், பிரம்படி லேனில் யாழ்.மாநகர எல்லையில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம் என்பவற்றிற்கு மிக அண்மையில் 7 அறைகளுடன் சகல வசதிகளுமுடைய வீடு விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0775304608, 0776569652



## கோழிக்குஞ்சு விநியோகம்

30 நாளில் 2 Kg வுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய Bahiraha புறொயிலர் குஞ்சுகள் நாளை 17.07.2010 விநியோகிக்கப்படும்.

★ றாஜீவ்,
நவாலிவீதி, ஆனைக்கோட்டை.
T.P. No: 021 222 2867, 0776090926



## ANTIQUES WATCHES FOR SALE

WYLER, TITONI, FAVRE - LEUBA, MONDIA HENTRISANDOZ, GARUDA,ROAMER, ROLEX, OMEGA, பழுதானவைகள் என்றாலும் நல்ல விலைக்கு வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0773414285



# VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.



## நாடக நூல் வெளியீடு

| | |
|---|---|
| காலம்: | நாளை (17.07.2010) சனிக்கிழமை |
| நேரம்: | பி.ப. 3மணி |
| இடம்: | ஸ்ரீ வதிரீட விநாயகர் ஆலய மண்டபம் (இலந்தைக்குளம் பிள்ளையார் கோயில், கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்) |
| நாடக நூல்: | கடையில் எம்மவர்கள் |
| எழுதியவர்: | திரு.சின்னையா சிவனேசன் (முன்னாள் அதிபர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) |
| ஆய்வுரை: | திரு.ம.குழந்தை சண்முகலிங்கம் நாடகப் பேராசிரியர் |
| சிறப்புரை: | ஞானபானு பிரம்மஸ்ரீ க.இராஜராஜேஸ்வர சர்மா M.A அவர்கள் |

பந்தி ஆசிரியர்கள், சர்வகலாசாலை மாணவர்கள், நாடகரசிகர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் திரண்டுவருக/பயன் பெறுக.

ஆலய நிர்வாகம்.

(100542)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 ★ 05 ★ 1925



விண்ணில் 26 ★ 06 ★ 2009

அமரர் கந்தையா சுப்பிரமணியம்

ஆண்டு ஒன்று சென்றாலும்
அகலவில்லை உங்கள் நினைவு.

'மலரகம்',
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(100628)

## கண்ணால் காண்பது...!

ஒரு பள்ளி வாசல்.

அதன் வெளிப்பக்கத்திலே நபிகள் நாயகம் நின்று கொண்டிருக்கிறார். ஒரு பெண்மணியோடு பேசிக்கொண்டிருந்தார். இருள் சூழ்ந்த நேரம் அது.

அந்த சமயத்திலே இரண்டு நபித் தோழர்கள் அந்த வழியாகப் போய்க் கொண்டு இருந்தார்கள்.

அவர் கொஞ்சம் தயக்கத்தோடு நபிகளைப் பார்த்தார்கள். அப்படியே அந்த வழியாகக் கடந்து சென்றார்கள்.

இதை நபிகள் நாயகம் கவனிக்கிறார். உடனே அந்த மதீனத்துத் தோழர்களை அழைக்கிறார். முகமன் சொல்கிறார்.

''தோழர்களே! இங்கே வாருங்கள் இந்தப் பெண்மணி யார் தெரியுமா? என் மனைவி தான்!''

''இறைவனின் தூதரே! இறைவன் தூய்மையானவர்''! அப்படி என்று ஆச்சரியத்துடன் சொன்னார்கள்! அந்த ஆச்சரியத்துக்கு என்ன காரணம் என்ன...

''நபியே நாங்கள் உங்களைத் தவறாக நினைக்கவில்லை. நாங்கள் உங்களைப் பற்றி அறியாதவர்களா என்ன?'' என்கிற கேள்விகள் அவர்களுக்குள்ளே தோன்றி மறைந்ததுதான் அந்த வியப்புக்குக் காரணம்.

நபிகள் நாயகம் சொன்னார்.

''மனிதனுடைய நாளங்களில் நிச்சயமாக சைத்தான் ஓடிக்கொண்டுதான் இருக்கிறான்.... உங்கள் மனதிலே தவறான எண்ணங்களை அவன் போட்டு விடுவானே என்று நான் பயப்படுகிறேன்!'' -அப்படி என்றாராம்.

இந்த இடத்திலே நாங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

''எங்களைப் பொறுத்த வரைக்கும் நாம் தூய்மையாகத்தான் இருக்கிறோம்.... அப்படி இருக்கும்போது யாருக்காக நாம் யாருக்கு பயப்பட வேண்டும்? யார் எப்படி நினைத்தாலும் நமக்கு என்ன?''

அப்படி என்று நபிகள் நாயகம் நினைக்கவில்லை. அப்படி நினைத் திருந்தால்......

இந்த ஒரு செய்தி பெரிய வதந்தியாகப் பரவியிருக்கும்

நாம் நல்லவர்கள் என்பது நமக்கு மட்டும் தெரிந்தால் போதாது.

நல்லவர் என்கிற நமது பெயருக்குக் கொஞ்சம் கூட களங்கம் வராமல் பாதுகாக்க வேண்டியது நம் கடமை. பொது வாழ்க்கையில் இருக்கின்றவர்களுக்கு இது அதிக முக்கியம்.

தாம் தூய்மையானவர் என்பது மட்டுமன்றி அந்தத் தூய்மைப் பெயருக்கு எள் முனையளவும் களங்கம் ஏற்படாமல் வாழும் காலத்திலே நிருபணமாக்கியவர் அண்ணலார்.

''சைத்தான் மனித வேடத்தில் செயலாற்றுகிறான்!'' அவா அவ்ன் மக்களிடம் வந்து பொய்ச் செய்திகளை எடுத்துரைக்கின்றான். பிறகு மக்கள் கலைந்துபோய் விடுகிறார்கள். அப்போது அவர்களிலே ஒருவன் மெதுவாக ஆரம்பிக்கிறான் 'இப்படி ஒரு செய்தியை ஒரு ஆள் மூலமாகக் கேள்விப்பட்டேன். அவன் முகம் எனக்குத் தெரியும். ஆனால் பேர் மட்டும் தெரியாது!' இப்படி ஆரம்பிக்கிற வதந்திதான் பெரிதாகப் பரவி - பெரிய விளைவுகளை யெல்லாம் எற்படுத்துகிறது!

புனித குர் - ஆன் என்ன சொல்கிறது தெரியுமா? இறை நம்பிக்கை கொண்டவர்களே! தீயவன் ஒருவன் எதேனும் ஒரு செய்தியை உங்களிடம் கொண்டு வந்தால். அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்துத் தெளிவு படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் தெரியாத்தனமாக எதேனும் ஒரு கூட்டத்தினருக்குத் தீங்கிழைத்து விட்டு பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை எற்பட்டு விடக் கூடாது'' (குர் ஆன் 49:6)

இதுலியிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னென்ன......

கண்ணால் காண்பதும் பொய்.

காதால் கேட்பதும் பொய்.

தீர விசாரிப்பதே மெய்.

ஓர் ஆள் இருந்தான்.

அவன் ஒரு நாள் விளையாட்டாக ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டான். ''நமது ஊர் சத்திரத்திலே எல்லோருக்கும் சோறு போட்டார்கள். உனக்குத் தெரியுமா?'' இதைக் கேட்டவன் உடனே அந்த சத்திரம் இருந்த திசையை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

இப்படி ஒரு நான்கு பேருக்கு சொன்னதால் கொஞ்ச நேரத்தில் அனைவருக்கும் பரவியது. வதந்தியை கிளப்பி விட்டவன் ஒரு தூக்கம் போட்டுவிட்டு எழுந்து பார்க்கிறான். நிறைய மக்கள் தெரு வழியாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள், இவன் தீடீர் என யோசிக்க ஆரம்பித்தான்.

''என்ன இது நாம் நான்கு பேரிடம்தானே சொன்னோம். இப்பொழுது இவ்வளவு பேர் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்! அப்படி என்ன.... நிஜமாகவே இன்று சத்திரத்தில் சோறு போட்டர்களா?'' அப்படி என்று நினைத்து அவனும் அவசரமாக எழுந்து அவர்களுடன் ஓட ஆரம்பித்தான்!

## முதல் வணக்கம்



சீதா கல்யாணம் முடிந்ததும் மண்டபத்தில் ஏகப்பட்ட கூட்டம். மணமேடையிலிருந்து ராமரும் அவரைத் தொடர்ந்து சீதா பிராட்டியும் வந்து கொண்டிருந்தனர். கூட்டத்தில் இருந்தவர்களுக்குச் சீதையை திருமணம் செய்து கொண்ட ராமர் யாரை முதலில் வணங்கப் போகிறார்? என்பதைத் தெரிந்து கொள்வதில் மிகவும் ஆர்வமுடையவராய் இருந்தனர்.

சீதை பின் ராமர் திருமண மண்டபத்தைச் சுற்றி வந்தபோது தூரத்தில் தசரதன் இருந்தார். அவர் அருகே இருவரும் சென்றனர். அதைப்பார்த்ததும் சரி தசரதனுக்கே முதல் வணக்கம் என்று எல்லோரும் நினைத்தனர். ஆனால் அவர்கள் இருவரும் தசரதரைத் தாண்டி அப்பால் சென்றனர்.

அடுத்ததாக கௌசல்யை அமர்ந்திருக்கிறாள் அந்தப்பக்கமாக இவர்கள் சென்று கொண்டிருந்தனர். ஒகோ... இவருக்குத் தான் முதல் வணக்கம் என நினைத்தனர். தாயாரைத்தான் முதலில் வணங்க வேண்டும் என்று ராமர் நினைக்கிறார் போலிருக்கிறது என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் ராமர் தாயையும் தாண்டி அப்பால் போகிறார்.

குரு குல வசிஷ்டர் தடுத்தார் போல் இருக்கிறார். குருகுல வணக்கம் முதலில் என்று ராமர் நினைக்கிறார் போலிருக்கிறது. என்று நினைத்தனர். அதுவும் தவறாகப் போயிற்று.

இதைப் பார்க்கிறார் விசுவாமித்திரர். கொஞ்சம் நிமிர்ந்து உட்காருகிறார் அவர் முகத்திலே பெருமிதம். ''அவர்களுக்கு திருமணம் செய்து வைத்ததே நாம் தானே! ஆகவே நம்மிடம் ஆசீர்வாதம் வாங்க வேண்டும் என்பதற்காகத் தான் இங்கே வருகிறார்கள் என்று நினைத்தார். அவரும் ஏமாந்து விட்டார்.

சரி யாரைத் தான் முதலில் வணங்கப் போகிறார்கள்? தூரத்தில் ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். அவரது காலில் விழுந்து இருவரும் வணங்கினார்கள். யார் அந்த அம்மா அது தான் கைகேயி. ராமர் மீது கடந்த அன்பு கொண்டவர்.

கம்பர் தம்முடைய ராமாயணத்தில் ராமன் கைகேயியை வணங்கியதை மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார். அதை மட்டும் வைத்துக்கொண்டு அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை அழகாகக் காட்டி அர்த்தமும் கூறியிருக்கிறார்.

அதாவது ராமனின் செய்கை, ராமன் கைகேயியைப் பார்த்து இப்படிச் சொல்வது போலிருந்ததாம். ''என் அவதாரத்தின் ரகசியம் உனக்குத் தெரியும்? சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு போகவேண்டும் ராவணாவதம் நடைபெற வேண்டும். எனவே நான் என்பங்கை செய்து முடித்து விட்டேன் இனிமேல் உன்பங்கை நீ செய்ய வேண்டும் எங்களை காட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதற்காகத்தான் உனக்கு முதல் வணக்கம்! என்று சொல்வது போல் இருந்ததாம்.

கம்பர் எழுதிய ஒரு விஷயத்தை எழுதியவர்கள் எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் பார்த்தீர்களா.

நன்றி: நீதிக்கதைகள்.

## கடைக்காரரின் நேர்மை

ஒரு பெரியவருக்கு அமெரிக்காவில் ஏற்பட்ட ஓர் அனுபவம் இது; யார் அந்தப் பெரியவர்? சர்.எம்.விஸ்வேஸ்வரய்யா!அவர் ஒரு சமயம் அமெரிக்கா சென்றிருந்தபோது சிகாகோ மாநகரில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார். இன்னும் சில நாள்களில் அவர் இந்தியா திரும்புவதாக இருந்தது.

அதற்குள் அவருக்கு ஏதோ ஒரு பொருள் தேவைப்பட்டது. ஏதாவது ஒரு கடையில் அந்தப் பொருளைச் செய்யச் சொல்லி வாங்கிவர வேண்டும். அங்கிருந்து குறிப்பிட்ட கடைக்கு அவர் சென்று ''இதுபோல்.. எனக்கு... இந்தப் பொருள் ஒன்று வேண்டும். அதை நீங்கள் தயார் செய்து கொடுக்க முடியுமா?''

முடியும் என்று பதிலளித்தார் அந்தக் கடைக்காரர்.குறிப்பட்ட நாளைச் சொல்லி அன்றையதினம் மாலை வந்து அப்பொருளை வாங்கிக்கொண்டு செல்லலாம் என அக்கடைக்காரர் கூறினார். சொன்ன நாளுக்கு மறுநாள்தான் விஸ்வேஸ்வரய்யா இந்தியாவுக்குப் புறப்பட வேண்டியது. அந்த விவரத்தை கடைக்காரிடம் தெரிவித்தார்.

''அந்தப் பொருள் எட்டு டொலர் விலை என கடைக்காரர் கூறினார். அதற்கு அவரும் ஒப்புக்கொண்டு ''நீங்கள் செய்து கொடுக்கும் பொருள் எனக்குத் திருப்தியாகவும் இருந்து அதைக் குறிப்பிட்ட நாளிலேயும் நீங்கள் தருவீர்களானால் மேற்கொண்டு ஒரு டொலர் உங்களுக்கு அதிகமாகச் சேர்த்தளித்கிறேன்'' என கடைக்காரரிடம் கூறி தமது இருப்பிடம் திரும்பினார்.

கடைக்காரர் குறிப்பிட்ட நாளுக்கு கடைக்குச் சென்றார். அவர் போன நேரம் கடைக்காரர் இல்லை. இவர் செய்யச் சொன்ன பொருள் தயாராக இருந்தது. அங்கிருந்தவர்கள் அதை கொடுத்தனர். அதைப் பார்த்துத் திருப்தி ஏற்பட்டது.

உடனே கடையின் பணியாளரிடம் எட்டு டொலர் கொடுத்தார். தான் கூறிய வாக்குறுதியைக் காப்பாற்ற அதிகப்படியாக ஒரு டொலரும் கொடுத்துப் பொருளை பெற்று விஸ்வேஸ்வரய்யா திரும்பி வந்து விட்டார்.

அவர் எங்கேயிருக்கிறார் என்ற விவரம் கடைக்காருக்குத் தெரியாது. அவர் மறுநாள் ஊருக்குப் புறப்படப் போகிறார் என்ற விஷயம் மட்டும் அவருக்குத் தெரியும்.

அந்தக் கடைக்காரர் என்ன செய்தார் தெரியுமா? ஒவ்வொரு ஹோட்டலாகச் சென்று விசாரிக்கிறார். ''ஐயா... தாங்கள் எங்கள் கடையில் அதிகப்படியாக ஒரு டொலர் கொடுத்துவிட்டு வந்திருக்கிறீங்கள். அதைத் திருப்பிக் கொடுக்க வந்தேன்...'' உங்கள் விலாசத்தைக் கொடுக்காமல் வந்து விட்டீர்களே... பல இடங்களில் தேடிக் கடைசியில் இடத்தை கண்டு பிடித்தேன்'' என்றார் கடைக்காரர்.

''இதற்காக இவ்வளவு சிரமப்பட வேண்டுமா?'' எல்லா வியாபாரிகளும் செய்வதுபோல் ஒரு டொலரை நீங்கள் ஏன் எடுத்து வந்தீர்கள்? நான் வாக்களித்த தொகைதானே அது ? என்று விஸ்வேஸ்வரய்யா கேட்டார்.

''அப்படி இல்லை! அந்தப் பணத்தை சம்பாதிக்கவில்லை அதனைப் பெற உரிமை இல்லை'' என்றார் அவர்.

''உண்மைதான்... இருந்தாலும் நீங்கள் அந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது? என்று மீண்டும் வினவினார் இவர்.


அந்தக் கடைக்காரர் தனது நெற்றியைத் தொட்டு நான் அப்படிச் செய்தால் என்னுடைய மன அமைதி குலைந்து போய்விடும்'' என்றார்.

கடைக்காரரின் செயல் மனச்சாட்சி என்பதற்கு ஒரு உதாரணம்

(தென்கச்சி கோ.சுவாமிநாதன்).

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்...





உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழாவில் வீரபத்திரர் பத்திரகாளி சமேதராக உள்வீதி வலம் வருவதையும் சுவாமி தேரில் ஆரோகணித்து அடியார்களுக்குக் காட்சியளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: எஸ்.மூர்த்தி)*



மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழாவின்போது அம்பாள் தேரில் உலாவரும் காட்சியைப் படத்தில் காணலாம்.



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆனி உத்தர தரிசனத்தின்போது சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் திருவீதி உலா வந்து பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

## சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல

விஞ்ஞான உலகில் மனிதன் வாழ்ந்துகொண்டு இருந்தாலும் மனிதனின் நல் வாழ்விற்குச் சமய அறிவின் துணை அவசியம்.

மனிதன் ஐந்தறிவு படைத்த விலங்குகளிலும் வேறுபட்டு, மேம்பட்டு நிற்பது ஆறாவது அறிவான பகுத்தறிவு அவனிடம் இருப்பதால் ஆகும். மனிதன் மனிதனாக வாழ அவனிடம் நல்ல பழக்க வழக்கங்கள் இருக்க வேண்டியது அவசியம். அதை அவனுக்குக் கற்றுக் கொடுப்பவள் தாய். அவளுக்கு அடுத்த படியாக நல்ல பழக்க வழக்கங்களைப் போதிப்பது சமயந்தான்! 'தாய் தந்தையரே உலகம்' என்று எடுத்துக் காட்டிய விநாயகர், இராம அவதாரம் மற்றும் சைவநீதி தழைக்க அவதரித்த நாயன்மார்கள், இவர்களின் வரலாறுகள் நமக்கு நற்பழக்கங்களைப் போதிக்கின்றன.

தாய் தந்தையரை மதித்தல் (விநாயகர்), ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற கற்புநெறி (இராம அவதாரம்). விருந்தோம்பும் பண்பு (அப்பூதியடிகள், சிறுத்தொண்ட நாயனார்), நட்பு (சுந்தரர்) என்பனவும் இன்னும் பலசிறந்த பண்புகளும் புராணங்களும் நமக்குக் கற்றுத்தரும் பாடங்கள். ஒருவன் வாழ்வை நேர்மையாகக்கொண்டு செல்ல அன்றாடம் சமய நூல்களைப் படிப்பதும், அந் நூல்கள் கூறும் சமயவழி நடப்பதும் மிகவும் அவசியமாகின்றது.




இன்பமும் துன்பமும் மனித வாழ்வில் சகஜம். இன்பத்தைக் கண்டு துள்ளும் மனிதன் துன்பத்தைக் கண்டு துவளுகின்றான். மனிதன் மனம் சோர்ந்த வேளைகளில் அவனுக்கு மன ஆறுதலை அளிப்பது சிந்தனைகள்தான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று அவன் மேல் துன்பப் பாரத்தைப் போடுவதால் மனிதனின் பாரம் சிறிது குன்றவதை உணருகின்றான். அன்றாடம் துன்பத்திலும் ஒருவனுக்கு ஆறுதல் தெய்வ வழிபாடுதான் என்றால் மிகையாகாது.

''இறைவனே! உன் திருவருள் துணை எனக்கிருந்தால் நரகமானாலும் சரி அங்கே சென்று வாழ்வேன்'' என்று மாணிக்கவாசகர் சொல்லுகிறார். நரகம் புகினும் எல்லேன் திருவருள் இருக்கப் பெறின் இறைவா. இறைவன் திருவருள் இல்லாவிட்டால் இன்பலோகம் நரகலோகமாக இருக்கிறது. இறைவனுடைய நம்பிக்கையோடு வாழ்பவர்களுக்கு நரகம் சுவர்க்கமாகத் தோன்றுகின்றது.

ஒரு சிறு துரும்பும் கோடரியாக இருக்கிறது என்பது உண்மையாகும்.

சிறுவர்கள் முறையாகச் சமய அறிவைப் பெறுவார்களேயானால் அது அவர்களைக் குற்றச்செயல்கள் செய்வதிலிருந்து தடுத்துவிடும். குற்றம் செய்ய நினைத்தாலும், தெய்வ பயமும், மனச்சாட்சியும் அந்த நினைப்பை அவர்கள் மனத்திலிருந்து நீக்கிவிடும். சட்டத்துக்கு அஞ்சி நடப்பதிலும் பார்க்கத் தெய்வத்துக்கு அஞ்சி நடப்பதுமேல். எனவே ஒருவனைச் சரியான பாதையில் வழி நடத்துவது சமயமல்லவா? அதனால் சிறுவயதிலிருந்து சமயவழி ஒழுகப் பயிற்றப்படல் அவசியம். அது அவனை அன்றாடம் சரியான வழி நடத்திக் காக்கும் என்பது நிச்சயம்.

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல. சமய அடிப்படையிலேயே வாழ்க்கை அமைய வேண்டும். ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் பொறாமை, கோபம், சுயநலம், பேராசை முதலியவற்றை மனதிலிருந்து அறிவின் வலிமையாலும், ஆண்டவனின் நம்பிக்கையாலும் அகற்றி மனத்தைத் தூய்மைப்படுத்தி வாழ்வதே சமய வாழ்க்கை. இதுவே இறைவனது அருளைப் பெறுவதற்கு ஏற்ற வழி.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'.

நன்றி: அர்ச்சுனா.

## ஆன்மீக சாதனை

நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப.3.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்னால் உள்ள திருநெல்வேலி ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தில் ஆன்மீக சாதனை நடைபெறவுள்ளது. இதனையொட்டி இந்தக் கட்டுரை வெளியாகின்றது.

மகாபாரத யுத்தத்துடனேயே கலியுகம் தொடங்கி விட்டது. கலியுகத்தில் தர்மத்தின் வெளிப்பாடு எவ்வளவோ குன்றியுள்ளது. தர்மம் குன்றினால் அதர்மம் தலை விரிக்கும். கலியுகம் எவ்வளவு கடினமாயினும் ஆன்மீக சாதனைக்கு ஏற்றது.

நல்லவர்களின் பிரார்த்தனையாலும், கெட்டவர்களை நல்வழிப்படுத்தி தர்மத்தின் மகிமையை வெளிக்கொணர்வதற்கு பரமாத்மா மானிடவேடம் எடுத்துள்ளார். இதையே நாம் அவதாரம் என்கிறோம். இறைவன் மனித உருவத்தில் சத்தியசாயி பாபா என்ற நாமத்துடன் இந்தியாவின் புட்டபர்த்தி என்ற கிராமத்திலே எழுந்தருளியுள்ளார். இது கலியுகத்தில் வாழும் எமக்குக் கிடைத்த மகத்தான ஆசீர்வாதம் என்றே கூறலாம்.

அவரின் வாழ்வும் போதனைகளும் எம்மை முத்தி நிலைக்கு எடுத்துச் செல்ல வல்லன. எமது தொன்மை வாய்ந்த சமயத்திலுள்ள ஆழமான கருத்துக்களுக்கு மிகவும் எளிய முறையில் அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் விளக்கம் கொடுத்து எம்மை ஈடேற்றுகின்றார்.



இறைவனைத் தரிசித்து அளவளாவி பாத நமஸ்காரம்பெற்று ஆனந்தமடைய மிகவும் உகந்தகாலம் இதுவேயாகும். பகவான் ஆன்மீக சாதனை, மானிட சேவை, மனிதநேயம் இணைந்த கல்வி என்பவற்றை வலியுறுத்துகின்றார். இறைவனுடன் ஐக்கியமாவ தற்கு ஆன்மீக சாதனை மூலம் நாம் எம்மைத் தகுதியாக்கி எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

ஜெய் சாயி ராம்
வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை 16

உரும்பிராய் காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 16

சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 24ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (204)


* * *


கொழும்புத்துறை,ஜூலை 16

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு இடம்பெற்று 24ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலியும் 6.45 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.

அன்றையதினம் பி.ப.4.30 மணிக்கு திருச்சொரூப ரதப்பவனி குருநகர் வீதியூடாக நடைபெற்று திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (204-135)





கனடாவில் இருந்து வருகைதந்த கலாநிதி சந்தன சுமித்வராச்சி என்பவரால் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் சந்தன சுமித்வராச்சி மாணவி ஒருவருக்கு நூலினை அன்பளிப்பாக வழங்குவதனையும், அருகில் கிளிநொச்சி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் ஆகியோர் நிற்பதையும், நூலகத்திற்கு வழங்கிய பொருள்களை கலாநிதி சந்தன பார்வையிடுவதனையும் படங்களில் காணலாம். (405)

# மன்னாருக்கு அழைத்துச் செல்லப்பட்ட 110 குடும்பங்கள் நிர்க்கதி நிலையில்!

## பட்டினிச்சாவை எதிர்நோக்கும் அபாயம்

மன்னார், ஜூலை 15

வவுனியா முகாமிலிருந்து மீள்குடியமர்வுக்காக மன்னாருக்கு அழைத்துச் செல்லப்பட்ட 110 குடும்பங்கள் அநாதரவாக விடப்பட்டுள்ளன. இவர்கள் உணவு இன்றி பட்டினிச்சாவை எதிர்நோக்குகின்றனர் என மன்னாரில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

110 குடும்பங்களைச் சேர்ந்த 257 பேர் கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை இரவு மன்னார் பெரியபண்டிவிரிச்சான் பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர். இவர்கள் தற்காலிகமாக பெரியபண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களது சொந்த வீடுகள் பண்டிவிரிச்சான் பகுதியிலேயே உள்ளன.

ஆனால் இவர்களது வீடுகள் அனைத்தும் குடியிருக்க முடியாத அளவுக்கு சேதமுற்றுள்ளதுடன் இவர்களின் வீடு வளவுகள் பற்றைக்காடாகக் காட்சியளிக்கின்றன.

வவுனியா முகாமில் இருந்து ஆறு பஸ்களில் இவர்கள் அழைத்துவரப்பட்டனர் என்றும் இந்த 110 குடும்பங்களுக்கும் மீள் குடியேற்ற அமைச்சு எவ்வித கொடுப்பனவுகளையும் வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இவர்களுக்கு நிவாரணப் பொருள்களோ அல்லது மீள்குடியமருவதற்கான வீடுகளை நிர்மாணித்துக் கொள்ளும் வகையில் கூரைத் தகரங்கள், சிமெந்து என்பனவோ வழங்கப்படவில்லை.

மீள்குடியமர்த்தப்படுபவர்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சு 75 ஆயிரம் ரூபா வழங்குகிறது என அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவும் பிரதிஅமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் சமீபத்தில் அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(இ - 01- 238)

# கிளிநொச்சிப் பாடசாலைகளுக்கு புத்தகங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஜூலை 16

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு கனடாவில் இருந்து வருகை தந்த கலாநிதி சந்தன சுமித்வராச்சி 10 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

கனடாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த இவர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சியில் உள்ள சில பாடசாலைகளுக்கு இவ்வாறு புத்தகங்களை அன்பளிப்புச் செய்வதாக தெரிவித்தார். கனடாவில் உள்ள தனது நண்பர்களின் உதவியுடன் இவ்வாறு அன்பளிப்புக்களைச் செய்வதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

கிளிநொச்சி இந்துக் கல்லூரி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, வட்டக்கச்சி மகா வித்தியாலயம், முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கும் இவ்வாறு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (1-405)

# கொச்சைத் தமிழில் உரையாடியவர்கள் பணத்தையும் மோதிரத்தையும் அபகரித்தனர்

## கிளிநொச்சியில் அதிகாலை வேளை சம்பவம்

கிளிநொச்சி,ஜூலை16

கிளிநொச்சி கணேசபுரம் கிராமத்தில் உள்ள வீடொன்றில் அதிகாலை வேளையில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடந்த 6 ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் வீட்டினுள் நீப்பைத் துண்டுகளுடன் நுழைந்த மூவர் வீட்டினுள் யாரோ வந்துள்ளதாகவும் பார்க்கப் போவதாகவும் கொச்சைத் தமிழில் உரையாடி உள் நுழைந்தனர்.

இவர்கள் ஜீன்ஸும் பச்சை நிற ரீசேட்டும் அணிந்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

வீட்டில் உரிமையாளர் தனியாக இருந்த நிலையில் அவரது ங்ககளை சாறி ஒன்றினால் கட்டிவிட்டு அங்கிருந்த 30 ஆயிரம் ரூபா பணத்தையும் அவரது கையிலிருந்த மோதிரத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாகப் பொலிஸிலும், இராணுவத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் சம்பவ வீட்டை வந்து பார்த்துச் சென்றுள்ளனர். (1-405)

# திருமுறிகண்டி-ஆனையிறவு வீதியை அகலிக்கத் திட்டம்; அதற்கேற்ப கட்டடங்களை அமையுங்கள்

## கரைச்சிப் பிரதேசசபை ஆணையாளர் கோரிக்கை

கண்டாவளை,ஜூலை16

திருமுறிகண்டியில் இருந்து ஆனையிறவு வரையிலான ஏ-9 வீதியின் அளவு புதிதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய குறிப்பிட்ட வீதியோரங்களில் கட்டடங்களை அமைக்குமாறு கரைச்சிப் பிரதேச சபையால் கேட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட திருமுறிகண்டியில் இருந்து ஆனையிறவு வரையிலான ஏ-9 கண்டி வீதியின் அளவு எதிர்காலத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

அதற்கமைய குறிப்பிட்ட இந்த வீதியின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் தலா 24 மீற்றர் அகலமாக இருக்கும். இதற்கு அமைய வீதியின் மொத்த அகலம் 48 மீற்றர் ஆக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதியின் அகலத்திற்கு அமைவாக வீதியின் இரு மருங்கிலும் கட்டடங்களை அமைப்போர் தமது எதிர்கால நட வடிக்கைகளை மேற்கொண்டு கட்டடங் களைக் கட்டுவதற்கான அனுமதிக்கு கரைச்சிப் பிரதேசசபைக்கு விண்ணப்பம் செய்யுமாறு கரைச்சிப்பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

(1-432)




# புனரமைக்கப்பட்ட வேரவில் பிள்ளையார் கும்பாபிஷேகப் பெருவிழா இன்று

பூநகரி,ஜூலை16

புனரமைக்கப்பட்ட பூநகரி வேரவில் வெள்ளிப் பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 5 மணிமுதல் புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா ஏககுண்ட மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவுள்ளது.

இந்தக் கும்பாபிஷேக நிகழ்வு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இரத்தினேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரைகளை சிவப் பிரம்மஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்கள், சிவப்பிரம்மஸ்ரீ செ.தெட்சணாமூர்த்தி சர்மா, சைவப்புலவர் திருவருள் வ.ஆ.தங்கமயில் ஆறுமுகம், சுப்பிரமணியம் ஆகியோரும், தெய்வீகப் பேருரை, ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன், சைவப்புலவர் கந்த சத்தியதாசன் ஆகியோரும் வழங்குவார்கள்.

வாழ்த்துரையினை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன், பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசரதகுமார், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவஸ்ரீ வி. சொக்கநாதன் ஐயா, விரிவுரையாளர் து. இளங்குமரன், கிராம அலுவலர் த.மகாபரன் ஆகியோர் வழங்குவார்கள்.

நிறைவுரையினை சைவப்புலவர் சுகுமுகலிங்கமும், நன்றியுரையினை கிளிநொச்சி அ.த.க. பாடசாலை அதிபர் ஐ.கேசவனும் வழங்குவர். (1)

# மன்னாரில் மீளக்குடியேறிய குடும்பத்துக்கு வீடு அமைத்துக் கொடுத்த படையினர்

மன்னார்,ஜூலை 16

மன்னார் படைத் தரப்பினரால் கட்டப்பட்ட புதிய வீடு ஒன்று மீள்குடியேறிய குடும்பம் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டது.

அடம்பன் பிரதேசத்தில் அடம்பன்-திருக்கேதீஸ்வரம் வீதியிலுள்ள சேத்துக்குளம் பகுதியில் மீள்குடியேறிய குடும்பம் ஒன்றே இவ்வீட்டைப் பெற்றுக் கொண்டது.

சகல வசதிகளுடனும் கூடிய இவ்வீட்டைக் கையளிக்கும் வைபவத்தில் படைத் தரப்பினர் முன்னிலையில் அடம்பன் பிரதேசக் கார்மேலீ சபையைச் சேர்ந்த அருட் சகோதரி ரோஸலின் வீட்டின் நுழைவாயிலின் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் பிராந்தியக் கட்டளை அதிகாரி மைத்திரி டயஸ், 215 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் லிக்கும் லியனகே, அடம்பன் பகுதிக்குப் பொறுப்பான மேஜர் ரந்தெணிய, அடம்பன் மகா வித்தி யாலய அதிபர் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர். (1-80)

# பச்சை மரங்களில் ஆணி அடிப்பதை நிறுத்துமாறு பிரதேச சபை கேட்கிறது

## அவை பட்டுப்போவதைத் தவிர்ப்பதற்காக

கண்டாவளை,ஜூலை 16

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளின் வீதி ஓரங்களில் உள்ள பச்சை மரங்கள் மீது ஆணி அடிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச சபை கோரியுள்ளது.

அண்மைக்காலமாக வீதி ஓரங்களில் உள்ள பச்சை மரங்கள் மீது ஆணி அடித்து விளம்பரங்களை சிலர் தொங்கவிட்டுள்ளனர். பச்சை மரத்தின் மீது ஆணி அடிப்பதால் அந்த மரம் விரைவில் பட்டுப் போகும் நிலையுள்ளது. எனவே இச்செயலை முற்றாக தவிர்த்துக் கொள்ளும் வண்ணம் கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன். நித்தியாணந்தம் கேட்டுக் கொண்டுள்ளார். (1-432)

# ஐ.நா. செயலரின் குழு குறித்து சர்வதேச நீதிமன்றுடன் இலங்கை ஆலோசிக்கலாம்

## கலாநிதி லஷ்மன் மாரசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 16

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூன் நியமித்துள்ள ஆலோசனைக் குழு குறித்து சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனையை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா, ஒன்ரோறியோ வின்ட்ஸர் பல்கலைக்கழகத்தின் இலங்கையைச் சேர்ந்த விரிவுரையாளர் கலாநிதி லஷ்மன் மாரசிங்க இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் அமைத்துள்ள நிபுணர் குழுவின் உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அல்லர். அவர்கள் மூவரும் வெளியில் இருந்து உள்வாங்கப்பட்டவர்களாவர்.

இந்நிலையில் பான் கீ மூனின் இந்தக் குழு உள்ளூர் விசாரணைகளின் அடிப்படையிலன்றி, சர்வதேச விசாரணையின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

எனவே இந்தக்குழுவின் நியமிப்புக்கு ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புக் குழுவின் அங்கீகாரம் பெறப்படவேண்டும். இதனை ஐக்கிய நாடுகள் சபையின் 5 ஆவது சரத்தும் வலியுறுத்துகிறது.

எனவே, இலங்கை அரசு இந்த விடயம் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெறமுடியும்.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

# ஐ.நா. செயலரின் குழுவை அங்கீகரிக்கப்பட்ட ஓர் அலகாக ஏற்க முடியாது என்கிறார் பாலித

கொழும்பு, ஜூலை 16

பான் கீ மூனால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவை ஓர் அங்கீகரிக்கப்பட்ட அலகாக ஏற்றுக்கொள்ள முடியாது - என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

ஐ.நா. செயலரின் ஆலோசனைக் குழுவை ஐக்கிய நாடுகளின் எந்தவொரு தீர்மானம் நிறைவேற்றும் அலகும் அங்கீகரிக்கவில்லை என்றும் இந்தக் குழுவை ஓர் அதிகார பூர்வமான அலகாகக் கருத முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் கடந்த வருடம் முன்வைக்கப்பட்ட இந்த மாதிரியான யோசனைத் திட்டமொன்றை இலங்கை நிராகரித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உகண்டா குண்டுவெடிப்பில் இலங்கைத் தமிழரும் பலி

கொழும்பு, ஜூலை 16

உகண்டா, கம்பாலவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த குண்டுவெடிப்பில் இலங்கைத் தமிழர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கம்பாலாவில் கடமை புரிந்த ராமராஜா கிருஷ்ணா என்பவரே சம்பவ இடத்தில் கொல்லப்பட்டுள்ளார் என கென்யாவிலுள்ள இலங்கைத் தூதர் ஜயந்த திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ராமராஜாவின் குடும்பத்தினர் இலங்கையில் இருக்கின்றனர் எனவும், இத்தாக்குதல் சோமாலிய அரசுக்கு எதிராகச் சண்டையிடும் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்றும் அவர் கூறினார். (சி)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2138 திகதி 14-07-2010

ஆங்கில எழுத்திற்கும் T

வெற்றி எண்கள் 09 17 32 45

போனஸ் இல: 36

ஜக்பொட் பரிசு ரூ. 13,357,075/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 191282 | 20/- | 3,825,640/- |
| 2 இல | 13599 | 100/- | 1,359,900/- |
| 3 இல | 284 | 1,000/- | 284,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7641 | 40/- | 305,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 564 | 1,000/- | 564,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 06 | 10,000/- | 60,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,357,075/- | - |
| 1 இல + போனஸ் இல | 9099 | 100/- | 909,900/- |
| 2 இல + போனஸ் இல | 423 | 500/- | 211,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 355 | 200/- | 71,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,220,080/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 223289 | | 9,820,080/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 202084098-7-13 |
| புத்தளம் | 202079925-4-35 |
| நுவரேலியா | 202082002-9-21 |
| கண்டி | 202081930-3-26 |
| மட்டக்களப்பு | 202083159-4-22 |
| காலி | 202088293-3-36 |
| கொழும்பு | 202084243-6-29 |
| திருகோணமலை | 202084338-9-45 |
| குருநாகல் | 202079049-1-17 |
| பொலன்னறுவை | 202085924-7-41 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 13,878,900/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஜூலை 17 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 519

சீட்டிழுப்பு திகதி: 14.07.2010

வெற்றி எழுத்து: D வெற்றி இலக்கங்கள்: 14 37 47 52

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 16,475,009.60 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 215 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 419 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10950 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6291 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 157371 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25283 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 6,348,720.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர: 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 243363
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,060,006.40

# விஞ்ஞான பாட மாணவர்களுக்கு விசேட செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

வலிகாமம் கல்வி வலயத்தால் இவ்வாண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் விஞ்ஞான பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென விசேட செயற்றிட்டமென்று நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்படி உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் பகுதிகள் சார்ந்த தனித்தனி ஏழு வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு வாராந்தம் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. (50-201-38)

# செயலமர்வுகள்

வேலணை, ஜூலை 16

தீவக வலயத்தில் வேலணை அம்பிகை பொது மண்டபத்தில் இயங்கும் திறந்த பாடசாலை கற்றல் அமர்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் நடைபெறும் எனவும் கற்றலில் ஆர்வமுள்ளவர்கள் இணைந்து கொள்ள முடியும் எனவும் பாடசாலையின் சிரேஷ்ட போதனாசிரியர் க.கதிரேசபிள்ளை கேட்டுள்ளார். (50-201-267)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 16

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 முதல் 11 வரை சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணிமுதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

5 E முறை மூலம் பாட அலகுகளை முன்னெடுத்தல் தொடர்பாக இச்செயலமர்வில் தேசிய கல்வி நிறுவனத்திலிருந்து வருகை தரும் வளவாளர்கள் கலந்து கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் பயிற்சிக்கான சீருடையுடனும் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-201-38)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் சித்திரப்பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கான சித்திரபாடச் செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்.இந்துக் கல்லூரியின் ஆசிரியர் வள நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி செயலமர்வு 'நவீன இலங்கைக் கலைப்போக்கு' தொடர்பான பகுதியை (ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்திர பாடத்திட்டப்படி முன்னோடிக் கலையாக்க முயற்சிகள், இலங்கை கலைக்கழக ஓவியக் கலைஞர்கள், 43 குழுவினரின் கலைப்படைப்புக்கள், சமகாலக் கலைப் போக்குகள்) முன்னிறுத்தும் காட்சி விளக்க நிலைக் கருத்தரங்காக அமையவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் சித்திர பாடத்தைக் கற்கும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு நுண்கலைத்துறைத் தலைவர் அறிவித்துள்ளார். (50-201)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 19 ★ 03 ★ 1935



இறைவன் அடியில் 16 ★ 07 ★ 2004

திருமதி திலகவதி கந்தசாமி

திதி : சதுர்த்தசி (09.08.2010)

எம் அன்பின் உறைவிடம் எமை மீளாத்துயரில் ஆழ்த்தி நான்கு ஆண்டுகள் கடந்தும் உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு என்றென்றும் நீங்காது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
கணவர் Dr.K. கந்தசாமி (J.P),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

6/2A, Dr.E.A. Cooray Mawatha, Wellawatta.

கல்வத்தை, கரவெட்டி.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 23 ❋ 04 ❋ 1942



இறைவன் அடியில் 16 ❋ 07 ❋ 2008

அமரர் திருமதி. மேரி திரேசா ஜோஜீனா விமலதாஸ்
(இளைப்பாறிய உப அதிபர், யாழ். கன்னியர் மகா வித்தியாலயம்)

ஆண்டு இரண்டு போனாலும்,
எமது இதயத்தின் வேதனை ஆறிடுமா,
உங்கள் நினைவலைகளுடன்,
வாழும் குடும்பத்தினர்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக,
என்றென்றும் இறைவனை,
பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்,
கணவன், பிள்ளைகள்.

## 15 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டம்;

# மகாஜனா, உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் இணைந்து ஒரே நாளில் 571 ஓட்டங்கள் குவித்துச் சாதனை


136 ஓட்டங்களை விளாசிய சிந்துஜன்


4 விக்கெட்டுக்களை வீழ்த்திய ஜனந்தன்

தெல்லிப்பழை,ஜூலை16

**பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் 15 வயதுப் பிரிவினருக்கான சுற்றுப் போட்டியில் இரு அணிகளும் 571 ஓட்டங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளன.**

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 326 ஓட்டங்களையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் 245 ஓட்டங்களையும் ஒரே நாளில் விளாசி இச்சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு படைக்கப்பட்ட சாதனை இதுவாகும்.**

**இரு அணியினரும் ஏறத்தாழ முழுமையான ஓவர்களையும் துடுப்பாடியும் சாதனை நிலைநாட்டியுள்ளனர்.**

**கடந்த 9 ஆம் திகதி இந்த ஆட்டம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.**

முதலிலே துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியினர் 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 326 ஓட்டங்களைக் குவித்தனர். மகாஜனா அணியின் துடுப்பாட்டத்தில் கே.சிந்துஜன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நான்கு சிக்சர்கள், 17 பவுண்டறிகளுடன் 134 ஓட்டங்களைக் குவித்துத் தனது அணி 300 ஓட்டங்களைத் தாண்டிச் செல்ல உதவினார். கே.றசிகரன் 13 பவுண்டறிகளுடன் 72 ஓட்டங்களைப் பெற்றார்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பந்து வீச்சில் ஆர்.நிரோஜன் 8.5 ஓவர்கள் பந்து வீசி 71 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஜே.அனந்தகுமார் 2 விக்கெட்டுக்களையும், ப.லவன், எஸ்.நிலக்சன், ரி.சஞ்சீவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

50 ஓவர்களில் 327 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியினர் 47.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் 81 ஓட்டங்களால் தோல்வி அடைந்தனர்.

இந்த அணியின் துடுப்பாட்டத்தில் பிரணவன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி இரண்டு சிக்சர், 16 பவுண்டறிகளின் உதவியுடன் 94 ஓட்டங்களைப் பெற்றார். எஸ்.நிலக்ஷன் ஒரு சிக்சர், 6 பவுண்டறிகளுடன் 64 ஓட்டங்களையும், சஞ்சீவன் ஒரு சிக்சர், 3 பவுண்டறிகளுட்ன் 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனாவின் பந்து வீச்சில் ஜே.ஜனந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 29 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். எஸ்.கஜந்தன் 3 விக்கெட்டுக்களையும் பிரசாந்த மயூரன், அனுராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (1-55)


இ.செந்தூரன் உயரம்பாய்தல் (தங்கப்பதக்கம்)

வ.ஜஸ்மினன் நீளம்பாய்தல், முப்பாய்ச்சல் (தங்கப்பதக்கம்)

க.பிரகாஸ் குண்டுபோடுதல் (தங்கப்பதக்கம்)

இ.சஜிந்திரா 100 மீற்றர் ஓட்டம் (வெள்ளிப்பதக்கம்)

கு.சிவேந்திரன் 200 மீற்றர் ஓட்டம் (வெள்ளிப்பதக்கம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் நான்கு தங்கப் பதக்கங்களையும், இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டோரைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

## ஜெயராஜ் விளாசிய சதம் கைகொடுக்க காலிறுதிக்குள் நுழைந்தது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம்,ஜூலை16

ஜெயராஜ் அதிரடியாக ஆடி சதம் அடிக்க ஜொலிஸ்ரார் அணி கால் இறுதிக்குள் நுழைந்தது.

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஜீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்காக 50 ஓவர்கள் பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை நடந்த ஆட்டத்திலேயே ஜொலிஸ்ரார் கால் இறுதிக்குத் தகுதி பெற்றது.

இந்த ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயராஜ் 105 ஓட்டங்களையும், நிரஞ்சன் 86 ஓட்டங்களையும், பிரிய தர்ஸன் 40 ஓட்டங்களையும், லக்ஸ்மி 23 ஓட்டங்களையும், பகீரதன் 22 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர்களான குமணன், கிருஷாந் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் லவேந்திரா, சன்ஜீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

341 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனகளம் இறங்கிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 39.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டினையும் இழந்து 256 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ரட்ணம் 69 ஓட்டங்களையும், குமணன் 54 ஓட்டங்களையும், அன்புஜன் 27 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தன.

பகீரதன், பிரியதர்ஸன், நிரஞ்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் அணியை கால் இறுதிப் போட்டியில் எதிர்கொள்வர்.

## இன்றைய ஆட்டங்கள்

தியாகிகள் தினத்தையொட்டி பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு,

* பிற்பகல் 3.45 மணிக்கு நாவாந் துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம்.
* மாலை 5 மணி - குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் எதிர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்.

(50-23)

## செயலகத்தின் தடகளப் போட்டி சனி,ஞாயிறு

யாழ்ப்பாணம்,ஜூலை16

யாழ்.மாவட்ட பிரதேச செயலகக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டு விழா எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்.துரைய்ப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

தடகளப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை 2 மணியளவில் மேலதிக அரச அதிபர் றூபினி வரதலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை, மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் பி.கே. ஆனந்தராசா, திட்ட முகாமையாளர் சிறுவர் பாதுகாப்பு நிறுவனர் கே.மகேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (1-23)




## 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையில் பதுளையில் நாளை உதைபந்தாட்டப் போட்டி

### மாவட்டச் சம்பியனான யாழ்.சென்றலும் பங்கேற்கிறது

வலி.வடக்கு,ஜூலை16

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியாக 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பதுளை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டிகளில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நேற்றுப் புறப்பட்டுச் சென்றுள்ளது. (1-86)

## தென்மராட்சிக் கழகங்கள் பங்கேற்கும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை16

தென்மராட்சிப் பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

சாவகச்சேரி நகரசபை விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு ஆடுகளங்களில் தலா இரண்டு போட்டிகள் தினமும் நடைபெற்று வருகின்றன.

பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள், பொது அமைப்புக்கள், படையினர், பொலிஸ் ஆகியவற்றின் கரப்பந்தாட்ட அணிகளின் 'செற் - அப்' முறையிலான போட்டிகளில் பங்குபற்றி வருகின்றன.

இறுதிப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

போட்டிகளுக்கு நடுவர்களாக சார்ஜன்ட் மெண்டிஸ், சார்ஜன்ட் வீர பண்டார, கோப்ரல் பியந்த ஆகியோர் கடமையாற்றுகின்றனர். (1-207)




வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, 2 ஆம் இடத்தைப் பெற்ற வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலயம், 3ஆம் இடத்தைப் பெற்ற வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஆகியவற்றைப் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

# பாடசாலைகள் பங்குபற்றும் கலைப்போட்டிகள் நாளை

கொழும்புத்துறை, ஜூலை 16

ஹற்றன் நஷனல் வங்கியும் கல்வி அமைச்சும் இணைந்து நடத்தும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான கலைப்போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக வங்கி அதிகாரியொருவர் தெரிவித்தார். தனிப்பாடல், பேச்சு, குறுநாடகப் போட்டிகளும் என்பன அன்றைய தினம் நடைபெறவுள்ளது. (50-135)

# பனை சார் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜூலை 16

பனை அபிவிருத்திச் சபையால் நடத்தப்பட்ட பனைசார் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை பனை அபிவிருத்திச்சபை தலைமைக் காரியாலத்தில் மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச்சபை மண்டபத்தில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் பயிற்சியாளர்களைப் பங்கு கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-135)

# வீதி புனரமைப்பு

கொழும்புத்துறை, ஜூலை 16

கொழும்புத்துறை மேற்கு, இலந்தைக்குளம் வதிரிபீட விநாயகர் ஆலய வெளி வீதி அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வீதி அமைப்புக்குத் தேவையான கற்கள் மற்றும் பொருள்கள் அப்பகுதியில் குவிக்கப்பட்டு வருவதாகவும் துரிதகதியில் இப்புதிய வெளி வீதியை தார் வீதியாக அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது இவ்வாலயத்தின் சித்திரத் தேர் பவனி கிராம வீதிகளூடாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (50-135)

## அலங்காரத் திருவிழா

கோப்பாய், ஜூலை 16

கோப்பாய்பலாணை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.


புதுமை காண்பதற்கான

ஹெலதிவ்®
தேயிலை

எமது நாடளாவிய விஸ்தரிப்பின் பங்காளிகளாகுமாறு
யாழ்ப்பாண பிரஜைகளுக்கு எமது அழைப்பு.

தேயிலை மற்றும் தேயிலை சார்ந்த வர்த்தகத்தின் (20) இருபது ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் கொண்ட நிறுவனமானது எமது எச்.வீ.ஏ. புட்ஸ் (HVA Foods PVT Ltd) தனியார் நிறுவனம். நாம் தேயிலை மற்றும் ஐஸ் தேநீர் பொருட்களின் "ஹெலதிவ்" வர்த்தக குறியின் உரிமையாளராவோம்.

2010 ஜுலை மாதம் 16,17,18 ம் திகதிகளில் நாம் யாழ்ப்பாண வலையத்தில் இருப்போம் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1.சுவையூட்டும் தேயிலை ரகம்
2.பி.ஓ.சி (P.O.C)
3.ஐஸ் தேநீர்
4.தேயிலை பெரும்பகுதி
5.இங்கிலிஸ் பி/எப் B/F

யாழ்ப்பாண பிராந்தியத்திற்கான எமது விநியோகஸ்தரை தெரிவு செய்யும் முகமாக யாழ்ப்பாண பிராந்தியத்தின் சிறந்த முதலீட்டாளர்களை சந்திக்கவும் நாம் விரும்புகிறோம். இது தொடர்பாக ஆர்வம் கொண்டிருப்பின் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

- விதுர -94-77-777-1122
- ஹர்ஷ -94-77-789-6430
- தம்மிக -94-77-385-6615
- நவீன் -94-77-395-5515

ஏச்.வீ.ஏ.லங்கா எக்ஸ்போர்ட் தனியார் நிறுவனம
39 ஏ. லிண்டன் ரோட், கந்தானை, ஸ்ரீ லங்கா




# மரண அறிவித்தல்



## சத்தியவான் மரியதாஸ் மரியாம்பிள்ளை

*(முன்னாள் நடத்துநர், இ.போ.சபை )*

பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இல.01, 2 ஆம் குறுக்குத் தெரு, குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியவான் மரியதாஸ் மரியாம்பிள்ளை 11.07.2010 ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - இராசாத்தி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சேவியர் மரியமுத்துவின் அன்பு மருமகனும், அந்தோனிக்கம்மாவின் அன்புக் கணவரும் குயின் வேஜின் (ராணி-கொழும்பு, முன்னாள் ஆசிரியர் சென்.ஜேம்ஸ் ம.வி), சத்தியவான் றமேஸ் (கட்சன் - லண்டன்), காலஞ்சென்ற டெகாமிற் அமல்ராஜ் (றிக்ஷன்) மற்றும் டொனால்ட் றிகர்ஷன் (நெல்சன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரநாதன், யாழினி, மலர், றெனிசியா ஆகியோரின் அன்பு மாமனாரும் அனோஜினி, துஷிந்தா, நிக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பவளம் மற்றும் புஷ்பம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பூலோகசிங்கம், சாள்ஸ், கிளாறம்மா, வென்சிஸ்லாஸ் மற்றும் சிறில் மணி, தங்கன், நேசன், தவராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.07.2010) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.01, 2 ஆம் குறுக்குத்தெரு,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (100660)

*தகவல்:*
*மனைவி, பிள்ளைகள்.*

# நக்ஸல் இயக்கத்தை முற்றாக ஒடுக்க 34 பட்டாலியன் கொண்ட புதிய படை!

## புதுடில்லி ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய அரசு பரிந்துரை

டில்லி, ஜூலை 16

நக்ஸல்களைக் கட்டுப்படுத்த ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் தலைமையில் 34 பட்டாலியன்கள் கொண்ட ரிசர்வ் படை உருவாக்கப்படவுள்ளது. மேலும், நக்ஸல் ஆதிக்கம் மிகுந்த மாநிலங்களில் தலா ரூபா 2 கோடி செலவில் கூடுதலாக 400 பொலிஸ் நிலையங்களை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள சத்திஸ்கர், ஜார்கண்ட், ஒரிஸா, மேற்கு வங்கம், மகாராஷ்டிரம், ஆந்திரா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்களுடன் பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் டில்லியில் ஆலோசனை நடத்தினார். அதில் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரமும் பங்கேற்றார்.

இக்கூட்டத்தில் நக்ஸலைட்களை கட்டுப்படுத்துவது, அதற்குத் தேவைப்படும் உதவிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் சிதம்பரம் கூறியவை வருமாறு -

நக்ஸலைட்டுகளை ஒடுக்க எடுக்கப்பட வேண்டிய புதிய உத்திகள் குறித்து நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. சத்திஸ்கர், ஜார்க்கண்ட், ஒரிஸா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் ஓய்வு பெற்ற இராணுவ மேஜரின் தலைமையில் ஒருங்கிணைந்த படை ஒன்றை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

இதை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தப் படைக்காக 34 பட்டாலியன்கள் கொண்ட புதிய ரிசர்வ் படை உருவாக்கப்படும். இந்தப் படைக்கு ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் தலைவராக இருப்பார்.

நக்ஸல் பாதிப்புள்ள 7 மாநிலங்களுக்கும் மத்திய அரசு கூடுதலாக ஹெலிகொப்டர்களை வழங்கும். படைகளுக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்ல - பொலிஸாரை ஏற்றிச்செல்ல - அவசர நேரத்தில் மீட்புப் பணிகளைச் செய்ய இந்த ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்ட மாநிலங்களில் மேலும் கூடுதலாக 400 பொலிஸ்நிலையங்களை அமைத்து கண்காணிப்பை வலுப்படுத்த மத்திய அரசு நிதியுதவி அளிக்கும். 80:20 என்ற ரீதியில் இந்த நிதி அளிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும்.

நக்ஸல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேலைவாய்ப்பை அதிகரிப்பது குறித்து மாநில அரசுகள் முன் முயற்சி எடுக்க வேண்டும். இந்த மாநிலங்களில் மாவட்டங்களுக்கிடையே, இணைப்பை ஏற்படுத்த ரூபா 950 கோடி செலவில் வீதிகள் மற்றும் மேம்பாலங்கள் கட்டப்படும்.

நக்ஸல் பாதித்த மாவட்டங்களில் மேம்பாட்டுப் பணிக்காக சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்தத் திட்டக்குழு ஆலோசித்து வருகிறது. இந்தப் பகுதிகளில் போக்குவரத்து வசதி, ஆரம்பக் கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

- இப்படி சிதம்பரம் தெரிவித்தார்.

# இலங்கைக்கு நடிகர்கள், நடிகைகள் செல்வது குறித்து விரைவில் முடிவு

## அசின் அங்கு சென்றது தவறில்லை; சரத்குமார் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 16

ஹிந்தி படப்பிடிப்புக்காக நடிகை அசின் இலங்கைக்குச் சென்றதில் தவறில்லை; அவர் மீது நடவடிக்கை எடுக்கும் முடிவை மறுபரிசீலனை செய்வோம். மேலும் நடிகர், நடிகைகள் அனைவரும் இலங்கைக்கு நேரில் சென்று தமிழருக்கு உதவுவது குறித்து விரைவில் முடிவெடுப்போம் - என்று நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் கூறினார்.

நடிகர் சரத்குமார் தனது பிறந்த நாளையொட்டி செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்யும்படி நடிகர் சங்கத்துக்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன. நடிகர், நடிகைகள் அனைவரும் இலங்கைக்கு நேரில் சென்று உதவுவது குறித்து நடிகர் சங்க செயற்குழுவில் ஒருமித்த முடிவு எடுக்கப்படும்.

இலங்கையில் நடைபெற்ற சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவில் கலந்து கொள்ளத்தான் தமிழ்த் திரையுலகக் கூட்டு நடவடிக்கைக் குழு தடை விதித்திருந்தது. அதன்படி தமிழ்த் திரையுலகினர் யாரும் பங்கேற்கவில்லை.

ஹிந்திப் படப்பிடிப்புக்காக அசின் இலங்கை சென்றுள்ளது பற்றி பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. இன்றைய சூழலில் தமிழ் நடிகர், நடிகைகள் சர்வதேச அளவில் வரவேற்பு பெற்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஹிந்திப் படத்தில் நடித்து வரும் அசின் அதன் படப்பிடிப்புக்காக இலங்கை சென்றுள்ளார். இதில் தவறேதும் கிடையாது. அவர் மீது நடவடிக்கை எதுவும் தேவை இல்லை என்று கூட்டு நடவடிக்கைக் குழுவில் முடிவெடுப்போம். - இப்படி அவர் கூறினார்.

# சர்வதேசத்தை மதிக்கத் தவறும் இலங்கையை ஐ.நா. சபையிலிருந்து வெளியேற்ற வேண்டும்

## பழ.நெடுமாறன் வலியுறுத்து

சென்னை, ஜூலை 16

உலக நாடுகளை இலங்கை மதிக்கத் தவறுகிறது - ஐக்கிய நாடுகள் சபையையே அவமானப்படுத்துகிறது. எனவே, ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து இலங்கையை வெளியேற்ற வேண்டும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.




மேலும், தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினையில் முதல்வர் கருணாநிதி மக்களை ஏமாற்றுகிறார் - என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்களைக் கண்டித்து, சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தை மூடுமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னையில் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை வகித்து பழ.நெடுமாறன் பேசியவை வருமாறு -

தமிழக மீனவர்களைத் தாக்கும் சம்பவத்தைக் கண்டித்து, எதிர்க் கட்சிகளெல்லாம் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றன. மாநிலத்தில் மட்டுமின்றி மத்திய அரசிலும் அதிகார பீடத்திலுள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதியும் பிரச் சினையைத் தீர்க்க வேண்டிய இடத்தில் இருக்கிறார்.

எனினும், மீனவர் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி அவரது கட்சியும் வீதியில் இறங்கிப் போராடுகிறது. நமது மீனவர்களைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்காத மத்திய அரசைக் கண்டித்து தி.மு.க. போராடவில்லை. இலங்கை அரசைக் கண்டித்துத்தான் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். இது மக்களை ஏமாற்றும் முயற்சியாகும்.

உலகின் சின்னஞ்சிறிய நாடுகளில் ஒன்றான இலங்கை, உலக நாடுகளை மதிக்க மறுக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையையே அவமானப்படுத்துகிறது. எனவே, ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து இலங்கையை வெளியேற்ற வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன் பேசுகையில் -

இனி இதுபோன்ற அடையாள ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டிருப்பதால் நம் மீனவர்கள் பிரச்சினை தீராது. எனவே, மாற்றுப் போராட்டங்களைப் பற்றி யோசிக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம் - என்று கூறினார்.

## இந்தியச் செய்திகள்

# தமிழரைக்கொல்லும் இலங்கையைக் கண்டித்து பேசுவோர் இறையாண்மைக்கு எதிரானவர்களா?

## இப்படிக் கேட்கிறார் வைகோ



சென்னை, ஜூலை 16

தமிழ் மீனவர்களைக் கொன்று குவித்த இலங்கையைக் கண்டித்துப் பேசினால் அவர்கள், இறையாண்மைக்கு எதிரானவர்களா?, தேச பக்திக்கு விரோதிகளா? இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரிகளா?

- இவ்வாறு வைகோகேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழக மீனவர் மீதான இலங்கையின் தாக்குதலைக் கண்டித்து சென்னையில் கடந்த புதனன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேசியவை வருமாறு -

தமிழ் மீனவர்களைக் கொன்று குவித்த இலங்கையைக் கண்டித்துப் பேசுவோரைப் பார்த்து, தொண்டர்படையை அழைத்துக் கொண்டு கடலில் குதித்து அங்கு சென்று போராட வேண்டியதுதானே என்று சிலர் கேட்கிறார்கள். போக வேண்டிய நேரம் வரும்போது நிச்சயம் போவோம். இறையாண்மையைச் சொல்லி - பாதுகாப்புச் சட்டத்தைக் காட்டி மிரட்டாதீர்கள்.

இலங்கையைக் கண்டித்துப் பேசுவோர் இறையாண்மைக்கு எதிரானவர்களா?, தேச பக்திக்கு விரோதிகளா? நாட்டின் பாதுகாப்புக்கு எதிரிகளா?

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் சென்று மீன்பிடிக்கும் குஜராத் மீனவர்களில் ஒருவரைக் கூட பாகிஸ்தான் அரசு சுட்டுக் கொன்றதில்லை. ஆனால், 500 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை இலங்கை அரசு சுட்டுக் கொன்றுள்ளது. இப்போது இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிப்பவர்களை மட்டுமின்றி, இராமேஸ்வரம் கடற்பகுதியில் மீன்பிடிப்பவர்களையும் இலங்கைக் கடற்படை துரத்தித் துரத்தித் தாக்குகிறது. இதை நாம் கண்டித்துப் பேசினால், இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசுகிறோம் எனக் கூறுகிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நியமித்த ஆலோசனைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மஹிந்த அரசு மறுக்கிறது. இதை பல உலக நாடுகள் கண்டித்துள்ள நிலையில், இந்தியா மட்டும் இது வரை கண்டிக்காதது ஏன்?

- இப்படி அவர் கூறினார்.

# மும்பையில் விஷவாயு கசிந்து 103 பேர் வைத்தியசாலையில்!

மும்பை, ஜூலை 16

மும்பைத் துறைமுகத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலையில் குளோரின் விஷ வாயு கசிந்ததால் மாணவர்கள், பொதுமக்கள் உட்பட 103 பேர் பாதிக்கப்பட்டனர்.



தீயணைப்பு வீரர்கள் விரைவாகச் செயற்பட்டதால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

மும்பையில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு கடலோர சுங்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்ட 120 'குளோரின்-சி' எனப்படும் விஷ வாயு சிலிண்டர்கள் துறைமுக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் அங்கு வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய சிலிண்டரில் இருந்து குளோரின் வாயு கசிந்து வெளியேறியது.

இந்த வாயு ஊழியர்களைத் தாக்கியது. இதனால் ஊழியர்களுக்கு மூச்சுத் திணறல், நெஞ்செரிச்சல், கண் அரிப்பு மற்றும் தலைச்சுற்றல் ஏற்பட்டு ஒவ்வொருவராக மயங்கிக் கீழே விழுந்தனர். இதனால் அந்தப்பகுதியில் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டன.

தகவல் அறிந்ததும் தீயணைப்புப் படையினர்சம்பவஇடத்திற்குவிரைந்துவந்தனர். அங்கு வந்த அவர்களையும் வாயு தாக்கியது. மேலும் அருகிலுள்ள எல்.பி.எஸ். கடல்சார் பயிற்சிக் கல்லூரிக்கும் விஷ வாயு பரவியது. இதனால் அங்கு விடுதியில் தங்கியிருந்த மாணவர்களுக்கும் கண் எரிச்சல் ஏற்பட்டது.

நிலைமையின் தீவிரம் தெரியவந்ததும் 10 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் தீயணைப்பு வீரர்கள் துறைமுகத்திற்கு விரைந்து வந்தனர். அவர்கள் முகமூடி அணிந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இதையடுத்து பாதிக்கப்பட்ட அனைவரும் வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

# வைகோ திருச்சி சிறைக்கு மாற்றம்

சென்னை, ஜூலை 15

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ திருச்சி மத்திய சிறைக்கு புதன்கிழமை நள்ளிரவு மாற்றப்பட்டார்.

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் சென்னையில் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பழ.நெடுமாறன் உள்ளிட்ட 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் நீதிபதி முன் ஆஜர்படுத்தப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். இந்நிலையில் வைகோ திருச்சி மத்திய சிறைக்கும், பழ.நெடுமாறன் கடலூர் சிறைக்கும், மற்றவர்கள் வேலூர் சிறைக்கும் புதன்கிழமை நள்ளிரவு கொண்டு செல்லப்பட்டனர் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## கண்ணீர்க் காணிக்கைகள்



எமது பங்கின் முதல்
அருட்சகோதரியும் திருச்சிலுவைக்
கன்னியர் சபையைச் சேர்ந்தவருமான
அருட்சகோதரி

### ஆன்மேரி அந்தோனி

15.07.2010 அன்று காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய புனித யாகப்பரைப் பிரார்த்திக்கின்றோம்.

இளவாலை புனித யாகப்பர் ஆலய
பங்குத்தந்தையும் பங்கு மக்களும்.

---

**IELTS பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கட்கு இலவச கருத்தரங்கு, பயிற்சிப்பட்டறை**

கொழும்பிலிருந்து வரும் **British Council** பிரதிநிதிகளால் கருத்தரங்கு, விசேடபயிற்சிப்பட்டறை நடாத்தப்படும்.

காலம்: **17 July 2010** சனிக்கிழமை.
நேரம்: மதியம் **12.30** மணி
இடம்: **140**, கோவில் வீதி, நல்லூர்.
[UNOPS முன்பாக]

**British Business School**
140, கோவில் வீதி, நல்லூர்.
Tel: 0212225796, 0776646357.

---



## சிவகாளியம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவின் பிரபல ஜோதிடர்

### கங்காதர ஆச்சாரி சுவாமிகள்

திருப்பதியில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்றுகூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசிகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.


**தொ.பே.: 077 6337702 / 077 6335621**

**கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:**
**காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.**

**பீப்பிள்ஸ் இன்**
இல. 112/1, மானிப்பாய் வீதி,
(பிள்ளையார் கோட்டல் கம்பனி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(100666)

---

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 20 - 06 - 1921 |  | 16 - 07 - 2008 |

அமரர்

### அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை

*ஒளி விளக்காயிருந்து எமக்கு வழிகாட்டிய தெய்வமே!*
*பண்பின் சிகரமாயிருந்து எம்மை உயர வைத்து வழிகாட்டிய அன்புத் தெய்வமே!*
*பாசத்தினால் எம்மை பாங்குடன் வாழ வைத்து எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றது ஈராண்டல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவு எம்மோடிருக்கும்..*

உங்கள் நினைவுகளுடன்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ராஜ் வெதுப்பகம்,
பண்டத்தரிப்பு.
(சி/569274)

---

## அலங்காரத் திருவிழா

தென்மராட்சி, ஜூலை 16

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு கற்குழி கந்தசுவாமி ஆலய அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெற்றுத் திருவிழா நிறைவு பெறும். (ஓ-207)

---

**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

## A/L - 2010 தமிழ்

ஆசிரியர்:
**திரு. சத்தியபாலேந்தன்**
(B.A. (Hons) Tam.SPL,M.Phil.JAFFNA)

காலம் : 17, 18, 22, 28 ஆகிய நாள்களில்
ஆரம்பம் : 17.07.2010 சனி பி.ப. 2 மணி
200 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
குறிப்பு: * இம்முறை வெளிமாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.
* குறிப்பேடுகளும் வழங்கப்படும்.

உங்கள் அனுமதிகளை இன்று 16.07.2010 வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியில் இருந்து பி.ப. 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

---

**திருமறைக் கலாமன்றம்**
**கலைத்தூது அழகியல் கல்லூரி**

**கணனிக் கற்கைநெறி**
**M.S. office (ஒரு மாதம்)**

இரண்டாவது பிரிவு
ஆரம்பம் நாளை (17.07.2010) சனிக்கிழமை

- ★ குளிரூட்டப்பட்ட கணனி ஆய்வு கூடம்.
- ★ கற்கும்போதே கணனி செய்முறை விளக்கமும் வழங்கப்படும். (பகுதி நேரம் அவசியமில்லை)
- ★ சனி, ஞாயிறு தினங்களில் காலை 8 மணி முதல் 10 மணி வரை வகுப்புக்கள் நடைபெறும்.
- ★ ஒரு பிரிவில் 10 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- ★ கற்பித்தல் இலவசம்.

Internet & Email
(ஒருவார கால கற்கை நெறி)
ஆரம்பம் : 19.07.2010 திங்கட்கிழமை
நேரம் : மாலை 4 மணி

மேலதிக விவரங்களுக்கு மன்ற அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

**திருமறைக் கலாமன்றம்,**
**238, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சி/56927)

---

## TVகள் விற்பனை

Sony-Wega 21", 25" (புதியனவும் பாவித்தவையும்) Tvகள், Panasonic அம்பிளிபயர்கள், DTS Sound (1100W, 850W, 500W) Box வகைகள், குளிர்சாதனப் பெட்டிகள், Sony FH-Radio Casste, கொம்பியூட்டர் என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
இ.மகேஸ்வரன் (அப்பன் ஸ்ரோர்ஸ்)
சிவிப்புளியடி (ஆரம்ப பாடசாலை அருகில்),
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
தொ.பே.: 0771393670

---

## சேல்ஸ்மன் தேவை

செல்லமுத்தூஸ் புடைவை மாளிகைக்கு
சேல்ஸ்மன் (ஆண்கள், பெண்கள்) தேவை.

தொடர்பு:
செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை
நெல்லியடி.
தொ.பே.: 226 3238

---

பிரபல கட்டட நிர்மாணத்துறை கம்பனியில்

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் பணிபுரிவதற்கு

**SITE ENGINEER**

தகைமைகள்:
* B.Sc (Civil) அத்துடன் கட்டட நிர்மாணத் துறையில் குறைந்தது 3 வருட அனுபவம்.
or
* NDT அத்துடன் கட்டட நிர்மாணத் துறையில் குறைந்தது 5 வருட அனுபவம்

**TECHNICAL OFFICER / SITE SUPERVISOR**

தகைமைகள்:
NCT(Civil) அத்துடன் கட்டட நிர்மாணத் துறையில் குறைந்தது 5 வருட அனுபவம்

உங்கள் சுயவிவரத்தை கீழுள்ள மின்னஞ்சலுக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும்.

| மின்னஞ்சல் முகவரி: | தொலைபேசி: |
|---|---|
| dwellco@sltnet.lk | 0777224062 |

**DWELLCO (PVT) LTD.**
1090, Sri Jayawardanapura Road, Rajagiriya

---

## யாழ். றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம் அதிதிப் பேச்சாளர் தினம்

**தலைப்பு:** மயக்க மருந்தியல்
**பேச்சாளர்:** Dr.K.ஜீவரட்ணம் [மயக்க மருந்தியல் நிபுணர், நியூசிலாந்து]
**காலம்:** நாளை (17.07.2010) சனிக்கிழமை மாலை 4.30 மணி
**இடம்:** உதயன் கேட்போர் கூடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆர்வமுடைய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம்.**
(இ/569283)

---

வாழ்க வையகம்  வாழ்க வளமுடன்

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்விற்கு மனவளக் கலை யோகா, உடல், உயிர், மனம், அறிவு மற்றும் சமுதாய வாழ்க்கை நலக்கல்வி இலவச அறிமுக உரையும் தொடர்ந்து காயகல்ப்பப் பயிற்சியும்

*யாழ். பிரபல பாடசாலைகளில் பெரும் வரவேற்பைப் பெற்ற மனவளக்கலைப் பயிற்சிகள் முதன்முதலாக சாவகச்சேரி நகரில் இடம்பெற இருக்கின்றது. யாழ். மனவளக்கலை மன்ற ஏற்பாட்டில் இலவச அறிமுக உரையும் அதைத் தொடர்ந்து காயகல்ப்பப் பயிற்சியும் நடைபெறும்.*

I

| | | |
|---|---|---|
| தலைவர் | : | அருள்நிதி த.குழந்தைவேலு அறங்காவலர், இலங்கை மனவளக்கலை மன்றம் |
| இடம் | : | ஐ.டீ.எம். கொம்பியூட்டர் சென்றர் சாவகச்சேரி. |
| காலம் | : | 16.07.2010 வெள்ளிக்கிழமை |
| நேரம் | : | மு.ப. 10.30 மணி |
| விரிவுரை | : | மனவளக்கலை அறிமுகவுரை |
| வழங்குபவர் | : | பேராசிரியர் கே.கணேசன் அவர்கள் (தமிழ்நாடு) |

II

| | | |
|---|---|---|
| இடம் | : | சிவன் கலாசார மண்டபம், ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி. |
| காலம் | : | 17.07.2010 சனிக்கிழமை |
| நேரம் | : | காலை 08 மணி |
| பயிற்சியை வழங்குபவர் | : | பேராசிரியர் கே.கணேசன் அவர்கள் (தமிழ்நாடு) |

*அருள் பேரசான் வேதாத்திரி மகரிஷி அவர்களால் 40 ஆண்டு கால ஆராய்ச்சியின் பின் வடிவமைக்கப்பட்ட கலையே மனவளக் கலை. இக்கலையை அனைவரும் பயின்று பயன்பெறும்படி அன்புடன் அழைக்கின்றோம். இப்பயிற்சியானது ஐ.டீ.எம். கொம்பியூட்டர் சென்ரரின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*அனைவரும் வருக! பயன் பெறுக!*

யாழ்.மனவளக்கலை மன்றம்,
யாழ்ப்பாணம்.
(சி/5692/1)

த.குழந்தைவேலு - 0712208808
எம்.மகேந்திரராஜா - 0773109056

---

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிஜயா கனகம்மா



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.568, 30 ஏக்கர் சந்தி, கல்மடுநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி தம்பிஜயா கனகம்மா கடந்த 13.07.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி தம்பிஜயாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமானந்தம் - சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சுந்தராம்பாள் (கல்மடுநகர்), அமரர் உதயகுமார் (ஸ்கந்தபுரம்), வரதலட்சுமி (கொழும்பு), சரோஜினிதேவி (ஸ்கந்தபுரம்), சிவயோகலட்சுமி (கல்மடுநகர்), மகேந்திர குமார் (ஜேர்மனி), தியானாம்பாள் (ஜேர்மனி), ரஞ்சினிதேவி (கல்மடுநகர்) ஆகியோரின் அன்புத் தாயும், சண்முகம் (கல்மடுநகர்), இராஜேஸ்வரி (வவுனியா), தேவகாந்தன் (கொழும்பு), செந்திலிங்கம் (ஸ்கந்தபுரம்), நாகேஸ்வரன் (கல்மடுநகர்), சக்தி (ஜேர்மனி), திருக்கேதீஸ்வரன் (ஜேர்மனி), நவரத்தினம் (கல்மடுநகர்) ஆகியோரின் அன்பு மாமியும், சசி, விஜி, நவம் (லண்டன்), ஜெயா, வாணி (கனடா), மதன் (கனடா), மதி, சுமன் (கனடா), பிரசன்னா (ஜேர்மனி), விழி, சுகன்யா, கிசாந் (உக்ரேன்), பிரசாந் (சுவிஸ்), ரமணன், ஜெகன், அமரர் கோமதி, கோபி, திபோ, லோஜி, கேதவன், ராஜீ, அமரர் ஆதீஸ், லக்சி, இலக்கியா, ஆதித்தன், ஜேர்மனியைச் சேர்ந்தவர்களான காவியா, விவேகா, தினேஸ், சங்கவி, சஞ்சயன், சயந்தன் மற்றும் தீபா, திலக்சன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், விஜுசா, சானுஜா, ஜதுசன், பானுஜா, சதுசன், பிரமியா, சுதர்சிகா, கிசானுஜன், திலக்கஜன், ஜயிதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.07.2010) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இராமநாதபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.568, 30 ஏக்கர் சந்தி,*
*கல்மடுநகர், இராமநாதபுரம்,*
*கிளிநொச்சி.*
*தொ.பே.: 077 3255542*
(சி/569276)

தகவல்:
குடும்பத்தினர்.

# வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு "லக்ஸபான" மின்விநியோகப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

வவுனியா மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி வரையிலான ''லக்ஸபான'' மின்சார விநியோக வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசத்தை ஒன்றாக இணைப்பதற்கான ஆரம்பத்திட்டமாக இது கொள்ளப்படுகிறது - என மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மின்சார இணைப்பு அதியுயர் மின் அழுத்தக் கம்பிகள் கொண்டு அமைக்கப்படுகிறது.

இந்தத்திட்டம் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஜூலைக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும்-

''லக்ஸபான'' மின்விநியோகம் மூலம் மக்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு அடிக்கடி ஏற்படும் மின்சாரத் தடையும் நீங்கிவிடும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-314)

# நீதிபதி பிறேமசங்கருக்கு தர நிலையில் உயர்வு



யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கர் நீதித்துறை அலுவலர் விசேட வகுப்புக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளார். கடந்த ஜூன் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இத்தரமுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் நீதித்துறையில் தமிழரான நீதிபதி ஒருவர் இத்தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளமை இதுவேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-1)

# யாழ். நகரின் வீதிப் பெயர்ப் பலகைகளில் உள்ள தமிழ்ப் பெயர் எழுத்துக்களை அழிக்கும் விஷமிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாண நகரில் வர்த்தக நிறுவனங்கள் அன்பளிப்புச் செய்து பொருத்தப்படும் வீதிப்பெயர்ப் பலகைகளில் உள்ள தமிழ் எழுத்துக்கள் சில விஷமிகளால் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஒவ்வாத செயலில் ஈடுபடுவோரைக் கண்டுபிடிக்கவும் தண்டிக்கவும் பொதுமக்களும் பொலிஸாரும் செயற்பட வேண்டும்.

நகரின் பல இடங்களில் உள்ள வீதிப் பெயர்களில் தமிழ் எழுத்துக்கள் கடந்த சில நாள்களாகவே அழிக்கப்பட்டு வருகின்றன எனத்தெரியவருகிறது. அனேகமாக இரவு வேளைகளில் இச்செயல் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

உதாரணமாக பாட்லீட் பினான்ஸ் நிறுவனத்தால் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட பெயர்ப் பலகைகளில் உள்ள தமிழ் எழுத்துக்கள் மிகச் சமீப நாள்களில் அழிக்கப்பட்டு வருவதாக அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தாம் சரியாக எழுதி வழங்கிய பெயர்ப் பலகைகளே நேற்றுமுன்தினம் வெளியான உதயனில் பிரசுரிக்கப்பட்டிருந்தன என்றும் -

ஆனால் அவை நடப்பட்ட பின்னர் சில விஷமிகள் தமிழ் எழுத்துக்களை அழித்து வீதிகளின் பெயர்கள் தவறுதலாக உச்சரிக்கப்படும் நிலையைத் தோற்றுவித்திருக்கின்றனர் என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர். (அ)

## யாழ்.இந்துக் கல்லூரியின் தமிழ்த் தின விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த தமிழ் மொழித்தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் க.உஷாந்தன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-323)

# சுகாதாரப் பரிசோதகர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜூலை 16

பொதுச்சுகாதார பரிசோதகர் பயிற்சிநெறிக்கு மேலும் ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை வடக்கு மாகாண சுகாதார அமைச்சு கோரியுள்ளது.

ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து கோரப்பட்டுள்ள இந்தப்பதவிக்கான விண்ணப்பங்கள் தொர்டபாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவதாவது :-

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் உயிரியல் அல்லது இணைந்த கணிதத்தில் திறமைச்சித்தி உட்பட 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 6 பாடங்களுக்குக் குறையாமலும் ஆங்கிலமொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமலும் சிங்கள/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். மேலதிக விவரங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் - என்றுள்ளது. (ஒ-1)

## நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான மாவட்ட ஆங்கிலதினப் போட்டி, திறந்த பிரிவினருக்கான நாடகப்போட்டி நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-86)

# கொக்குவில் இந்து நூற்றாண்டு விழா இன்று இரு அமர்வுகளாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகவுள்ளன.

காலை அமர்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் கலந்துகொள்வார்.

சிறப்பு அதிதிகளாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி சுகிர்தலஷ்மி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்வர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

நூற்றாண்டு மலர் வெளியீடும் இடம்பெறும்.

மாலை அமர்வு கார்த்திகேசு அரங்கில் இடம்பெறும். பழைய மாணவி திருமதி எஸ்.விஸ்வலிங்கம் நினைவுரை ஆற்றுவார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெறும். (ஒ-1-86)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 16

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் நடத்தப்படும் சிறுவர்களுக்கான பாலர் விளையாட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மைதானத்தில் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் க.சிவாஜியும் சிறப்பு விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசாவும் கலந்துகொள்வர்.

பரிசில்களை யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி க.சிவாஜி வழங்குவார். (ஒ-323)

# முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு ஜூலை மாத நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட மக்களுக்கான உலக உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நிவாரண விநியோகத்தின் ஜூலை மாதத்துக்கான உணவுப் பொருள்களுக்கான விநியோகக் கட்டளைகள் இன்று முதல் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நலன்புரி நிலையங்களில் இருந்து சொந்த இடங்களுக்கு விடுவிக்கப்பட்டு ஆறுமாத கால நிவாரணம் பெற்றுக்கொண்டிருப்பவர்களும், ஆறு மாதகால நிவாரணம் பெற்று முடிந்தவர்களில் உறவினர்களுடன் தங்கி வாழும் மக்களுக்கும் மற்றும் 11.08.2006 இதன்பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்குமான ஜூலை மாதத்துக்கான உணவு விநியோக்கத்துக்கான வழங்கல் கட்டளைகள் சகல பல.நோ.கூ. சங்கங்களுக்கும் இன்றுமுதல் வழங்கப்படவுள்ளன.

எனவே ப.நோ.கூ.சங்கங்கள் இன்றே வழங்கல் கட்டளைகளைப் பெற்றக்கொள்ளுமாறும் உடனடியாக விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்து எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் விநியோக நடவடிக்கைகளை முடிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நலன்புரி நிலையங்களில் இருந்து சொந்த இடங்களுக்கு விடுவிக்கப்பட்டு ஆறுமாத கால நிவாரணம் பெற்று முடிவடைந்தவர்களில் தற்போது உறவினர்களுடன் தங்கிவாழும் மக்களுக்கு மேலும் மூன்றுமாதங்கள் (ஜூலை- செப்ரெம்பர்) நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பிரதேச செயலர்களுடன் தொடர்புகொண்டு தமக்குரிய நிவாரண அட்டைகளைப் பெற்று உணவுப் பொருள்களை உரிய ப.நோ.கூ.சங்கங்களில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-16)

## யாழ். முனீஸ்வரன் வீதி அங்காடிக் கடைகள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ். முனீஸ்வரன் வீதியில் அங்காடிக் கடைகள் தொடர்பாகப் பதிவு செய்த அனைவரையும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாநகரசபை மாநாட்டு மண்டபத்துக்கு வருமாறு மாநகர மேயர் யோ.பற்குணராஜா கேட்டுள்ளார். (ஒ-1)

# குப்பைகளை அகற்றாவிடில் நடவடிக்கை

கொழும்பு,ஜூலை 16

குப்பைகளை அகற்றாத உள்ளூராட்சி சபைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மைக் காலங்களில் நாடு முழுவதும் டெங்குநோய் பரவி வருவதைத் தடுக்கும் வகையில் சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இலங்கையில் டெங்கு நோயால் இம்மாதம் மாத்திரம் 147 பேர் உயிரிழந்துள்ளனர். 2 ஆயிரம் பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் பதுளை வைத்தியசாலையில் கடமையாற்றிய பெண் வைத்தியர் ஒருவர் டெங்கு நோயால் இறந்தமை தெரிந்ததே. (சி)

# பொறியியல் மாணவர்கள் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூலை 16

கொழும்பு வார்ட் பிளேஸிலுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்னால் நேற்று உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பயிலும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக வார்ட் பிளேஸில் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதையடுத்து பொலிஸார் இப்பாதையை சில மணித்தியாலங்களுக்கு மூடினர்.

உயர்கல்வி அமைச்சின் கீழுள்ள உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறி பயிலும் மாணவர்கள் விடுதி வசதிகள், மகாபொல புலமைப்பரிசில், விரிவுரையாளர் பற்றாக்குறை ஆகிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இப்பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்கும்படி கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆஸ்திரேலியா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இந்தப் பாடத்திட்டத்துக்கான நிதி உதவி கிடைத்தும் கூட இது வரையில் இன்னும் தீர்வு காணப்படவில்லை. இதனையடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக மாணவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எம்மைப் பேச்சுக்கு அழைத்தது. எனினும் அதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை - என்றும் அவர்கள் தெரிவித்தனர். (சி)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை ரத்து ஏன்? விளக்கி உறுப்பு நாடுகளுக்குக் கடிதம்

கொழும்பு, ஜூலை 16

இலங்கைக்கு வழங்கிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ரத்துச் செய்துள்ளமை தொடர்பான உத்தியோகபூர்வ கடிதங்களை ஐரோப்பிய ஒன்றியம் அதன் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை இழப்பதற்கான காரணங்களும் இக்கடிதத்தில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் கீழ் சுமார் 7,200 பொருட்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. இதன் காரணமாக இலங்கையின் உற்பத்திகளுக்கு அந்நாடுகளில் நல்ல கிராக்கி இருந்தது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டால், இலங்கை உற்பத்திகளுக்கு அந் நாடுகளில் இறக்குமதி வரி விதிக்கப்படும். இதன் காரணமாக இலங்கை உற்பத்திகள் ஏனைய நாடுகளின் உற்பத்திகளுடன் கடுமையாகப் போட்டியிட வேண்டியிருக்கும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நள்ளிரவு முதல் ரத்துச் செய்யப்படுகின்றது.

ஒகஸ்ட் 15 ஆம் திகதி முதல் இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் துணிகள் மற்றும் தைத்த ஆடைகளுக்கு 5.5 சதவீதம் முதல் 9.6 சதவீதம் வரி அறவிடப்படவுள்ளது.

இச்சலுகையை நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் மனித உரிமை மேம்பாடு உட்பட 15 நிபந்தனைகளை விதித்திருந்தது. அரசு இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

இதை அடுத்தே, ஐரோப்பிய ஒன்றியம் இச்சலுகையை ரத்துச் செய்வதாக அறிவித்தது. (சி)

## பேக்கரி உரிமையாளர்கள் ஊழியருக்கான பயிற்சிப் பட்டறை

கொழும்புத்துறை, ஜூலை 16

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர், ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு றக்கா வீதியில் அமைந்துள்ளது புளூவெகன் றோட்டலில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக் கலந்துரையாடலில் பேக்கரித் தொழில் முயற்சியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(50-135)

## அரச வங்கிப் பணம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச் சம்பவத்தையடுத்து களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி சோதனைகளை மேற்கொண்டிருந்தாலும் நேற்று மாலைவரை சந்தேகத்தின் பேரில் எவரும் கைதாகவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (அ-சி)

## யாழ்.ஆஸ்பத்திரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தது. வைத்தியசாலை ஊழியர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் இன்று விசாரணைகள் இடம்பெறும். (ஒ-1-16)

## வடபகுதிக்கான ரயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து பளை வரையான 96 கிலோமீற்றர் தூரத்துக்கான ரயில்பாதையை அமைப்பதற்காக இந்திய நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு நிலக்கண்ணி வெடிகள் தடையாக இருப்பதால் முதலில் ஓமந்தையில் இருந்து மாங்குளம் வரையான 30 கிலோமீற்றர் தூரத்துக்கு நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் ஒருமாத காலத்தினுள் நிலக்கண்ணி வெடிகளை அகற்ற முடியும் எனக் கூறும் இராணுவத் தரப்பு அதற்கான பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தில் பளையில் இருந்து முகமாலை வரையான பகுதியிலும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. - இப்படி ரயில்வேத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார். (ஒ-சி)

## ஜனாதிபதியைக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிவான் ரஷ்மி சிங்கப்பிலி உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள இராணுவ கேர்ணல், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினரை கொலை செய்ய முயற்சித்துள்ளார் என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இவருடன் கைது செய்யப்பட்டுள்ள ராமசாமி பிரபாகரன் குறித்த இராணுவக் கேணலை விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்துள்ளதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினரின் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

குற்றப்புலனாய்வு பிரிவினரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களைக் கருத்திற் கொண்டு குறித்த சந்தேக நபர்களை தடுத்து வைத்து தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரஷ்மி சிங்கப்பிலி உத்தரவிட்டுள் ளார். (அ-சி)

## அமைச்சர் ஹெகலிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருமுறை [illegible]றியிருந்தேன். அந்தக் கருத்தை உறுதிப்படுத்தக் கூடியவாறுதான் ஜனாதிபதி செயற்படுகிறார்.

ஜனாதிபதி கூறியது.....

பல இடங்களில் ஜனாதிபதி உரையாற்றும் போதும் பாதுகாப்பு வலயங்கள்நாட்டில் தொடர்ந்து இருக்க முடியாது என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

அமைச்சரவையில் நான் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றேன். அந்தவகையில் இன்றைக்கு(அதாவது நேற்று) எந்தவிதமான அமைச்சரவைக் கூட்டங்களும் இடம்பெறவில்லை. நேற்றுதான் (நேற்று முன்தினம்) கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. ஆனால், அங்கு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்து தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை.

நாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு வருகின்றன. கொழும்பில் கூட யுத்தகாலப்பகுதியில் மூடப்பட்டிருந்த- உயர்பாதுகாப்பு வலயங்களாக கருதப்பட்ட முக்கிய இடங்கள் தற்போது திறந்துவிடப் பட்டுள்ளன. அதேபோல்தான் வடக்கிலும் பல இடங்கள் மக்களின் நடமாட்டங்களுக்காக திறந்துவிடப்பட்டுள் ளன.

யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயங்களாக கருதப்பட்ட இடங்கள் நாளை அல்லது நாளைமறுதினம் மக்களின் பாவனைக்காக விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேமாதிரி உயர்பாதுகாப்பு வலயங்கள் நாளடைவில் இல்லாமல் போய்விடும்.- இப்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (அ-சி)

## இந்து சமுத்திரத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல் மட்டம் உயர்வு காரணமாக உலகின் வெப்பநிலை மாறக்கூடும். அத்துடன், சூழல் சுற்றோட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் கடல்மட்ட உயர்வு காரணமாக, பருவப்பெயர்ச்சி காலநிலையிலும் மாற்றங்கள் நிகழும் எனத் தெரிவித்துள்ள ஆய்வாளர்கள், வெள்ளம் ஏற்பட்டு வீடுகளுக்கும், உடைமைகளுக்கும் ஆபத்து நேரலாம் என எச்சரித்துள்ளனர்.

எனவே இத்தகைய ஆபத்துகளுக்கு எதிராக திட்டங்கள் எதிர்காலத்தில் வகுக்கப்படவேண்டும் என ஆய்வாளர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.(அ-சி)

## பாதுகாப்பு வலயக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவேண்டும். அந்தப் பாதுகாப்பு வலயங்களுக்குள் மக்களின் காணிகள் இருந்தாலும் கூட அந்தக் காணிகள் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டா. அத்தகையோருக்கு வேறு இடங்களில் காணி வழங்கப்படும்.

மீள்குடியேற்றம் துரித கதியில்

தற்போது மீள்குடியேற்றம் துரிதமாக இடம்பெறுகின்றது. சில மக்கள் அவர்களின் சொந்தக் காணிகளில் அல்லாது வேறு காணிகளில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். 10 முதல் 15 வீதமான மக்களே இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். அது விரைவில் தீர்க்கப்படும்.

ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது யுத்தம் முடிந்து இந்தக் குறுகிய காலப்பகுதிக்குள் பெரும் எண்ணிக்கையிலான மக்களை மீள்குடியேற்ற முடிந்தமை ஒரு பெரும் சாதனையாகும்.

கண்ணிவெடிகள் துரிதமாக அகற்றப்பட்டுக்கொண்டு வருகின்றன. வன்னியில் சுமார் 15 லட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் இதுவரை 2 லட்சத்து 68ஆயிரம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டன. இதற்காக அரசு 88ஆயிரம் கோடி ரூபாவைச் செலவு செய்துள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றுவதில் எமது படையினர் மிகவும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். துரிதமாக மீள்குடியமர்த்தப்படவில்லை என்று சிலர் அரசு மீது குற்றஞ்சாட்டுகின்றனர். அந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பயந்து அவசரப்பட்டு மீள்குடியமர்த்தி மக்களுக்கு கண்ணிவெடிகளால் உயிர்ச்சேதம் ஏற்பட்டால் அதற்கும் அரசு மீதே குற்றம் சுமத்தப்படும்.

இன்னும் சொற்ப எண்ணிக்கையிலான மக்களே மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். கண்ணிவெடிகள் அகற்றி முடிக்கப்பட்டதும் அவர்கள் விரைவில் குடியமர்த்தப்படுவர். - என்றார். (அ-சி)

## இலங்கைக்கான ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்படலாம். - இப்படி ஐ.தே. கட்சியின் பிரதிச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி. நேற்றுக் கவலை தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உலக சுகாதார ஸ்தாபனம் யுனிசெப், யூ.என்.எச்.சீ.ஆர்., ஐ.ஒ.எம். ஆகியன இலங்கை மக்களின் நலனுக்குப் மிகப் பெரிய சேவைகளைச் செய்துவருகின்றன. ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதியை நியமிப்பதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதால், மேற்படி ஸ்தாபனங்களின் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படலாம்.

ஐ.நா. சபையின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதியாக கடமையாற்றிய நீல் புஹுனே, வீரவன்ஸவின் உண்ணாவிரதத்தை அடுத்து, நியூயோர்க் நகருக்குத் திருப்பி அழைக்கப்பட்டார். இதுகுறித்து ஐ.நா. பேச்சாளரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, நீல் புஹுனே நியூயோர்க் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். இலங்கைக்குப் புதிய நிரந்தர பிரதிநிதி நியமிப்பது குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை' எனத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. அலுவலகத்துக்கு எதுவித பாதிப்பும் ஏற்படுத்தக்கூடாது என்ற ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது. இப்படியிருக்க அரச அமைச்சரொருவர் ஐ.நா. அலுவலகத்தை சுற்றிவளைத்து அங்குள்ள ஊழியர்களைச் சிறை வைக்க முடியுமா?

இந்த தேவையற்ற நாடகத்தால் எமது நாட்டுக்கே பெரும் பாதிப்பு. அகதிகளின் மீள்குடியேற்றம், தொற்றுநோய் பரவுதலைக் கட்டுப்படுத்துவது, எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பது, சிறுவர் நலன் போன்ற விடயங்களில் மேற்படி ஸ்தாபனங்கள் பெருமளவு இலங்கைக்கு உதவி வந்துள்ளன. இவை அனைத்தும் இப்போது கேள்விக் குறியாகியுள்ளன. இதற்கு அரசு பொறுப்புக்கூறவேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## 17 ஆவது அரசமைப்புத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவி, தேர்தல் முறை, 17ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பாகவே அரசு - ஐ.தே.க. பேச்சு இடம்பெறுகிறது.

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் முக்கிய பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்து விடும். 17ஆவது திருத்தத்துக்கு சில திருத்தங்கள் தேவை என அரசு தெரிவிக்கின்றது. டியூ குணசேகரவின் குழு இது தொடர்பாக ஆராய்ந்தது. ஆனால் அந்தக் குழு கலைக்கப்பட்டு விட்டது.

அப்படியான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமானால் ஐ.தே.கட்சி குழு ஒத்துழைப்பு வழங்கும்.

வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்துள்ளது. மக்கள் இதைச் சமாளிக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அரசு மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகப் பல்வேறு நாடகங்களை அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றது.

ஐந்து பேரைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு நாளாந்தம் ஆயிரம் ரூபா தேவை என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்நாட்டில் 50 சதவீதமான நடுத்தர மக்கள் 15 ஆயிரம் ரூபாவுக்கு குறைவான தொகையையே மாதாந்த வருமானமாகப் பெறுகின்றனர். எஞ்சியவர்களில் பெரும்பாலானோர் நான்காயிரம் முதல் ஆறாயிரம் அல்லது ஏழாயிரம் ரூபாவையே வருமானமாகப் பெறுகின்றனர். இந்த நிலையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செல வைச் சமாளிப்பது எப்படி எனத் தெரியாமல் மக்கள் தத்தளிக்கின்றனர்.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகள், நுரைச்சோலை நிர்மாணப் பணிகளில் சீனத் தொழிலாளர்களே கடமையாற்றுகின்றனர். இதனால் இத்திட்டங்களால் அப்பகுதி மக்கள் பயனடையவில்லை.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)


### வேலையாள்கள் தேவை

யாழ். நகரின் மத்தியில் இயங்கவிருக்கும் ரெஸ்ரோரன்ட் ஒன்றுக்கு உணவு பரிமாறுபவர்கள், சுத்திகரிப்பாளர்கள் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிகநேரக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

தொடர்பு : 0776081701

பிற்பகல் 4 மணிக்குப் பின் கீழ்வரும் விலாசத்தில் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.

இல.205, ராஜா தியேட்டர் கொம்ப்ளக்ஸ்,
முதலாம் மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(100670)

### Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஒக்ரோபர் மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகின்றன.
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

### வாடகைக்குத் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு அல்லது களஞ்சியம் உடன் வாடகைக்குத் தேவை

தொடர்பு: 077 3583879

### வடமாகாண காணி நிர்வாக வெளிக்கள போதனாசிரியர் விசேட இறுதிக் கருத்தரங்கு

* இன்று பி.ப. 1 - 5 மணிவரை கடந்தகால வினாத்தாளும், விடயங்களும் ஆராயப்படும்.
* கட்டணம் ரூபா 200/-
* யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு (யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே)
* விசேட வழிகாட்டி ரூ 100இற்கு இங்குமட்டும் பெற்றுக்கொள்ளலாம்.

### மிருசுவில் படித்த மகளிர் திட்டம் - "துர்க்காபுரம்" ஸ்ரீஞானதுர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம்-2010



ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!

விகிர்தி வருட அலங்கார உற்சவம் ஆடி மாதம் முதலாம் நாள் நாளை (17.07.2010) சனிக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 10ஆம் நாள் 25.07.2010 திங்கட்கிழமை இறுதிநாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெற உள்ளது.

9ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் அனைவரும் பங்குகொண்டு எல்லாம் வல்ல ஞானதுர்க்கை அம்மனின் பாதார விந்தத்தினைத் தொழுது இஷ்ட சித்திகளையும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கிறோம்.

"இறைபணியே இன்பப்பணி"

இங்ஙனம்,
ஆலய தர்மகர்த்தா,
சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா.

(100611)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.